விலை: 30.00
பக்கங்கள் :இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

Now in JAFFNA
Dip/HND in Business Management
Leading to BBA Hons
BLC CAMPUS
0777 174 443
4th Lane, Brown Road, Jaffna.
T - 021 493 5555, 021 493 6666
E - info@blccampus.edu.lk
www.blccampus.edu.lk (C-6697)

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 ஆனி 12 வியாழக்கிழமை (27.06.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 190

## தெரிவுக்குழுவின் இறுதி அறிக்கை

### அடுத்தமாதம் நிறைவு

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறன்று மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாத தாக்குதல் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட பாராளு 24

## ரிஷாத்திடம் நேற்று விசாரணை இல்லை


(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் சாட்சியம் வழங்குவதற்காக நேற்றையதினம் பாராளுமன்ற தெரிவுக்குழு முன்னிலையில் ஆஜராகினார்.

எனினும் நேற்றைய தினம் அவரிடம் விசாரணை 24

### அச்சுறுத்தல் முழுமையாக நீங்கவில்லை

# பயங்கரவாத தாக்குதல் மீண்டும் நடக்கலாம்



### தெரிவுக்குழு முன் இராணுவத்தளபதி சாட்சி

(கொழும்பு)

தாக்குதல்தாரிகள் கொல்லப்பட்டதனாலோ அல்லது பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதனாலோ பயங்கரவாத செயற்பாடுகள் முற்று முழுதாக முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது என கூறமுடியாது. இனியும் தாக்குதல்கள் நடக்கலாம் ஏனெனில் நாம் கண்ணுக்கு தெரியாத எதிரியுடனேயே யுத்தம் செய்து கொண்டுள்ளோம் என இராணுவ தளபதி லெப்.ஜெனரல் மகேஷ் சேனநாயக்க தெரிவித்தார். (23ஆம் பக்கம் பார்க்க)

## சஹ்ரான் மனைவியிடம் மூடிய அறைக்குள் நீதிமன்றில் விசாரணை

### பணக்கொடுக்கல் வாங்கல், தாக்குதல்கள் தொடர்பில் பல தகவல்கள் வெளியீடு



(கல்முனை)

இலங்கையில் இடம்பெற்ற ஈஸ்டர்தின பயங்கரவாதத் தாக்குதலின் சூத்திரதாரியான சஹ்ரான் ஹாஷிமின் மனைவி பாத்திமா ஹாதியா, வழக்கு விசாரைணைக்காக கல்முனை நீதவான் 23

## அரசுடன் இணைந்தாலே தமிழ் பிரதேசங்களை அபிவிருத்தி செய்யமுடியும் - அடைக்கலநாதன்



(பனிக்கன்குளம்)

தமிழ்ப் பிரதேசங்களை அபிவிருத்தியடைச் செய்ய வேண்டுமெனில், அரசாங்கத்துடன் இணக்கத்துடன் செயற்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரி 23

## ஜனாதிபதி மைத்திரியின் மரணதண்டனை தீர்மானத்திற்கு

### ஐ.தே.க. கடும் எதிர்ப்பு



(கொழும்பு)

மரணதண்டனை விதிப்பதற்கு ஐக்கிய தேசிய கட்சி என்ற வகையிலும் அரசாங்கம் என்ற வகையிலும் ஆதரவு தெரிவிக்கப்போவதில்லை என பாராளுமன்ற 23

## குற்றவாளிகளை பாதுகாக்கும் புலனாய்வு பிரிவு

(கொழும்பு)

புலனாய்வுப் பிரிவினர் குற்றவாளிகளை பாதுகாக்கின்றனர் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். நேற்றைய தினம் கொழும்பில் 23

## அழுத்தம் எதனையும் ரிஷாத் தரவில்லை

### இராணுவத்தளபதி

கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்கும்படி முன்னாள் அமைச்சர்ரிஷாத் பதியுதீன் தனக்கு ஒரு போதும் எவ்வித அழுத்தமும் கொடுக்கவில்லை என்று இராணுவத்தளதி லெப்டினல் ஜெனரல் சேனாநாயக்க கூறியுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்யும் பாராளுமன்ற தெரிவுக்குழு முன்னிலையில் நேற்று ஆஜராகி சாட்சியமளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார். (ம)

## கல்முனை தமிழ்பிரதேச செயலக விவகாரம்

### ஒரு மாதத்தில் தீர்வு அமைச்சரவையில் தீர்மானம்

(கொழும்பு)

கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தை முழு அதிகாரம் கொண்ட பிரதேச செயலகமாக தரமுயர்த்துவது தொடர்பான பிரச்சினைகளை ஒருமாத காலத்துக்குள் தீர்த்து வைக்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது. 16

### பாராளுமன்ற தெரிவுக்குழுவின் முன்

## ஜனாதிபதி முன்னிலையாக தவறின் சட்ட நடவடிக்கை எடுக்க முடியும்

### எம்.ஏ.சுமந்திரன் தெரிவிப்பு



(கொழும்பு)

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்கள் குறித்து விசாரணைகளை முன்னெடுக்கும் பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு ஜனாதிபதியை அழைத்தால், அவர் நிச்சயமாக 24

## போதை குற்றவாளிகள் 4 பேரை தூக்கில் போட

### கையெழுத்திட்டுள்ளேன் - ஜனாதிபதி

(கொழும்பு)

போதைப் பொருள் குற்றங்கள் தொடர்பாக தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட 4 பேரை தூக்கிடுவதற்கான ஆணையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கையெழுத்திட்டுள்ளார். நேற்று காலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதனை ஊடகவியலாளர்களிடம் உறுதிப் 23

### முஸ்லிம்களின் நல்லுறவுக்காக

## நாங்கள் மாத்திரம் தொடர்ந்து விட்டுக்கொடுக்க முடியாது

### சித்தார்த்தன் எம்.பி. தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கல்முனையில் தனியாக தமிழ்ப் பிரதேச செயலகம் உருவாகுவதால் முஸ்லிம் சமூகத்திற்கு எந்தப் பாதிப்பும் இல்லை. ஆனாலும் அவர்கள் அதற்குத் தடையை ஏற்படுத்தி வருகின்றனர். 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சவால்களுக்கு அஞ்சி போதைக்கு எதிரான போராட்டத்தை கைவிடப் போவதில்லை

## ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு



(கொழும்பு)

பல்வேறு குற்றச்சாட்டுக்களையும் எதிர்ப்புக்களையும் முன்வைத்து தன்னை குற்றவாளியாக அடையாளப்படுத்துவதற்கு எத்தகைய முயற்சிகளை முன்னெடுத்தாலும் நாட்டின் நலனுக்காக முன்னெடுக்கப்பட வேண்டிய நற்செயல்களிலிருந்து பின்வாங்கப் போவதில்லை என ஜனாதிபதி தெரிவித்தார்.

போதைப்பொருள் அச்சுறுத்தலில் இருந்து நாட்டையும் பிள்ளைகளையும் பாதுகாக்கும் கடமையை நிச்சயமாக நிறைவேற்றுவதாகவும் சவால்களுக்கு அஞ்சி போதைப்பொருளுக்கு எதிரான போராட்டத்தை கைவிடப் போவதில்லை எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

போதைப்பொருள் பாவனை மற்றும் சட்டவிரோத போதைப்பொருள் கடத்தலுக்கு எதிரான சர்வதேச தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டதுடன், அதனை முன்னிட்டு நேற்று முற்பகல் கொலன்னாவ ரஜமகா விகாரையில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த 23ஆம் திகதி முதல் ஜூலை மாதம் 01ஆம் திகதி வரை தேசிய போதைப்பொருள் ஒழிப்பு வாரமாக ஜனாதிபதியால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதுடன், அதன் மூன்றாவது தினமாகிய நேற்று நாடளாவிய ரீதியில் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி, சட்டவிரோத போதைப்பொருள் கடத்தலை ஒழிப்பதற்கு தான் கடந்த நான்கு வருடங்களாக விசேட நிகழ்ச்சித்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தியதாகவும் அதனூடாக வெற்றிகரமான பிரதிபலன்கள் நாட்டுக்கு கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் தெரிவித்தார்.

ஆட்சியை உருவாக்குவதற்கும் ஆட்சியை கவிழ்ப்பதற்குமான திறன் போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு உள்ளதாகவும் போதைப்பொருளுக்கு எதிராக செயற்படும் நபர்களை இல்லாதொழிப்பதற்கான வலு தன்னிடம் இருப்பதாக தெரிவித்த, ஜனாதிபதி, விசாரணைகளின் ஊடாக எந்த தகவல்களை வெளிக்கொண்டு வந்தாலும், ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி நாட்டில் மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதல், போதைப்பொருள் எதிர்ப்பு செயற்பாடுகளுக்கு எதிராக தொடுக்கப்பட்ட தாக்குதலாகவே கருத முடியுமென்றும் தெரிவித்தார். (ம)

# ரணிலை பிரதமராக நியமித்ததே ஜனாதிபதி செய்த முதல் தவறு

## டலஸ் அழகப்பெரும தெரிவிப்பு



நாடு ஸ்திரத்தன்மையற்றதற்கு அரசியலமைப்பின் 19வது திருத்தம் மாத்திரம் காரணமல்ல. பாராளுமன்றத்தில் மூன்றில் ஒரு பெரும்பான்மை கூட ஆதரவு கிடைக்காத ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக நியமித்தமையே முறையற்ற அரசாங்கத்தை தோற்றுவித்தது.

இதுவே அனைத்து பிரச்சினைகளுக்கும் மூல காரணம். தவறுகளை திருத்திக் கொள்ள ஜனாதிபதிக்கு இன்னும் காலம் கிடைக்கவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

எதிர்க்கட்சி தலைவர் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஒரு தலைமைத்துவத்தின் கீழ் அரசாங்கம் செயற்படாமல் அரசியல் நெருக்கடிகள் ஏற்படுவதற்கு அரசியலமைப்பின் 19வது திருத்தம் பிரதான காரணம் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தற்போது குறிப்பிட்டுள்ளமை பல மாறுபட்ட கருத்துக்களை தோற்றுவித்துள்ளது.

கடந்த நான்கு வருட காலமாக நாட்டில் ஏற்பட்ட அனைத்து அரசியல் மற்றும் சமூக பிரச்சினைகளுக்கும் ஜனாதிபதியும் பொறுப்பு கூற வேண்டும்.

அரசியல் ஸ்திரத்தன்மை மற்றும் அரசியல் நெருக்கடிகளுக்கு ஜனாதிபதி 19வது திருத்தத்தை மாத்திரம் குற்றஞ்சாட்ட முடியாது.

பாராளுமன்றத்தில் மூன்றில் ஒரு பெரும்பான்மை ஆதரவு இல்லாத ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக்கியமை ஜனாதிபதி அரசியல் ரீதியில் முன்னெடுத்த முதல் தவறாகும் என அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# மழலைகள் விளையாட்டு விழா

வரணி ரட்ணா முன்பள்ளியின் மழலைகள் விளையாட்டு விழா எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் முன்பள்ளி ஆசிரியர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் சி.பிரபாகரன், தென்மராட்சி பனை தென்னை வள அபிவிருத்தி சங்கங்களின் வரணி கொத்தணி முகாமையாளர் க.அருட்செல்வன், நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தியாலய அதிபர் திருமதி க.கபரியேற்பிள்ளை, தென்மராட்சி முன்பள்ளிகளின் இணைப்பாளர் செல்வி ரு.தர்மிளா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (ம)

# மட்டக்களப்பில் பேருந்துடன் மோ.சைக்கிள் விபத்து

## இளைஞன் உயிரிழப்பு

மட்டக்களப்பு சந்திவெளி பிரதேசத்தில் நேற்று மாலை நடந்த வாகன விபத்தில் இளைஞர் உயிரிழந்துள்ளார்.

திருகோணமலையில் இருந்து அக்கரைப்பற்று நோக்கி சென்ற தனியார் பேருந்தில் மோட்டார் சைக்கிள் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த 18 வயதான இளைஞரே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த நபருடன் மோட்டார் சைக்கிளில் சென்ற 16 வயதானமற்றொரு இளைஞன் படுகாயமடைந்த நிலையில், மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்த மற்றும் காயமடைந்த இளைஞர்கள் சந்திவெளி பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என பொலிஸார் கூறியுள்ளனர். (ம-3)


### பெயர்மாற்ற அறிவித்தல்

கோயில் வீதி, யாழ்ப்பாணத்தில் வசிக்கும் பவுலினா வைலற் ஆகிய எனது பெயரை இன்று முதல் **பொலின் வயலற்** என மாற்றம் செய்ய உள்ளதை இத்தால் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத் தருவதுடன் இன்றிலிருந்து சகல ஆவணங்களிலும் பொலின் வயலற் என கையொப்பம் இடுவேன் என்பதை அறியத் தருகின்றேன்.

உண்மையுள்ள

(9322) **பொலின் வயலற்**

பழமை வாய்ந்த

### ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்



- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்ய முடியும்
- கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம்
சகல காரியங்களும் வசிய முறைப்படி செய்து தரப்படும்.
(பின் விளைவுகள் எதுவும் ஏற்படாது) மூன்று பொழுதில் பலன்.

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால் பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

**ரெங்கசாமி**
கண்டி, அம்பத்தன்ன -077 939 5222
Viber:076 466 4153.

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்


# அறிவித்தல்

**வடமராட்சிக் கிழக்கு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ.து)**
**மருதங்கேணி தெற்கு, தாளையடி**
**கிளைக்குழுக்களை தெரிவு செய்தல் - 29.06.2019**

மேற்படி சங்கத்தின் துணை விதி பிரிவு 20.02இன் படி ஆக்கப்பட்டு அறிவிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கு அமைய பின்வரும் கிளைகளில் கிளைக்குழுக்களை தெரிவு செய்வதற்காக இக்கிளைகளின் பொதுச்சபைக் கூட்டங்கள் மேற்படி ஒழுங்கு விதிகளின் பந்தி 09ற்கு அமைய கீழ்க்குறிப்பிடப்படும் கால அட்டவணைப்படி நடைபெறும் என வட மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது என்பதை எல்லா உறுப்பினர்களுக்கும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

01. கிளைப் பொதுச்சபைக் கூட்டம் ஆரம்பம் 29.06.2019 சனிக்கிழமை மு.ப 10.00 மணிக்கு
02. கூட்டம் நடைபெறும் இடங்கள் விபரம் கீழ் வருமாறு

| தொ.இ | கி.இல | கிளையின் பெயர் | தவிசாளர் பெயர் | கிளைக்குழு கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|
| 01 | 177 | மணற்காடு | திரு.ச.முகுந்தவேள் | பொதுநோக்கு மண்டபம், குடத்தனை மேற்கு |
| 02 | 178 | குடத்தனை | திரு.பா.பாலவரதன் | பொதுநோக்கு மண்டபம் குடத்தனை கிழக்கு |
| 03 | 180 | அம்பன் | திரு.சோ.தங்கேஸ்வரன் | அம்பன் நூலகம், சிவனொளி முன்பள்ளி |
| 04 | 183 | மாமுனை | திரு.செ.நிமலரூபன் | மாமுனை கடற்றொழிலாளர், பொது நோக்கு மண்டபம் |
| 05 | 184 | செம்பியன்பற்று | திரு.க.செந்தூரன் | பொதுநோக்கு மண்டபம் செம்பியன்பற்று தெற்கு |
| 06 | 185 | மருதங்கேணி | திரு.நா.குமணதாஸ் | சங்கத் தலைமைக் காரியாலயம் |
| 07 | 186 | உடுத்துறை (கிளை ஆழியவளை) | திரு.நா.ஜெயவதனன் | புதிதாக அமைக்கப்பட்ட கிளை உடுத்துறை |
| 08 | 187 | ஆழியவளை/ வெற்றிலைக்கேணி | திரு.வ.நிதர்சன் | ஆழியவளை கடற்றொழிலாளர் பொதுநோக்கு மண்டபம் |
| 09 | 188 | நித்தியவெட்டை | திரு.த.பிரபாகரன் | நித்தியவெட்டை முன்பள்ளி |
| 10 | 189 | கேவில் | திரு.க.சஜேந்திரன் | கேவில், பொதுநோக்கு மண்டபம் |
| 11 | 190/191 | சுண்டிக்குளம்/ புல்மைனத்தொடுவாய் | திரு.ம.கபிலன் | கேவில், பொதுநோக்கு மண்டபம் |

**முக்கிய கவனத்திற்கு**

1. கூட்டுறவு சட்டத்திற்கு அமைவாக தகுதிபெற்ற உறுப்பினர்களுக்கு மட்டும் கூட்ட அறிவித்தல் தவிசாளராக கடமையாற்ற கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் அவர்களால் பெயர் குறித்துரைக்கப்படும் அலுவலரினால் அனுப்பப்படும்.
2. உறுப்பினராக சேர்ந்த திகதியிலிருந்து ஓராண்டு காலத்தை பூர்த்தி செய்தவரும் ஒரு பங்கின் முழுப்பெறுமதியான ரூபா 100.00ஐ செலுத்தி முடித்தவருமான உறுப்பினர் ஒருவரே மேற்குறித்த தகுதிபெற்ற உறுப்பினராவார்.
3. கிளைப் பொதுச்சபைக் கூட்டத்திற்கான நிறைவெண் கூட்டத்திற்கு சமூகமளித்த வாக்களிக்கத் தகைமையுள்ள உறுப்பினர்களின் 1/4 பங்கினர் அல்லது 25 பேர் அதில் எது குறைவோ அவ் எண்ணிக்கை ஆகும்.
4. கிளைப் பொதுச்சபைக் கூட்டத்திற்கு சமுகமளிக்கும் உறுப்பினர் மத்தியிலிருந்து எட்டு (08) பேரும் மகளிர் குழுவிலிருந்து ஒருவருமாக (01) மொத்தம் ஒன்பது (09) உறுப்பினர்கள் கிளைக்குழுவுக்கு தெரிவு செய்யப்படுவர். இவர்களில் குறைந்தது இருவராவது 18 - 35 வயதிற்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
5. கிளைப் பொதுச்சபைக் கூட்டத்திற்கான நிறைவெண் இல்லாதவிடத்தும் கிளைக்குழுத் தெரிவிற்காக ஐந்திற்கும் (5) குறைவாக நியமனங்கள் செய்யப்பட்ட விடத்தும் கிளைக்குழு உறுப்பினர் தெரிவு நடைபெறாது கூட்டம் கலையும். எனவே மேற்குறித்த திகதியில் வாக்களிக்கத் தகுதியுள்ள சகல அங்கத்தவர்களையும் பொதுச்சபைக் கூட்டத்தில் சமுகமளித்து கூட்டம் நடைபெற ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக் கொள்கிறேன். (C-6785)

ந.மயூரன், கௌரவ செயலாளர்,
21.06.2019 வடமராட்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் - மருதங்கேணி (வ.து)

# தெரிவுக்குழுவில் முன்னிலையாக மாட்டேன் அது அரசியல் நாடகம்-ஜனாதிபதி தெரிவிப்பு

தாக்குதல்கள் குறித்து ஆராயும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் சாட்சியம் வழங்குவதற்கு தனக்கு அழைப்பு விடுக்கப்பட்டால், தான் முன்னிலையாக மாட்டேன் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதிரடி அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

நேற்று இடம்பெற்ற ஊடகப் பிரதானிகள் உடனான சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.



மேலும் தெரிவுக்குழுவென்பது அரசியல் நாடகம் என தெரிவித்த அவர், அதை தற்போது அலரிமாளிகையில் நடித்துப் பழகுவதாகவும் மறுநாள் அதனை நாடாளுமன்றத்தில் நடித்துக்காட்டுகின்றனரென்றும் ஜனாதிபதி இதன்போது குற்றம்சுமத்தியுள்ளார்.

மேலும் அரசியல் அமைப்பிற்கும் உயர்நீதிமன்றத்திற்கும் எதிராகவே தெரிவுக்குழு செயற்படுகிறதென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஈஸ்டர் தாக்குதல்கள் குறித்து ஆராயும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் சாட்சியம் வழங்குவதற்காக ஜனாதிபதியும் அழைக்கப்படுவாரென தெரிவுக்குழுவின் உறுப்பினர்கள் தெரிவித்திருந்தனர்.

குறிப்பாக அந்தக் குழுவின் உறுப்பினர்களில் ஒருவரான சரத் பொன்சேகா, ஜனாதிபதியை அழைப்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டு வருவதாகத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (9)

## ஹக்கீமிடம் விசாரணை நடத்த வேண்டும்

### எஸ்.பீ.திஸாநாயக்க


உயிர்த்த ஞாயிறு தாக்குதலை ஐ.எஸ். அமைப்பு நடத்தவில்லை என முன்னாள் அமைச்சர் ரவூப் ஹக்கீம் கூறியுள்ளமை சம்பந்தமாக பாதுகாப்பு தரப்பினர் அவரிடம் விசாரணைகளை நடத்த வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடத்திய தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்புக்கு ஐ.எஸ். அமைப்புடன் தொடர்பு இருந்தமைக்கான தெளிவான சாட்சியங்கள் சர்வதேச ரீதியில் இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

அவர் தெரிவித்துள்ளமைக்கு அமைய தற்போது கூறப்படும் விடயங்களை விட அவருக்கு ஏதோ ஒன்று தெரிந்துள்ளது என்பது எமக்கு தெளிவாகியுள்ளது. எனவே பாதுகாப்பு தரப்பினரிடம் அவரிடம் விசாரணை நடத்தி, அது குறித்து அறிந்து கொள்வது சிறந்தது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.(9)

## ஓரிருவரை கைது செய்ததால் முழு புலனாய்வு பிரிவும் சரிந்துவிடாது - இராணுவத் தளபதி

புலனாய்வு பிரிவைச் சேர்ந்த ஓரிருவரை கைது செய்தமையால் முழு புலனாய்வு பிரிவும் சரிந்துவிட்டது என்று சொல்ல முடியாது என இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் மகேஷ் சேனநாயக்க தெரிவித்துள்ளார்.



ஈஸ்டர் தாக்குதல்கள் குறித்து விசாரணை செய்யும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் நேற்று முன்னிலையாகி சாட்சியம் வழங்கியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும் யுத்தகாலத்தில் புலனாய்வு பிரிவைச் சேர்ந்த பலர் மரணித்திருக்கிறார்கள். அவர்களின் மரணம் படைத்தரப்பை சரிவடைய செய்யவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனை அடுத்து நாடாளுமன்ற தெரிவுக்குழு உறுப்பினர் சரத் பொன்சேகா, பாதுகாப்பு கட்டமைப்புக்களை மறுசீரமைக்க எவ்வளவு காலம் எடுக்கும் என வினா தொடுத்தார்.

இதற்கு குறுக்கிட்ட அமைச்சர் ரவி கருணாநாயக்க, இது மிக முக்கியமான கேள்வி என்பதனால் ஊடகங்கள் இல்லாமல் விசாரிக்க வேண்டும் என அறிவுறுத்தினார். இதன் பின்னர் 10 நிமிடங்கள் விசாரணை தள்ளிவைக்கப்பட்டு, ஊடகங்கள் வெளியேற்றப்பட்டன. (9)

## மின்சார அலகொன்றின் விலை அதிகரிப்புக்கு மின்சாரத்தை பயன்படுத்துவோர் சங்கம் எதிர்ப்பு

இலங்கை மின்சாரசபையின் பத்தாயிரம் ரூபா இழப்பை ஈடு செய்வதற்காக மின்சார அலகு ஒன்றை 7 ரூபாவால் அதிகரிக்கும் மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சின் திட்டம் முறியடிக்கப்படும் என மின்சாரத்தை பயன்படுத்துவோர் சங்கம் தெரிவித்தது.

ஜனநாயக முன்னணியின் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது கருத்து தெரிவித்த மின்சாரத்தை பயன்படுத்துவோர் சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர் கே.எச். சஞ்சீவ தம்மிக்க,

இலங்கை மின்சாரசபை பத்தாயிரம் ரூபா இழப்பை சந்தித்து வருவதாக மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது. இந்த இழப்பை ஈடு செய்வதற்காக மின்சார கட்டணத்தை ஒரு அலகுக்கு சுமார் ரூ 10 ரூபா வரை அதிகரிக்க வேண்டும். அதற்கான முயற்சிகளையே மின்சாரத்துறை அமைச்சு மேற்கொண்டு வருகிறது.

2016 ஆம் ஆண்டிலிருந்து அதிக விலைக்கு மின்சாரத்தை கொள்வனவு செய்தமை காரணமாகவே மின்சாரசபை இந்த இழப்பைச் சந்தித்துள்ளது. தனியார் துறையினரிடமிருந்து 40 ரூபா என்ற அதிக விலைக்கு மின்சாரம் வாங்கியதால் மின்சார சபைக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது என்பது அனைவரும் அறிந்த விடயமே.

இலங்கை மின்சார சட்டத்தின்படி,மின்சாரம் வாங்கும் போது டென்டர் நடைமுறை பின்பற்றப்பட வேண்டும். ஆனால் முறைப்படி செயற்படாமல் தன்னிச்சையாக செயற்பட்டு வருகின்றது. ஊழல் மோசடி தொடர்பாக நாம் வெளிப்படையாகவே இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்துள்ளோம்.

இவ்வாறாக மின்சாரக் கட்டணத்தில் அதிகரிப்பு ஏற்படுமாயின் மின்சாரப் பாவனையாளர்கள் பாரிய நெருக்கடியைச் சந்திக்க நேரிடும். இது தொடர்பில் மின்சார பாவனையாளர்களை தெளிவுபடுத்த வேண்டியமை அவசியமாகும். இதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

இலங்கை மின்சார சபை 100 மெகாவோல்ட் மின்சாரப் பற்றாக்குறையை சந்தித்துள்ளதாக மின்வலுத்துறை அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்திருந்தார். இந்த நிலையில், துருக்கிநாட்டு கப்பலிலிருந்து மின்சாரத்தை கொள்வனவு செய்வதற்கான விலைமனு கோரப்பட்டதையடுத்து, தற்போது 200 மெகாவோல்ட் மின்சார தட்டுப்பாடு நிலவுவதாக அறிவித்திருந்தார். பின்னர் 470 மெகாவோல்ட் மின்சார தட்டுப்பாடு நிலவுவதாக மாறுபட்ட கருத்தை தெரிவித்துள்ளார்.

இவ்வாறானதொரு நிலையில் , பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு 100 மெகாவோல்ட் மின்சாரத்தை கொள்வனவு செய்வதற்கான அனுமதியையே வழங்கியுள்ளது. (9)

## 19ஆவது திருத்தச்சட்டத்தை இரத்து செய்யும் ஜனாதிபதியின் முயற்சியை தோற்கடிப்போம்

### கூட்டமைப்பு மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் தெரிவிப்பு

19 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை இரத்துச் செய்யும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் முயற்சியை கடுமையாக எதிர்ப்பதாக கூறியுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகள், ஜனாதிபதியின் இந்த முயற்சியை தோற்கடிக்கப் போவதாக தெரிவித்துள்ளன.

18 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் சர்வாதிகார ஆட்சியை உருவாக்கும் என்று ஜனாதிபதி கூறியதை ஏற்றுக் கொள்வதாகவும் எனினும் 19 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் காரணமாக நாட்டில் அரசியல் ஸ்திரமின்மை ஏற்பட்டுள்ளதாக சுமத்தும் குற்றச்சாட்டை நிராகரிப்பதாகவும் அந்தக் கட்சிகள் கூறியுள்ளன.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரான நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன்,

18 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தில் ஜனாதிபதிக்கு இருந்த வரையறையற்ற சர்வாதிகாரங்கள், 19 ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது அல்லது குறைக்கப்பட்டுள்ளது. இந்த திருத்தச் சட்டத்தின் ஊடாக நாடாளுமன்றத்தின் அதிகாரத்தை அதிகரித்து, ஜனநாயகத்தை ஏற்படுத்த முடிந்துள்ளது.

சர்வாதிகாரத்தை இரத்துச் செய்து, ஜனநாயகத்தை ஏற்படுத்த ஜனாதிபதி அர்ப்பணிப்புடன் செயற்பட்டார். 19 ஆவது திருத்தச் சட்டத்தை கொண்டு வந்து, ஜனாதிபதியிடம் இருந்த அதிகாரங்களை நாடாளுமன்றத்திற்கு வழங்க இணங்கி, திருத்தங்களை செய்ய அர்ப்பணிப்புடன் செயற்பட்ட தலைவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

19 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் நாட்டுக்கு சாபம் மட்டுமல்லாது இதனால், அராஜக நிலையும் ஏற்பட்டுள்ளதாக ஜனாதிபதி கூறுவதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முற்றாக நிராகரிக்கின்றது. இதனால், 19 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை இரத்துச் செய்ய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்த வகையிலும் இடமளிக்காது என சுமந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை இது தொடர்பான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் நிலைப்பாடு குறித்து கருத்து வெளியிட்டுள்ள அதன் பிரதித் தலைவர் யு.டி.எம். அன்வர், ஜனாதிபதி தற்போதைய சூழ்நிலையில் செயற்படும் விதம் குறித்து எந்த வகையிலும் திருப்தியடைய முடியாது.

நாட்டில் அரசியல் ஸ்திரமற்ற நிலைமை ஏற்பட அடிப்படை காரணம் அரசியலமைப்புச் சட்டம் அல்ல. ஆட்சியாளர்களின் பலவீனமே இதற்கு காரணம். நாடு வலுவாக இருக்க வேண்டுமாயின் அரசாங்கம் வலுவாக இருக்க வேண்டும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்ற வகையில் ஜனநாயகத்தை பாதுகாக்க எடுக்க வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும். 19 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை இரத்துச் செய்ய எந்த வகையிலும் உதவப் போவதில்லை.

ஜனநாயக மற்றும் அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிராக நாட்டில் அரசியல் ஸ்திரமற்ற நிலைமையை ஜனாதிபதியே ஏற்படுத்தினார்.

ஜனாதிபதியின் தீர்மானம் சட்டவிரோதமானது என உயர் நீதிமன்றம் அறிவித்தது. 19 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தின் மூலம் ஜனாதிபதியின் வரம்பு மீறிய அதிகாரங்களை இரத்துச் செய்த காரணத்தினாலேயே உயர் நீதிமன்றம் இப்படியான தீர்ப்பை வழங்கியது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (9)




# மஞ்சள் ஜெர்சி; இலங்கையின் ராசி அனுமதி வழங்கியது ஐ.சி.சி.,



உலகக் கிண்ண தொடரில் மீதமுள்ள போட்டிகளில் இலங்கை அணியினர் மஞ்சள் நிற 'ஜெர்சி' அணிந்து விளையாட ஐ.சி.சி., அனுமதி வழங்கியுள்ளது.

இங்கிலாந்தில், ஐ.சி.சி., உலக கிண்ண கிரிக்கெட் தொடர் நடக்கிறது. இதில் இங்கிலாந்தை தவிர, மற்ற 9 அணிகளும் 'டிவி' ஒளிபரப்பு காரணமாக, இரண்டு விதமான 'ஜெர்சி' வைத்துள்ளன. போட்டியில், இரு அணிகளும், ஒரே நிறத்தில் 'ஜெர்சி' அணிந்திருந்தால், 'ரிவி' பார்வையாளர்களுக்கு குழப்பம் ஏற்படும் என்பதால், இந்த விதி பின்பற்றப்படுகிறது.

இலங்கை அணியினர் வழக்கமாக கருநீல நிறத்தினாலான 'ஜெர்சி' அணிந்து விளையாடுவர். சமீபத்தில் லீட்சில் நடந்த இங்கிலாந்துக்கு எதிரான போட்டியில் மஞ்சள் - நீல நிறம் கலந்த 'ஜெர்சி' அணிந்து விளையாடினர். இப்போட்டியில் 20 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்தை வீழ்த்திய இலங்கை அணி வெற்றிப் பாதைக்கு திரும்பியது. இதனையடுத்து மீதமுள்ள 3 போட்டிகளிலும் (ஜூன் 28ல் தென்னாபிரிக்கா, ஜூலை 1ல் விண்டீஸ், ஜூலை 6ல் இந்தியா) இந்த ராசியான மஞ்சள்-நீல நிறத்தினாலான 'ஜெர்சி' அணிந்து விளையாட ஐ.சி.சி.,யிடம் இலங்கை சார்பில் அனுமதி கேட்கப்பட்டது. இதற்கு ஐ.சி.சி., அனுமதி வழங்கியது.

இதுகுறித்து ஐ.சி.சி., செய்தி தொடர்பாளர் ஒருவர் கூறுகையில், "இலங்கையின்கோரிக்கை ஏற்று, மீதமுள்ள போட்டிகளில் மஞ்சள் நிற 'ஜெர்சியில்' விளையாட அனுமதி வழங்கப்பட்டது," என்றார்.




# காலிறுதியில் உருகுவே

கோபா அமெரிக்கா கால்பந்து தொடருக்கான காலிறுதிக்கு உருகுவே அணி முன்னேறியது.

பிரேசிலில் கோபா அமெரிக்கா கால்பந்து தொடர் நடக்கிறது. சால்வடோரில் நடந்த 'சி' பிரிவு லீக் போட்டியில் 'நடப்பு சம்பியன்' சிலி, உருகுவே அணியை சந்தித்தது.

முதல் பாதியில் இரு அணிகளும் கோல் அடிக்கவில்லை. போட்டியின் கடைசி கட்டத்தில் (82) உருகுவே வீரர் கவானி பந்தை வலைக்குள் அனுப்பினார். எதிரணி பதிலடி தர எடுத்த முயற்சிக்கு பலன் கிடைக்கவில்லை.

முடிவில், உருகுவே அணி 1-0 என்ற கணக்கில் வெற்றி பெற்றது. இதனையடுத்து, புள்ளிப்பட்டியலில் முதலிரண்டு இடம்பிடித்த அணிகளான உருகுவே (7), சிலி (6) அணிகள் காலிறுதிக்கு முன்னேறியது.

ஈகுவடோர், ஜப்பான் அணிகள் மோதிய மற்றொரு லீக் போட்டி 1-1 என்ற கணக்கில் 'சமன்' ஆனது.

**யாருடன் யார் மோதல்**


நாளை முதல் காலிறுதி போட்டி கள் ஆரம்பாமாகின்றன. இதில் பிரேசில் - பராகுவே, வெனி சுலா - ஆர்ஜென்ரீனா, கொலம்பியா - சிலி, உருகுவே - பெரு அணிகள் மோதுகின்றன.



கோலடித்த மகிழ்வில் உருகுவேயின் எடின்சன் கவானி



# பிரிவினைவாதிகள் ஒருபோதும் வெற்றி பெறுவதில்லை - ரணில்



(கொழும்பு)

பிரிவினைவாதிகள் ஒருபோதும் வெற்றி பெறுவதில்லை எனவும் சிலர் பிரிவினைவாதத்தால் நன்மை பெற்றுக் கொள்வதற்கு முனைவதாகவும் உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் இழப்பீட்டிற்கான அலுவலகத்தின் ஊடாக 250 மில்லியன் ரூபா நட்டஈடு வழங்கப்பட்டுள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலைத் தொடர்ந்து வன்முறைகள் இரத்தம் சிந்தும் வகையில் பரவாமைக்கு நாட்டில் காணப்பட்ட நல்லிணக்கமே காரணம் என தெரிவித்ததுடன் நாட்டில் உள்ள மத்ரஸா கல்வி நிறுவனங்கள் தொடர்பில் சட்டங்கள் இயற்றப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.(7)

# நேவி சம்பத்தின் மறியல் நீடிப்பு

(கொட்டாஞ்சேனை)

கொட்டாஞ்சேனை பிரதேசத்தில் வைத்து 11 இளைஞர்களை கடத்தி காணாமல் செய்த சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நேவி சம்பத் என அழைக்கப்படும் சந்தன பிரசாத் ஹெட்டி ஆராச்சியின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் 3ஆம் திகதி வரை இவரது விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு கோட்டை நீதவான் ரங்க திஸாநாயக்க நேற்று உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, இந்த வழக்கு தொடர்பான விசாரணை நடவடிக்கைகள் இறுதிக் கட்டத்தில் இருப்பதாக, குற்ற விசாரணைப் பிரிவினர் நீதிமன்றத்துக்கு நேற்று அறிவித்துள்ளனர். (7)


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம்
1951
01
24

மறைவு
2019
05
31



## அமரர். திரு.நடராசா விக்னேஸ்வரன்

கடந்த 31.05.2019 வெள்ளிக்கிழமையன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர் திரு.நடராசா விக்னேஸ்வரன் அவர்களின் மரணச் செய்தி கேட்டு உடனே வந்து ஆறுதல் அளித்து, இறுதிச் சடங்கில் கலந்துகொண்ட மற்றும் தொலைபேசி, முகநூல், குறுஞ்செய்திமூலம் ஆறுதல் கூறிய, மரணச்சடங்கினை முறையாகச் செய்திட பல வழிகளிலும் உதவிய உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்துடன் அமரரின் அந்தியேட்டிக் கிரியைகள் 28.06.2019 வெள்ளிக்கிழமை காலை கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்று 30.06.2019 ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் நாவலர் வீதி, சொர்ணாம்பிகை (T.C.T) மண்டபத்தில் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அதனைத் தொடர்ந்து மதிய போசன நிகழ்வும் நடைபெறவுள்ளதால் அனைவரையும் அதில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

82/2, பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (0375)

இங்ஙனம்
குடும்பத்தினர்.
தொ.இல:-021 790 0729


# பொதியிலிருந்து கைக்குண்டு மீட்பு



(குளியாபிட்டி)

குளியாபிட்டி உடுபுத்தாவ பிரதேச செயலாளர் அலுவலகம் அமைந்துள்ள பகுதியிலிருந்து நேற்று கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

குறித்த அலுவலகத்திற்கு வருகை தந்த நபர் ஒருவர் சந்தேகத்திற்கிடமான முறையில் பொதி ஒன்று காணப்படுவதாக தெரிவித்தமையை அடுத்து மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போதே கைக்குண்டு மீட்கப்பட்டுள்ளது.

கைக்குண்டு காணப்படுவதாக தெரிவிக்கப்பட்ட இடத்திற்கு விரைந்த பாதுகாப்பு தரப்பினர் அருகிலுள்ள மைதானம் ஒன்றிற்கு எடுத்துச் சென்று குண்டினை பாதுகாப்பான முறையில் செயலிழக்கச் செய்துள்ளனர்.

அத்துடன் இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் இணைந்து குறித்த பகுதியில் சோதனை நட வடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர். (7)

## மண்சரிவால் பாதிக்கப்பட்டவர்களை மீள்குடியமர்த்த 5 ஆண்டு திட்டம்

(கொழும்பு)

மண்சரிவு காரணமாக வீடுகளை இழந்த மற்றும் மண்சரிவு அபாயம் காரணமாக அந்தப் பிரதேசங்களில் இருந்து வெளியேறிய மக்களை வேறு இடங்களில் மீள்குடியேற்றுவதற்காக அரசாங்கம் 21.5 பில்லியன் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளது.

பாதுகாப்பான இடங்களில் 15 ஆயிரத்து 25 குடும்பங்கள் மீள் குடியேற்றப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.



இதற்காக 5 ஆண்டுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

கேகாலை மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்த வேலைத்திட்டம் 16 மாவட்டங்களில் நடைமுறைப் படுத்தப்பட உள்ளதாக தேசிய நிவாரண சேவைகள் மத்திய நிலையத்தின் பணிப்பாளர் சமிந்த பத்திரகே தெரிவித்துள்ளார். (7)


## தவறவிடப்பட்டுள்ளது

25.06.2019 அன்று அரியாலைக்கும் கொக்குவிலுக்கும் இடைப்பட்ட தூரத்தில் தங்கக் கைச்செயின் ஒன்று தவற விடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (9354)

தொடர்புக்கு:- அ.பேட்டன் ரஞ்சித்
077 711 0948 , 077 717 0069

## நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு

எம்மிடம் பொம்மேரியன் வகை நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு (9354)

தொடர்புக்கு:- R.பேர்லின் றுக்ஷன்
077 711 0948 , 077 717 0069


## இராசி பலன்

**மீனம்:** மனதில் உற்சாகமும், மகிழ்ச்சியும் அதிகரிக்கும், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்,தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள்,வாக்கு மேன்மையுண்டு.

**மேடம்:** நீங்கள் பார்க்க நினைத்த நபர் உங்களைத் தேடி வரலாம்,வீட்டில் சில மாற்றங்களைச செய்ய முற்படுவீர்கள்,வழிபாட்டால் நலம் காண வேண்டிய நாள்.

**இடபம்:** ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம்,இடமாற்றச் சிந்தனை மேலோங்கும் நாள்,புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**மிதுனம்:** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், வருமானம் திருப்தி தரும்.

**கும்பம்:** சமுதாயப் பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், குடும்பத்தினர் உங்களின் கருத்துக்களை ஏற்று நடப்பர், வியாபார விருத்தியுண்டு, பயணங்களால் பலனுண்டு.

| | | | |
|---|---|---|---|
| | சந் | சுக் | சூரி, புத, ராகு |
| | இராசி பலன்<br>கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>சித்திரை | | செவ் |
| | | | |
| சனி, கேது | குரு | | |

**27.06.2019**
ஆனி 12 , வியாழக்கிழமை
சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு
தசமி பின்னிரவு 4.38 மணிவரை
ரேவதி காலை 6.17 மணிவரை
சுபநேரம் 7.25-8.55 மணிவரை
இராகுகாலம் 1.25-2.55 மணிவரை
உலக நீரிழிவு தினம்
சித்தாமிர்தம்
வளவன்

**கடகம்:** திட்டமிட்ட காரியங்கள் அனைத்தும் சரியாக நடைபெறலாம், தொழில் வளர்ச்சி மேலோங்கும நாள், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள்.

**மகரம்:** நல்லவர்களின் தொடர்பால் நலம் காணும் நாள், செய்தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள்,மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம்.

**சிம்மம்:** மறைமுக எதிர்ப்புகளை எளிதில் சமாளிக்கலாம், சொத்து பிரச்சினைகளுக்கு சுமுகமான தீர்வு கிடைக்கும், சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களை காணும் நாள்.

**தனுசு:** பொன்னான எதிர்காலம் அமைய புதிய வழிபிறக்கும், வியாபார விருத்தியுண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவம் உண்டு.

**விருச்சிகம்:** அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், செய்தொழிலில் சிறப்புக்கள் பெறுவீர்கள், எண்ணங்கள் எளிதில் நிறைவேறலாம்.

**துலாம்:** சுற்றத்தார் வருகையால் சுகம் காண்பீர்கள்,எடுத்த காரியத்தில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள்,வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கன்னி:** வழிபாட்டால் சுகம் காண வேண்டிய நாள், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, தேக நலனில் கவனம் செலுத்தும் சூழ்நிலை ஏற்படலாம்.

# தென்மராட்சியில் பொலிஸ் நிலையங்களுக்கு நிரந்தரக் கட்டடம் அமைக்க கோரிக்கை

(சாவகச்சேரி)

தென்மராட்சியில் அமைந்துள்ள இரண்டு (சாவகச்சேரி மற்றும் கொடிகாமம்) பொலிஸ் நிலையங்களுக்கும் நிரந்தரக் கட்டடம் அமைத்துக் கொடுக்கப்பட வேண்டும் என மாகாணசபை முன்னாள் உறுப்பினர் கேசவன் சயந்தன் கோரிக்கை விடுத்துள்ளார். தென்மராட்சியில் அண்மையில் இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் போதே அவர் இக் கோரிக்கையை முன்வைத்தார். அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

கடந்த ஐந்து வருடங்களாக சாவகச்சேரி மற்றும் கொடிகாமம் பொலிஸ் நிலையங்களுக்கு நிரந்தரக் கட்டடம் வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டு வரும் நிலையில் இன்று வரை அக் கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை. பொலிஸ் நிலையம் அமைப்பதற்கான காணிகள் உள்ள போதிலும் கட்டடம் அமைப்பதற்கான நிதியைப் பெற்றுக்கொள்வதில் தாமதம் நிலவுகிறது. குறித்த நிதியை தென்மராட்சிப் பிரதேச ஒருங்கிணைப்பு இணைத் தலைவர்கள் அரசாங்கத்திடம் இருந்து பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அறுபது கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கிய தென்மராட்சிப் பகுதியில் இடம்பெறுகின்ற குற்றச் செயல்களைக் கண்காணிக்க மற்றும் தடுக்க வாகன வசதி அவசியமானதாக உள்ளது. தென்மராட்சிப் பொலிஸ் நிலையங்களில் தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர்கள் பற்றாக்குறையும் பாரிய குறைபாடாகக் காணப்படுகிறது. ஆகவே உரிய வசதிகளை பொலிஸாருக்கு ஏற்படுத்திக் கொடுக்கும் பட்சத்தில் குற்றச் செயல்கள் தானாகக் குறைவடையும் என அவர் மேலும் தெரிவித்திருந்தார். (5-30)

# மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் விலங்கு விசர்நோய் தடுப்பூசி

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள அரியாலை பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய் தடுப்பூசி (ARV) கீழ்வரும் இடங்களில் வைத்து வழங்கப்படவுள்ளது என யாழ்.மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.

01.07.2019 முற்பகல் 9 மணிக்கு அரியாலை சனசமூக நிலையம் புங்கன்குளம் வீதி, முற்பகல் 11 மணிக்கு பென்ரிக கோஸ் லேன், பிற்பகல் 2.30 மணிக்கு தியாகராசா படிப்பகம் கண்டி வீதி அரியாலை,

02.07.2019 முற்பகல் 9 மணிக்கு சரஸ்வதி சனசமூக நிலையம் கண்டி வீதி அரியாலை, முற்பகல் 11 மணிக்கு மிருக வைத்திய நிலையம் A.V.ROAD அரியாலை, பிற்பகல் 2.30 மணிக்கு பிரப்பங்குளம் அம்மன் கோயிலடி இலந்தைக் குளம் வீதி.

03.07.2019 முற்பகல் 9 மணிக்கு கலைமகள் சனசமூக நிலையம் அரியாலை, முற்பகல் 11 மணிக்கு காந்தி சனசமூக நிலையம் அரியாலை, பிற்பகல் 2.30 மணிக்கு புவனேஸ்வரி அம்மன் கோயிலடி புவனேஸ்வரி அம்மன் வீதி.

04.07.2019 முற்பகல் 9 மணிக்கு அருணோதயா சனசமூக நிலையம், முற்பகல் 11 மணிக்கு திருமகள் சனசமூக நிலையம் அரியாலை, பிற்பகல் 2.30 மணிக்கு மலர்மகள் சனசமூக நிலையம் அரியாலை.

05.07.2019 முற்பகல் 9 மணிக்கு பாரதி சனசமூக நிலையம் நாயன்மார்கட்டு செம்மணி வீதி, முற்பகல் 11 மணிக்கு அம்பாள் சனசமூக நிலையம் பேச்சியம்மன் கோவிலடி, மகேஸ்வரி பாடசாலை அருகில் நாயன்மார்க்கட்டு.

08.07.2019 முற்பகல் 9 மணிக்கு கலைவாணி சனசமூக நிலையம் பொன்னம்பலம் வீதி அரியாலை. முற்பகல் 11 மணிக்கு முள்ளி வீதி அரியாலை, பிற்பகல் 2.30 மணிக்கு ஆள்காட்டி வீதி அருளம்பலம் வீதி சந்தி.

09.07.2019 முற்பகல் 9 மணிக்கு இராஜேஸ்வரி வீதி அரியாலை, முற்பகல் 11 மணிக்கு கனகரட்னம் வீதி நாவலர் வீதிச்சந்தி. பிற்பகல் 2.30 மணிக்கு கனகரத்தினம் மகா வித்தியாலயம் அருகில் நாவலர் வீதி.

10.07.2019 முற்பகல் 9 மணிக்கு பாரதி வீதி முதலியார் வீதிச் சந்தி அரியாலை, முற்பகல் 11 மணிக்கு கச்சேரி நல்லூர் வீதி நாக்கா வீதிச் சந்தி, பிற்பகல் 2.30 மணிக்கு பேரின்பநாயகம் வீதி.

11.07.2019 முற்பகல் 9 மணிக்கு கச்சேரி நல்லூர் வீதி நாவலர் வீதிச் சந்தி, முற்பகல் 11 மணிக்கு ஆசீர்வாதப்பர் வீதி பெரியபாலத்தடி , பிற்பகல் 2.30 மணிக்கு சாஸ்திரியார் வீதி அரியாலை.

12.07.2019 முற்பகல் 9 மணிக்கு சின்னாலங்கண்டு வீதி அரியாலை, முற்பகல் 11 மணிக்கு அருளம்பலம் வீதி (சந்தன மாதா ஒழுங்கை) பிற்பகல் 2.30 மணிக்கு கச்சேரி கிழக்கு புகையிரத பாதை (ஒழுங்கை).

15.07.2019 முற்பகல் 9 மணிக்கு அனைத்துப் பகுதியிலும் நடமாடும் சேவை இடம்பெறும். (5)

# அனுமதி இன்றி மணல் ஏற்றியவருக்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ஆட்பிணை

(யாழ்ப்பாணம்)

உழவு இயந்திரம் மூலம் அனுமதியின்றி மணல் ஏற்றியவரை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் ஆட்பிணையில் செல்ல சாவகச்சேரி நீதவான் நீதிமன்று அனுமதித்தது.

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அனுமதியின்றி மணல் ஏற்றியமை, அதனை கொண்டு சென்றமை ஆகிய குற்றங்களின் அடிப்படையில் குறித்த நபர் கடந்த மாதம் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நபருக்கு எதிரான வழக்கு விசாரணை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மன்றில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது குறித்த நபரை ஆட்பிணையில் செல்ல உத்தரவிட்டதுடன் வழக்கு எதிர்வரும் (07) மாதத்திற்கு ஒத்தி வைக்கப்பட்டது. (5-114-10)

# கரவெட்டியில் நன்னீர் இன்மையால் வீட்டுத்திட்ட வேலைகள் தாமதம்

## பொதுமக்கள் குற்றச்சாட்டு


(யாழ்ப்பாணம்)

கரவெட்டி பிரதேச செயலகத்திற்குட்பட்ட துன்னாலை குடவத்தைப் பகுதி ஜே/370 கிராம உத்தியோகத்தர் பிரிவில் வீட்டுத் திட்டம் கிடைத்தும் நன்னீர் இல்லாததால் வீட்டுத் திட்ட வேலைகளை ஆரம்பிக்க முடியவில்லை என அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

தேசிய வீடமைப்பு மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினால் வழங்கப்பட்ட வீட்டுத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு குறித்த பகுதியில் உள்ள நீர் உப்பு நீராகக் காணப்படுவதால் வீட்டுத்திட்ட வேலைகளை ஆரம்பிக்க முடியாமல் உள்ளது.

கடந்த மூன்று மாதங்களுக்கு முன் 18 வீட்டுத்திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டும் இதுவரை வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லையென மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர். இவ்விடயம் தொடர்பில் கரவெட்டிப் பிரதேச செயலக நிர்வாக அதிகாரியைத் தொடர்பு கொண்ட போது குறித்த விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு தெரியப்படுத்துவதாகத் தெரிவித்தார். (5-60-10)



வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனுக்கும் மன்னார் மறை மாவட்ட ஆயர் பேரருட்திரு இம்மானுவேல் பெர்னாண்டோவுக்குமிடையிலான சந்திப்பு நேற்று பிற்பகல் ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

# பாடசாலை தரமுயர்வு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட யாழ்.கெருடாவில் இந்து தமிழ் கலவன் பாடசாலையை 01-09 தரம் II வகைப் பாடசாலையாக வடமாகாணக் கல்வி அமைச்சால் தரமுயர்த்தப்பட்டுள்ளது.

குறித்த பாடசாலையின் தரமுயர்வு மாகாண கல்வித் திணைக்களக் கட்டமைப்புக் குழுவின் தீர்மானத்திற்கு அமைவாக தரம் 9 க்கான வகுப்புக்களை ஆரம்பிப்பதற்கு ஏதுவாக குறித்த பாடசாலை தரமுயர்த்தப்பட்டது. (5-10)

# விவசாயத் திணைக்கள வாகன விபத்தில் உத்தியோகத்தர்கள் காயம்




மாகாண விவசாயத் திணைக்கள "கப்" வாகனம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை விபத்துக்குள்ளாகியதில் அதில் பயணம் செய்த உத்தியோகத்தர்கள் தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாகத் தெரியவருதாவது, ஏ-32 வீதியால் யாழ்.நோக்கி வந்த மாகாண விவசாயத் திணைக்கள கப் வாகனம் நாவற்குழி மகாவித்தியாலயத்திற்கு அருகாமையில் வந்து கொண்டிருந்த போது குறித்த வாகனத்தின் ரயர் காற்றுப் போனதால் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியது.

இதில் வாகனத்தில் பயணம் செய்த நிர்வாக உத்தியோகத்தர்கள் சிறு காயங்கள் ஏற்பட்டதுடன் வாகனத்தின் முன்பக்கமும் பலத்த சேதமடைந்தது.

விபத்து தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (5-114-10)

# போதை ஒழிப்பு கருத்தமர்வு

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதியின் விசேட ஒழுங்குபடுத்தலின் கீழான போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பான விசேட விழிப்புணர்வு கருத்தமர்வு நாளை 28 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10. மணியளவில் காரைநகர் பிரதேச சபை தலைமை அலுவலக சபா மண்டபத்தில் இடம்பெறும்.

பிரதேச சபை தவிசாளர் வி.கேதீஸ்வரதாஸ் தலைமையில் இடம்பெறும் இக் கருத்தமர்வில் பிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் செயலாளர் எஸ்.குமாரசிங்கம் (ச.நீ), நெறியாளுகை உறுப்பினர் பு.அருமைத்துரை ஆகியோர் வளவாளர்களாக பங்குபற்றுவர். (5)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 2 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறும்.

இம் மஹோற்சவத்தில் எதிர்வரும் 15 ஆம் திகதி திங்கட்கிழமை இரதோற்சவமும் மறுநாள் செவ்வாய்க்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (5)



உரும்பிராய் கிழக்கு செல்லப்பா சனசமூக நிலைய சௌண்டிப் முன்பள்ளி மாணவர்களின் வருடாந்த கண்காட்சி நிகழ்வு நேற்றுக் காலை முன்பள்ளி மண்டபத்தில் சனசமூக நிலையத் தலைவர் இ.தர்பாலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

# துமிந்த செய்த தவறையே தயாசிறியும் செய்கிறார்

## எஸ்.எம். சந்திரசேன சுட்டிக்காட்டு



(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தற்போதைய பொதுச் செயலாளர் தயாசிறி ஜெயசேகர, முன்னாள் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க செயற்பட்ட விதத்திலேயே செயற்பட்டு வருவதாக கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளு மன்ற உறுப்பினர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித் துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தயாசிறி ஜெயசேகரவின் செயற்பாடுகள், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் பொதுஜன பெரமுனவின் ஐக்கியத்திற்கு தடையை ஏற்படுத்தும்.

இரு தரப்பினரும் இணக்கத்திற்கு வரக் கூடிய சந்தர்ப்பம் ஏற்படும் போது, தயாசிறி ஜெயசேகர அதனைத் தடுக்கின்றார்.

இரண்டு கட்சிகளுக்கும் இடையில் இணக்கத்தை ஏற்படுத்துவதற்காக எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடக்கும் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டு விட்டு வெளியில் வந்து செய்தியாளர் சந்திப்பை நடத்தி வேறு கதைகளை கூறுகிறார் எனவும் எஸ்.எம்.சந்திரசேன மேலும் தெரிவித்தார். (7)

# புகையிரதசேவை அத்தியாவசியம்; ஓய்வு பெற்றவர்களை இணைக்க தீர்மானம்

(கொழும்பு)

புகையிரத சேவையை அத்தியாவசிய சேவையாக்குவதற்கு அரசாங்கம் அறிவித்துள்ளதோடு, ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களையும் மீண்டும் சேவையில் இணைத்துக்கொள்ளவும் ரயில்வே திணைக்களம் அழைப்பு விடுத்துள்ளதாக, போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய ஓய்வுபெற்ற புகையிரத சாரதிகள், பாதுகாவலர்கள், புகையிரத நிலைய பொறுப்பதிகாரிகள் மற்றும் மேற்பார்வையாளர்கள் ஆகியோரை மீண்டும் சேவையில் இணைந்துக் கொள்ளவுள்ளதாக, துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சின் செயலாளர் எல்.பி. ஜயம்பதி அழைப்பு விடுத்துள்ளார். (7)

# நடமாடும் சேவை ஊடாக பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்



கோப்பாய் பிரதேச செயலகத்தில் விசேட நடமாடும் சேவையை சி.சி.எச். நிறுவனத்தின் அனுசரணையுடன் கோப்பாய் பிரதேச செயலகமும், உதவி பதிவாளர் நாயகமும், மாவட்ட சிறுவர் அபிவிருத்தி குழுவும் இனணந்து நேற்று நடமாடும் சேவையை நடத்தியது. இச் சேவையில் 17 சிறுவர்களுக்கு பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (5)

# பயங்கரவாத சம்பவத்துடன் சதொச நிறுவனத்திற்கு தொடர்பில்லை

## வர்த்தக அமைச்சின் செயலாளர் மறுப்பு

(கொழும்பு)

பயங்கரவாத சம்பவத்திற்கு சதொச நிறுவனத்துக்கு சொந்தமான வாகனம் பயன்படுத்தப்பட்டதாக கூறப்படும் குற்றச்சாட்டு முற்றிலும் பொய்யானது என்று கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் அமைச்சின் மேலதிக செயலாளரின் தலைமையில் விசாரணை நடத்தப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள பாராளுமன்ற தெரிவுக்குழு முன்னிலையில் நேற்று ஆஜராகி சாட்சியமளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சின் கீழ் உள்ள எந்தவொரு நிறுவனங்களும் பயங்கரவாத தாக்குதல் சம்பவத்துடன் தொடர்பு வைத்திருக்கவில்லை என்று கூறினார்.

அதேநேரம் சதொச நிறுவன கட்டடத்தில் தான் அறிந்த வகையில் எவ்வித இரகசிய அறைகளும் இல்லை என்று அவர் தெரிவித்தார்.

வெளிநாட்டு முதலீட்டு வேலைத் திட்டம் ஒன்றுக்கு அரசாங்கம் என்ற வகையில் தாம் அலுவலகம் ஒன்றை வழங்க வேண்டியிருந்ததாகவும், அதன்படி தானே 09ஆம் மாடியில் அவ்வாறு அறை ஒன்றை தற்காலிகமாக வழங்கியிருந்ததாகவும் கூறினார்.

அதேநேரம் சதொச நிறுவனம் சீனி என்ற பெயரில் போதைப் பொருள்கொண்டு வருவதாக கூறப்படும் குற்றச்சாட்டுக்கும் அவர் மறுப்புத் தெரிவித்தார். (7)



மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் தேசிய போதைப்பொருள் தடுப்பு வாரத்தை முன்னிட்டு விழிப்புணர்வு ஊர்வலம் நேற்று மருதனார் மடம் பகுதியில் நடத்தப்பட்டது. மாகாணக் கல்விப் பணிப்பாளர் உட்பட்ட அனைத்து திணைக்கள உத்தியோகத்தர்களும் இதில் கலந்து கொண்டனர்.

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தினரின் ஏற்பாட்டில் நேற்று போதைப்பொருளுக்கு எதிராக விழிப் புணர்வு ஊர்வலம் தென்மராட்சிப் பிரதேச செயலர் தேவந்தினி பாபுவின் லைமையில் பிர தேச செயலக முன்றலில் ஆரம்பித்து ஏ-9 வீதியூடாக சாவகச்சேரி பேருந்து நிலையத்தைச் சென்றடைந்து பின்னர் சாவகச்சேரி நகரசபை மைதானத்தில் நிறைவு பெற்றது. (படங்கள்: சுபேசன், விஜயவாசன்)




# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்:ஆயிலியம் 4செவ் 1 ல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:A/L, சொந்த தொழில்
எதிர்பார்ப்பு:படித்தவரன்
தொ.இ: B/9859

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்:உத்தராடம் 4சூரிசெவ் 5 ல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:O/L, சந்தைப்படுத்தல்
எதிர்பார்ப்பு: வெளிநாடு PR
தொ.இ: B/9860

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்:கார்த்திகை 1செவ் 12 ல்
உயரம்: 181cm
தகைமை/தொழில்:**ACCA, Dip.in QS, B.Sc Following**
எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: B/9861

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்:மகம் கி.பா: 48 ½
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:BAபட்டதாரி ஆசிரியர்
எதிர்பார்ப்பு: ஆசிரியர்,அரசதொழில் (உள்நாடு, வெளிநாடு)
தொ.இ: B/9864

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்:பூரம் 3
கி.பா: 11 ¾
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:BFAபட்டதாரி, ஆசிரியை
எதிர்பார்ப்பு: பட்டதாரி ஆசிரியர், அரசதொழில் (உள்நாடு)
தொ.இ: G/9868

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்:திருவாதிரை 2
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: BDS, Dental Surgeon
எதிர்பார்ப்பு: Doctor, Engineer, Accountant (உள்நாடு, வெளிநாடு)
தொ.இ: G/9871

பிறப்பு: 1990கிறிஸ்தவம்
நட்சத்திரம்:பூரட்டாதி 1
உயரம்: 5'1"
தகைமை/தொழில்:BA, MBA, வங்கி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: கிறிஸ்தவ, உத்தியோகத்தர் (உள்நாடு, வெளிநாடு)
தொ.இ: G/9880

பிறப்பு: 2000 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை 1செவ் 12 ல்
உயரம்: 156cm
தகைமை/தொழில்:A/L
எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: G/9885

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.**

# மட்டக்குளிய துப்பாக்கிச்சூடு; 9 சந்தேகநபர்களும் விடுதலை

மட்டக்குளிய - சமித்புர பகுதியில் 2016 ஆம் ஆண்டு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட 09 சந்தேகநபர்களையும் குற்றமற்றவர்களாக விடுதலை செய்ய கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய படபெதி நேற்றையதினம் இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளார்.

முறைப்பாட்டிற்காக சாட்சியம் வழங்கியவர்களின் சாட்சிகளில் பாரியளவில் குறைபாடு மற்றும் முரண்பாடு காணப்படுவதாக நீதிபதி தெரிவித்தார்.

பொலிஸ் விசாரணையில் பாரிய சந்தேகம் நிலவுவதாக தெரிவித்த நீதிபதி பிரதிவாதிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் நிரூபிக்க முடியாமல் போயுள்ளதாகவும் தெரிவித்தார். அதன்படியே 09 சந்தேக நபர்களையும் குற்றமற்றவர்களாக விடுதலை செய்ய நீதிபதி உத்தரவிட்டார்.

மட்டக்குளிய - சமித்புர பகுதியில் 2016 ஆம் ஆண்டு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் 5 பேர் உயிரிழந்ததுடன், சந்தேகநபர்களாக 09 இளைஞர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (7)



மாங்குளம் பிரதேச வைத்தியசாலைக்கு நேற்று முன்தினம் நண்பகல் திடீர் விஜயம் மேற்கொண்ட ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் வைத்தியசாலையின் நிலைமைகள் குறித்து நேரில் ஆராய்ந்தார்.

இந்த வைத்தியசாலையில் கடமை புரியும் ஊழியர்கள் வைத்தியசாலையினை மிகவும் தூய்மையாக வைத்திருப்பதனை பாராட்டிய அவர் தொடர்ச்சியாக இதனை பேணுமாறும் வைத்தியசாலை நிர்வாகத்தினரிடம் கேட்டுக் கொண்டார்.

# யுத்தத்திற்கு பயந்து ஓடிய கோத்தாவை விட பொன்சேகா தகுதியானவர்-குமார வெல்கம

(கொழும்பு)

நாட்டின் பாதுகாப்பை கருத்திற் கொண்டு அதனடிப்படையில் ஜனாதிபதி வேட்பாளரொருவர் களமிறக்கப்படுவாராக இருந்தால் அதற்குத் தகுதியானவர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா மாத்திரமே என்று தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம, யுத்தத்திற்கு பயந்து நாட்டை விட்டு அமெரிக்காவுக்கு ஓடிய கோத்தபாயவை விட சரத் பொன்சேகா மேலானவர் எனவும் தெரிவித்தார்.



களுத்துறை மாவட்டத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டின் பாதுகாப்புடன் தொடர்புபடுத்தி நோக்கும் போது அவரே சிறந்த வேட்பாளராவார். எனினும் கடந்த தேர்தலில் போட்டியிட்டு அவர் தோல்வியடைந்து விட்டார் என்ற கேள்வி எழத் தோன்றும். அவ்வாறு நோக்கினால் சி.டபிள்யூ.டபிள்யூ.கன்னங்கரா இலவசக் கல்வியை அறிமுகப்படுத்தி, இலவசக் கல்வியின் தந்தையாக தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்தார். எனவே அதனைப் பெரிதுபடுத்த முடியாது என மேலும் அவர் தெரிவித்தார். (7)

# அரச ஊழியர்களின் ஆடை தொடர்பான சுற்றறிக்கையில் திருத்தம் செய்ய அனுமதி

அரச அலுவலகங்களில் அரச ஊழியர்கள் அணிய வேண்டிய ஆடை விவகாரம் தொடர்பாக அண்மையில் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையை திருத்தம் செய்ய அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அரச ஊழியர்களின் சீருடை குறித்த சுற்றறிக்கை கடந்த மாதம் 29 ஆம் திகதி வெளியிடப்பட்டது.

இருப்பினும் இந்த சுற்றறிக்கையை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக அரச நிர்வாகத்துக்கு பொறுப்பான அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பல்வேறு உத்தரவுகளை கவனத்தில் கொண்டு மேலே குறிப்பிடப்படும் சுற்றறிக்கையில் திருத்தத்தை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக அரச ஊழியர்களின் பணி நேரத்தில் தமது அலுவலகத்துக்கு வரும் பொழுது ஆண் ஊழியர்கள் காற்சட்டை மற்றும் சேர்ட் அல்லது தேசிய சீருடையுடன் இருப்பதுடன் பெண் ஊழியர்கள் சாரி, அல்லது அரச சேவையின் கௌரவத்தை பாதுகாக்கும் வகையில் பொருத்தமான சீருடையை அணிந்திருக்க வேண்டும்.

அத்தோடு எப்போதும் ஊழியர்களின் முகம் தெளிவாக இருக்கவேண்டும் என்பதுடன் பொது மக்கள் பாதுகாப்பு தொடர்பில் விதிக்கப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளுக்கு தடை ஏற்படாத வகையிலான சீருடையாக இருக்கவேண்டும்.

இவ்வாறு சில ஒழுங்கு விதிகளை உள்ளடக்கி சுற்றறிக்கையை வெளியிடுவதற்காக அரச நிர்வாகம் இடர் முகாமைத்துவம் மற்றும் கிராம பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார சமர்ப்பித்த ஆவணத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (7)

# இலங்கை பாதுகாப்பான நாடு என்பதற்கு பிரதமர் மோடியின் விஜயம் சான்றாகவுள்ளது

## சுற்றுலாத்துறை அமைச்சர் பெருமிதம்

இலங்கை பாதுகாப்பான நாடு என்பதற்கு நரேந்திர மோடியின் வருகை சான்றாக அமைந்துள்ளது என சுற்றுலாத்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.

இரண்டாவது முறையாக பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்ட நரேந்திரமோடி, இந்த மாத ஆரம்பத்தில் மாலைதீவுக்கான விஜயத்தினை அடுத்து இலங்கைக்கு வருகை தந்தார்.

இந்நிலையில் ஏப்ரல் 21 நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலின் தாக்கம் குறித்து இந்திய ஊடகத்திற்கு கருத்து தெரிவித்த போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது, "இலங்கைக்கு விஜயம் செய்த மோடி தாக்குதலில் பாதிக்கப்பட்ட தேவாலயத்திற்கு சென்றிருந்தார். அவர் இதன்போது சுமுகமாகவும் வசதியாகவும் இருந்தார். இதை விட பாதுகாப்பிற்கு சிறந்த சான்று என்ன இருக்கின்றது?"

குண்டுத் தாக்குதலுக்கு முன்னர் இருந்ததை போலவே தற்போது நாட்டின் நிலைமை காணப்படுகின்றது. தேவாலயங்களையும் ஹோட்டல்களையும் இலக்கு வைத்து தாக்குதல் நடத்திய ஐ.எஸ். பயங்கரவாதிகளை ஆதரித்தவர்கள் யார் என்பதைக் கண்டறிய எமது உளவுத் துறையினருக்கு 10 நாட்கள் போதுமாக இருந்தது.

மேலும் அவசரகால நிலை அமுல்படுத்தப்பட்டுள்ளமையினால் சுற்றுலாவுக்கு எந்த ஆபத்தும் இல்லை. தாக்குதல்களின் பின்னணியில் உள்ளவர்களை விசாரிக்க வேண்டியிருந்தமையாலேயே அவசரகால நிலை அமுல்படுத்தப்பட்டது. எனினும் அவசர நிலை விரைவில் நீக்க நடவடிக்கை எடுக்கப்படும். இதன் பின்னர் நாடு ஏப்ரல் 21 இற்கு முன்பு இருந்த நிலைக்கு திரும்பும் என நம்புகின்றேன் என மேலும் தெரிவித்தார். (7)

# கண்களை திறந்து மூடி கண்ணீர் விட்ட மாதா



320ஆண்டுகள் பழமையான திண்டுக்கல், மேட்டுப்பட்டியில் உள்ள புனித வியாகுல அன்னை தேவாலயத்தில் மாதா சிலையின் கண்கள் திறந்து மூடியுள்ளதாகவும், சிலையின் கண்களில் இருந்து கண்ணீர் வடிந்துள்ளதாகவும் தகவல்களில் தெரியவந்துள்ளது.

நேற்று முன் தினம் பக்தர்கள் வழிபாட்டில் ஈடுபட்டிருந்த போது மாதா சிலையின் கண்கள் திறந்து மூடுவதையும், சிலையின் கண்களில் இருந்து கண்ணீர் வருவதையும் அவதானித்ததாக தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, கடந்த ஏப்ரல் 20 ஆம் திகதி அதாவது உயிர்த்த ஞாயிறு தினத்திற்கு முதல் நாள் மாலை இலங்கையில் களுத்துறை, கட்டுகுருந்த பகுதியிலுள்ள தூய பிலிப் மேரி தேவாலயத்திலுள்ள மாதா சிலையில் இருந்து கண்ணீர் வடிந்திருந்தது.

முதல் நாள் பெரியவெள்ளி அனுஷ்டிக்கப்பட்ட நிலையில், அடுத்த நாள் இவ்வாறு இரத்த கண்ணீர் சிந்தும் அதிசயம் பதிவாகிய சந்தர்ப்பத்தில் இதனை காண பெருந்தொகை பக்தர்கள் மாதா தேவாலயத்திற்கு படையெடுத்திருந்தனர். எனினும் இந்த அதிசய சம்பவம் இடம்பெற்ற அடுத்த நாள் அதாவது ஏப்ரல் 21ஆம் திகதி இலங்கையின் எட்டு இடங்களில் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டன.

இதில் நூற்றுக்கணக்கான கிறிஸ்தவ மக்களின் உயிர்கள் பலியெடுக்கப்பட்ட நிலையில் உயிர்த்த ஞாயிறு கொடூரத்தின் முன்னெச்சரிக்கையாகவே தூய பிலிப் மேரி தேவாலயத்திலுள்ள மாதா சிலையில் இருந்து இரத்த கண்ணீர் வடிந்திருந்ததாக பலர் கருத்துக்களை பதிவிட்டு வந்திருந்தமை நினைவுபடுத்தத்தக்கது. (7)

# சிறைக் கைதி தற்கொலை

(நீர்கொழும்பு)

நீர்கொழும்பு சிறைச்சாலையில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவர் நேற்று அதிகாலை சிறைச்சாலை வைத்தியசாலையில் உள்ள மலசல கூடத்தில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

திவுலபிட்டிய பகுதியில் இடம்பெற்ற கொலைச் சம்பவம் ஒன்று தொடர்பாக குறித்த கைதி சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்டு, பொலிஸாரால் திவுலபைபிட்டிய தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தார்.

இந் நிலையிலேயே அவர் இவ்வாறு தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டுள்ளதாக சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கொடதெனியாவை சேர்ந்த கொடிகாபத்தல கெதர நாலாக பிரசன்ன குமார (வயது 40) என்ற நபரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டுள்ளார். (7)

# மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவிற்கு ஜனாதிபதியால் சேவை நீடிப்பு வழங்கப்பட்டது

மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு ஆறு மாதகால சேவை நீடிப்பு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் வழங்கப்பட்டிருக்கிறது.

இராணுவத்தின் இரண்டாவது நிலைப் பதவியான இராணுவத் தலைமை அதிகாரியாகவுள்ள மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா கடந்த 21 ஆம் திகதி 55 வயதை எட்டிய நிலையில் ஓய்வுபெறவிருந்தார்.

அதற்கு மூன்று நாட்கள் முன்னதாக கடந்த 18 ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் சேவை நீடிப்பு வழங்குவதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது.

இதன்மூலம் இந்த ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதி வரை அவர் பதவியில் நீடிக்கப் போகிறார். இந்த சேவை நீடிப்பு, மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு இராணுவத் தளபதியாகும் வாய்ப்புக் கிட்டுவதற்குச் சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கிறது.

ஏனென்றால், தற்போதைய இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் மகேஸ் சேனநாயக்கவின் பதவிக் காலம் எதிர்வரும் ஓகஸ்ட் 19 ஆம் திகதியுடன் முடிவடைகிறது.

2017 ஜூலை 4 ஆம் திகதி இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்ட அவர், 2018 ஓகஸ்ட் 19 ஆம் திகதியுடன் ஓய்வுபெறவிருந்த நிலையிலேயே 2019 ஓகஸ்ட் 19 ஆம் திகதி வரை ஜனாதிபதியினால் சேவை நீடிப்பு வழங்கப்பட்டது. அவருக்கு இரண்டு முறை ஜனாதிபதியினால் சேவை நீடிப்பு வழங்கப்பட்டு விட்டது.

எனவே, மீண்டும் அவருக்கு எதிர்வரும் ஓகஸ்ட் 19 ஆம் திகதிக்குப் பின்னர் சேவை நீடிப்பு வழங்கப்படுமா? என்பது சந்தேகம்.

எனினும், இதற்கு முன்னர் பதவியில் இருந்த இராணுவத் தளபதி ஜெனரல் கிரிஷாந்த டி சில்வாவுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் மூன்று தடவைகள் சேவை நீடிப்பு வழங்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. எனவே, தற்போதைய இராணுவத் தளபதிக்கு அவ்வாறு மீண்டும் ஒருமுறை சேவை நீடிப்பு வழங்கப்பட்டால் ஆச்சரியமில்லை.

இராணுவத் தளபதி லெப். ஜெனரல் மகேஸ் சேனநாயக்க, ஓகஸ்ட் 19 ஆம் திகதியுடன் ஓய்வு பெறும் நிலை ஏற்பட்டால் தற்போது இராணுவத்தில் இரண்டாவது நிலையில் உள்ள மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா இராணுவத் தளபதியாக நியமிக்கப்படும் வாய்ப்புகள் அதிகம்.

பொதுவாக, இராணுவத் தளபதி நியமனங்கள் அவ்வாறு தான் செய்யப்படுவது வழக்கம். எனினும் அபூர்வமாக சில வேளைகளில் மேல் நிலையில் இருந்தவர்கள் ஓரம் கட்டப்பட்டு, மூப்பு வரிசையில் பின்னால் இருந்தவர்கள் இராணுவத் தளபதி பதவியைப் பிடித்த சந்தர்ப்பங்களும் உள்ளன.

தற்போதைய நிலையில், மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு அளிக்கப்பட்டுள்ள சேவை நீடிப்பு, அவருக்கான வாய்ப்புகளை உயர்த்தியிருக்கிறது. ஏனென்றால் அவர் டிசெம்பர் 31 ஆம் திகதி வரை பதவியில் இருக்கப் போகிறார்.

அதற்கு முன்னதாக டிசெம்பர் 7 ஆம் திகதிக்குள் ஜனாதிபதி தேர்தல் நடக்கப் போகிறது. ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டுபவர், சில நாட்களிலோ, ஓரிரு வாரங்களிலோ பதவியேற்று விடுவார். அந்த வகையில் எப்படியும் டிசெம்பர் 31 ஆம் திகதிக்குள் புதிய ஜனாதிபதி பதவியேற்கும் வாய்ப்பு உள்ளது.

புதிய ஜனாதிபதியாக, தெரிவாகிறவர் யார் என்பதைப் பொறுத்து, மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவின் எதிர்காலம் தீர்மானிக்கப்படும்.

கூட்டு எதிரணி சார்பில் கோத்தபாய ராஜபக்ஷ போட்டியிட்டு வெற்றி பெறுவாராயின்-நிச்சயமாக மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா தான் அடுத்த இராணுவத் தளபதி என்று கண்ணை மூடிக் கொண்டு இப்போதே அடித்துக் கூறலாம்.

கோத்தபாய ராஜபக்ஷ மாத்திரமன்றி, கூட்டு எதிரணி சார்பில் யார் போட்டியிட்டு வெற்றி பெற்றாலும் மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு இராணுவத் தளபதி பதவி உறுதி. ஏனென்றால், அவர் கோத்தபாய ராஜபக்ஷவின் நம்பிக்கைக்குரிய ஒருவர். கஜபா படைப்பிரிவில் ஒன்றாகப் பணியாற்றியவர். இறுதிப் போரில் இருவரும் இணைந்து செயற்பட்டவர்கள்.

அதேவேளை, ஜனாதிபதித் தேர்தலில், ஐ.தே.க. நிறுத்தும் வேட்பாளர் வெற்றி பெறும் நிலை ஏற்பட்டால் நிச்சயமாக அவரால் இராணுவத் தளபதி பதவியை எதிர்பார்க்கவே முடியாது.

ஏனென்றால் மேற்குலகுடன் இசைந்து போகும் கொள்கையை பின்பற்றக் கூடிய ஐ.தே.க. இறுதிப் போரில் பாரிய மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டார் என குற்றம் சாட்டப்படும் ஒருவரான மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவை இராணுவத் தளபதியாக நியமிக்காது.

மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு வழங்கப்பட்டுள்ள சேவை நீடிப்பு மூலம் அவருக்கு அடுத்த இராணுவத் தளபதி பதவி வழங்கப்படும் என்ற சமிக்ஞையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளிப்படுத்தியிருக்கிறாரா? என்றால் அதையும் நிச்சயமாகக்கூற முடியாது.

இராணுவத் தளபதிகள் தவிர்ந்த மற்றைய அதிகாரிகளுக்கு 55 வயதுக்கு மேல் சேவை நீடிப்பு வழங்குவதில்லை என்ற விதிமுறை கடந்த ஆட்சிக்காலத்தில் இருந்து உறுதியாகப் பின்பற்றப்பட்டு வருகிறது.

இராணுவத் தளபதிகளாக இருந்த பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, ஜெனரல் கிரிஷாந்த டி சில்வா போன்றவர்களுக்கு 55 வயதுக்குப் பின்னர் மூன்று முறை சேவை நீடிப்புகள் வழங்கப்பட்டன. தற்போதைய இராணுவத் தளபதியும் அதற்கு விதிவிலக்கானவர் அல்ல.

ஆனால், மேஜர் ஜெனரல்களைப் பொறுத்தவரையில் 55 வயதுக்குப் பின்னர் சேவை நீடிப்பு அரிதாகவே வழங்கப்பட்டிருக்கிறது.

மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் 2009 ஆம் ஆண்டு மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, 55 வயதுக்குப் பின்னர் சேவை நீடிப்புப் பெற்றார்.

தற்போது மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவும் இராணுவத் தளபதியாக நியமிக்கப்படக் கூடும் என்ற எதிர்பார்ப்புள்ளது.

ஆனால், அது உண்மையாக வேண்டும் என்பது நியதியில்லை என்பதை மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி, மேஜர் ஜெனரல் டம்பத் பெர்னாண்டோ ஆகியோருக்கும் ஏற்பட்ட நிலையில் இருந்து புரிந்து கொள்ள முடியும்.

சேவை நீடிப்பு பெற்றிருந்தாலும், இராணுவத் தலைமை அதிகாரியாக இருந்தாலும் கூட, இராணுவத் தளபதியாக நியமிக்கப்படுவதற்கான வாய்ப்பை இந்த இரண்டும் தீர்மானிக்காது.



மனித உரிமைகள் விவகாரத்தில் பலத்த சர்ச்சைக்குரியவராக இருந்தாலும் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி, மேஜர் ஜெனரல் டம்பத் பெர்னாண்டோ போன்றவர்களை விட போர்க்களச் சாதனைகளில் மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா மிக உயரமான இடத்தில் இருப்பவர். இராணுவத் தளபதி பதவிக்கு மிகவும் பொருத்தமானவராகக் கருதப்படுபவர்.

ஆனால் மனித உரிமை விவகாரங்களும் சர்வதேச அழுத்தங்களும் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு இராணுவத் தளபதி பதவியைக் கொடுக்குமா? என்ற கேள்வி உள்ளது.

ஏற்கனவே, இறுதிக்கட்டப் போரில் முக்கிய பங்காற்றியவர்களான மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ், மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன, மேஜர் ஜெனரல் பிரசன்ன டி சில்வா, மேஜர் ஜெனரல் நந்தன உடவத்த, மேஜர் ஜெனரல் சாஜி கல்லகே, மேஜர் ஜெனரல் நிசாந்த வன்னியாராச்சி, மேஜர் ஜெனரல் நிர்மல் தர்மரட்ண, மேஜர் ஜெனரல் ரால்ப் நுகேரா உள்ளிட்ட பலரும் இராணுவத் தளபதி பதவியை நெருங்கக் கூட முடியாமல் ஓய்வுபெற நேரிட்டமைக்கு முக்கியமான காரணம் போர்க்கால மீறல்கள் தான்.

மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா ஓய்வுபெறவிருந்த ஜூன் 21 ஆம் திகதியும் கூட இறுதிப் போரில் முக்கிய பங்கெடுத்த அதிகாரிகளில் ஒருவரான மேஜர் ஜெனரல் நிசங்க ரணவான ஓய்வுபெற்றிருக்கிறார்.

இவர்களைவிட, இறுதிப் போரில் கட்டளைத் தளபதிகளாக இருந்த மேஜர் ஜெனரல் சத்யப் பிரியலியனகே, மேஜர் ஜெனரல் அத்துல கொடிப்பிலி, மேஜர் ஜெனரல் ஜி.வி. ரவிப்பிரிய போன்ற அதிகாரிகள் அடுத்த ஜனவரிக்குள் ஓய்வுபெற வேண்டிய நிலையில் உள்ளனர்.

எதிர்வரும் ஓகஸ்ட் 19 ஆம் திகதி இராணுவத் தளபதி பதவியில் இருந்து லெப்.ஜெனரல் மகேஸ் சேனநாயக்க ஓய்வுபெற்றால் அடுத்த இராணுவத் தளபதியாகும் வாய்ப்பைப் பெறக்கூடிய மூத்த அதிகாரிகளாக கொழும்பு நடவடிக்கை தளபதி மேஜர் ஜெனரல் சத்யப்பிரிய லியனகேயும் யாழ். படைகளின் தளபதியான மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சியும் இருப்பார்கள் என்றே நம்பப்பட்டது.

குறிப்பாக, மேஜர் ஜெனரல் சத்யப்பிரிய லியனகே அடுத்த இராணுவத் தளபதியாகும் வாய்ப்புக் கிட்டும் என்று கருதப்பட்டது. இந்த நிலையில் மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு அளிக்கப்பட்டுள்ள சேவை நீடிப்பானது, அவரதும் மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சியினதும் எதிர்காலத்தில் மண்ணை அள்ளிப் போட்டுள்ளது.

ஏனென்றால், மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவின் சேவை நீடிப்பு முடிவதற்குள், மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி 2019 ஜூலை 22 ஆம் திகதியும் மேஜர் ஜெனரல் சத்யப்பிரிய லியனகே நவம்பர் 14 ஆம் திகதியும் ஓய்வு பெற வேண்டிய நிலையில் இருக்கின்றனர்.

## குறை'களை' பதிகம் 51

### பஸ்தரிப்பு நிலையம் அமைக்கப்படுமா?

யாழ்ப்பாணம் கண்டி வீதியோரத்தில்
மிருசுவில் புகையிரத நிலையமும்
நற்சிந்தனைகளை நல்கும் கிறிஸ்தவ தேவாலயமும்
வளமான வாழ்விற்கு வழி வகுக்கும் பாடசாலையுமுண்டு
இங்கேதான் இருமருங்கும்
பஸ்தரிப்பு நிலைய மில்லை
நிழல் தரு மரங்கள் கூட இங்கில்லை
இன்றைய சுட்டெரிக்கும் வெயிலில்
குழந்தைகளுடன் வரும் தாய்மாரும்
நடை தளர்ந்த வயோதிபர்களும்
தவித்தபடி தாவுகிறார்கள் நிழலைத் தேடி
அன்னதானம் கொடுப்பது தான்
புண்ணிய மென்றில்லை
மக்களின் அவலத்தை அகற்றுவதும் புண்ணியம்தான்
ஆண்டவரினருளினால் பணம் படைத்தோர் எவராவது
இக்குறையை காலம் கடத்தாமல் களையுங்கள்
மறுபிறப்பும் உங்களுக்கு பணத்திற் புரள வாய்ப்புண்டு
பாராளுமன்ற உறுப்பினர்களும்
இவ் விடத்தைப் பாருங்கள்
துரித கிராம அபிவிருத்தித் திட்ட நிதியில்
இன்றே ஒரு தொகையை ஒதுக்குங்கள்
அன்றே மக்களின் மனங்களில் உங்கள் பெயர் பதிவாகும்
இறந்தோரின் நினைவாகவும்
இந் நிலையம் அமைக்கலாம்
அமையுங்கள் அன்னாரின் ஆன்மா மகிழ்வடையும்
அடுத்த மாதத்தில் மாரி மழையும் தொடங்கலாம்
அதற்கிடையில் ஆயிரக் கணக்கானோரின்
அவலம் தீர பஸ்தரிப்பு நிலையம்
அமைக்கப்படுவதே நன்றாகும்.

சி. காசிப்பிள்ளை
கொடிகாமம்

**அன்பு வாசகர்களே!**

இப்பகுதியில் வெளிவரும் குறை 'களை' பதிகத்திற்கு நீங்களும் உங்கள் பகுதிகளில் உள்ள குறைகளை பதிகமாக எழுதி ஆசிரியர், குறை 'களை' பதிகம், வலம்புரி, இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். (ஆ-ர்)

# போதைப்பொருள் நிலையங்களுக்கு நான் அனுமதி வழங்கியதில்லை-சஜித்



தன்னுடைய அரசியல் வாழ்க்கையில் எவ்விதத்திலும் போதைப்பொருள் நிலையம் ஒன்றை நடத்திச்செல்வதற்கு அனுமதி வழங்கியதில்லை என அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அம்பாந்தொட்டை, திஸ்ஸமஹாராம பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

போதைப் பொருள் நிலையம் என்பது சமூகத்தை இழிவுபடுத்தும் ஒரு செயல் எனவும் அவர் தெரிவித்தார். (7)

# ஹெரோயின் வைத்திருந்தவருக்கு மறியல்

(கொழும்பு)

ஹெரோயின் போதைப் பொருளை வைத்திருந்த நபரை எதிர்வரும் ஜூலை மாதம் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதிபதி எம்.ஐ.ரிஸ்வான் உத்தரவிட்டார்.

காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள ஆரயம்பதியில் 440 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்ட நபரை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோதே குறித்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்நிலையில் குறித்த சம்பவம் தொடர்பில் காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (7)

## முதியோர் யாத்திரை

(கிளிநொச்சி)

முதியோர் உளசமூக மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்தால் கரைச்சிப் பிரதேச செயலகப் பிரிவின் வன்னேரிக்குளம் கிராம முதியோர் சங்க உறுப்பினர்கள் இன்று வியாழக்கிழமை திருக்கோணமலை மாவட்டத்தின் திருத்தலங்களுக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

கன்னியா வெந்நீரூற்று, சிறி லட்சுமி நாராயணர் கோவில், திருக்கோணேஸ்வரம் ஆகிய தலங்களுக்கே அவர்கள் அழைத்துச் செல்லப்படவுள்ளனர். (9)




# குடும்பப் பெண்களை மிரட்டி கையொப்பம் பெறும் நிதி நிறுவனங்கள்

## வவுனியாவில் பாதிக்கப்பட்ட பெண்கள் குற்றச்சாட்டு

வவுனியாவில் இயங்கிவரும் நுண்நிதி நிறுவனங்கள், வறுமையின் காரணமாக கடன்களை மீள் செலுத்த முடியாமல் தவிக்கும் குடும்பப் பெண்களின் நிலுவைத் தொகைக்கு வட்டிக்கு மேல் வட்டி போட்டு கடன் சுமையை அதிகரித்து அவர்களை மிரட்டி கையொப்பம் பெற்று வருவதாக பாதிக்கப்பட்ட பெண்கள் தெரிவித்துள்ளனர்.

குடும்ப வறுமை காரணமாக பணம் செலுத்த முடியாத பெண்களை நிதி நிறுவனத்தின் அலுவலகத்திற்கு அழைத்து நிலுவைக் கடனை உடனடியாகச் செலுத்த வேண்டும் என்றும் கடன் செலுத்தாத காலப்பகுதிக்கு அதிகரித்த வட்டியோடு எழுதப்பட்ட புது ஒப்பந்தத்தில் கையொப்பம் இடுமாறு மிரட்டி கையொப்பம் பெறப்படுவதாக பாதிக்கப்பட்ட பெண்கள் குற்றம் தெரிவித்துள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் கடும் வரட்சி நிலவி வரும் நிலையில் விவசாயத்தை மற்றும் கால்நடை வளர்ப்பை நம்பியிருக்கும் குடும்பங்கள் மற்றும் கூலித் தொழில் செய்து வரும் குடும்பங்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கியிருக்கும் இத்தருணத்தில் நுண்நிதி நிறுவனங்களின் இவ்வாறான நடவடிக்கை குடும்பப் பெண்களையும் அதன்மூலம் சிறுவர்களையும் பெரும் பாதிப்பிற்குள் தள்ளியுள்ளது.

வடக்கில் நுண்நிதி நிறுவனங்கள் மேற்படி செயற்பட்டதன் கொடுமை காரணமாக 60 இற்கு மேற்பட்ட குடும்பப் பெண்கள் தற்கொலை செய்து கொண்டுள்ள நிலையில் குடும்பப் பெண்களின் தற்கொலைகளை தடுக்கும் நோக்கத்துடனும் குடும்ப சீரழிவுகளை குறைக்கும் எண்ணத்துடன் அமைச்சரவையின் ஒப்புதலுடன் நிதி அமைச்சு 37 நுண்நிதி நிறுவனங்களை இனங்கண்டு 1414 மில்லியன் ரூபாவினை தள்ளுபடி செய்துள்ளது.

அரசாங்கத்தினால் ஒரு இலட்சம் ரூபாவிற்கு குறைவாக நுண்நிதி நிறுவனங்களிடமிருந்து பெற்ற கடன் தொகையை தள்ளுபடி செய்வதாக நிதி அமைச்சு அறிவித்திருந்த நிலையில், யாழ்.மாவட்டத்தில் 1096 பெண்களும் கிளிநொச்சி மாவட்டத்தில் 1580 பெண்களும் மன்னார் மாவட்டத்தில் 670 பெண்களும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 458 பெண்களும் இச்சலுகை மூலம் நன்மை அடைந்துள்ளனர்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் மூன்று மாதத்திற்கு ஒரு தடவை கூடும் நுண்நிதி நிறுவனங்கள் கொடுக்கும் அறிக்கையைப் பெறும் வவுனியா மாவட்ட செயலகத்தின் அதிகாரிகள் நுண்நிதி நிறுவனங்களினால் பாதிக்கப்பட்டுள்ள குடும்பப் பெண்களுக்கு எந்தவிதமான நிவாரணங்களையும் பெற்றுக் கொடுக்கவில்லை என்றும் அரசாங்கம் வழங்கிய ஒரு இலட்சம் ரூபா நிதி சலுகையைக்கூட பெற்றுக்கொடுக்க மாவட்ட செயலகம் முன்வரவில்லை என்பதுடன் நுண்நிதி நிறுவனங்களுக்கு சார்பாக வவுனியா மாவட்ட செயலகத்தின் அதிகாரிகள் செயற்பட்டு வருவதாக பாதிக்கப்பட்ட பெண்கள் குற்றம்சாட்டியுள்ளனர். (9-250)

# ஜேர்மன் தொழிற்பயிற்சி நிறுவனத்துக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் விஜயம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி அறிவியல் நகர் பகுதியில் அமைந்துள்ள ஜேர்மன் தொழில் பயிற்சி நிறுவனத்தினை நாடாளுமன்ற உறுப்பினர்களான அங்கஜன் இராமநாதன் மற்றும் காதர் மஸ்தான் ஆகியோர் நேற்று முன்தினம் சென்று பார்வையிட்டனர்.

குறித்த நிறுவனம் தற்போது மூடும் நிலையில் இருப்பதாக வெளியாகிய செய்தியின் அடிப்படையில் குறித்த விஜயம் மேற்கொள்ளப்பட்டது. நிறுவனத்தின் செயற்பாடுகள், அங்கு காணப்படும்குறைபாடுகள் தொடர்பில் அதிபருடன் கலந்துரையாடியதுடன், மாணவர்களுடனும் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

குறித்த விஜயத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன்,

குறித்த தொழில்நுட்ப நிறுவனத்தில் அதிகளவானோர் தொழில்சார் பயிற்சிக்காக வருகை தருகின்றனர். அவர்களுக்கான பயிற்சிகளை முன்னெடுப்பதற்கு முடியாதவாறு இந்த அரசாங்கம் உள்ளது என அவர் தெரிவித்தார். (9)

# போதைக்கெதிராக திரண்ட மாணவர்கள்





(வவுனியா)

போதைக்கு எதிராக வவுனியா முஸ்லிம் மகாவித்தியாலய மாணவர்கள் கவனயீர்ப்புப்போராட்டம் மற்றும் விழிப்புணர்வு ஊர்வலத்தை நேற்று முன்னெடுத்தனர்.

பாடசாலைக்கு முன்பாக வீதியோரத்தில் ஒன்றுகூடிய மாணவர்கள் போதைப்பொருள் பாவனை மற்றும் அதற்கு எதிரான சுலோகங்களை தாங்கிய வாறு கவனயீர்ப்புப் போராட்டத் தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து பட்டானிச்சூர் சந்திவரை ஊர்வலமாகச் சென்ற மாணவர்கள் மீண்டும் பாடசாலையை வந்தடைந்தனர்.

இந்த நிகழ்வில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், இஸ்லாமிய மதகுரு, பொலிஸ் உத்தியோகத்தர் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர். (9)



போதையற்ற தேசமாக நம் நாட்டினை ஆக்கவேண்டுமென்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தூரநோக்கின் அடிப்படையில் தேசிய ரீதியில் முன்னெடுக்கப்படும் தேசிய போதைப்பொருள் தடுப்புத் தினத்தின் மூன்றாவது நாளாகிய நேற்று போதை தடுப்பு வாசகங்களைத் தாங்கிய பலூன்கள் பறக்கவிடும் நிகழ்வு வவுனியா மாவட்ட செயலகத்தில் வவுனியா மாவட்ட அரச அதிபர் ஐ.எம். ஹனீபா தலைமையில் இடம்பெற்றது.

# வவு.பாடசாலை வளாகத்துக்குள் யானைகள் அட்டகாசம்



வவுனியா புதியவேலன் சின்னக்குளம் ஆனந்த குமாரசுவாமி வித்தியாலய வளாகத்துக்குள் காட்டு யானைகளின் அட்டகாசம் காரணமாக பயன்தரும் மரங்கள் பல சேதமடைந்துள்ளன.

வவுனியா விளக்கு வைத்த குளம் கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குட்பட்ட புதியவேலன் சின்னக்குளம் கிராமம் காட்டுப் பகுதியை அண்டிய கிராமம். இக் கிராமத்தில் தொடர்ச்சியாக காட்டு யானைகள் மக்கள் குடிமனைப் பகுதிகளுக்குள் புகுந்து விவசாயிகளின் பயிர்களையும் பயன்தரும் மரங்களையும் சேதப்படுத்தி வருகின்றன.

அந்தவகையில் நேற்று முன்தினம் இரவு குடிமனை பகுதிக்குள் புகுந்த காட்டு யானைகள் புதியவேலன் சின்னக்குளம் ஆனந்தகுமாரசுவாமி வித்தியாலய வேலியை அறுத்துக் கொண்டு புகுந்து வாழை, மா, பலா உட்பட பல பயன்தரும் மரங்களைப் பிடுங்கி சேதமேற்படுத்தியுள்ளது.


குறித்த பாடசாலை வளாகத்துக்குள் அமைக்கப்பட்டிருக்கும் ஆழ்துளைக்கிணற்றில் மாணவர்கள் கைப்பம்பியால் நீரெடுத்து மிக கஷ்டப்பட்டு பராமரித்து வந்த பயன்தரும் மரங்களை தொடர்ந்தும் யானைகள் சேதப்படுத்தி வருவதால் பாடசாலை சமூகம் விரக்தி நிலையில் இருப்பதாக பாடசாலை ஆசிரியரொருவர் தெரிவித்தார்.

இதேவேளை குடிமனைப் பகுதிகளிலும் விவசாயிகளின் பயிர்களையும் அடிக்கடி காட்டு யானைகள் சேதப்படுத்தி வருகின்றன. இதனால் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். எனவே குறித்த கிராமத்தை சுற்றி யானைவேலி அமைத்துத் தரும்படி புதியவேலன் சின்னக்குளம் கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (9)

# தரணிக்குளம் கிராமத்தில் அமைக்கப்பட்ட அறநெறி பாடசாலை கட்டடத்தை சீரமைத்து தருமாறு கோரிக்கை

வவுனியா பிரதேச செயலகத்துக்குட்பட்ட தரணிக்குளம் கிராமத்தில் சிறி பாலவிநாயகர் அறநெறி பாடசாலை கட்டடம் தரமற்ற விதத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாக தரணிக்குளம் கிராம அபிவிருத்தி சங்கத்தின் செயலாளர் எஸ். ராகுலன் தெரிவித்துள்ளார்.

வீடமைப்பு நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் நாடு முழுவதிலும் அமுன்படுத்தப்பட்ட "சிசு தகம் செவன" நிகழ்சி திட்டத்தின் கீழ் 40 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் நிர்மாணிக்கப்பட்ட சிறுவர்களுக்கான அறநெறி பாட



சாலை கட்டடமானது தரமற்றதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளதாக பிரதேச மக்களால் தெரிவிக்கப்படுகிறது.

சிறுவர்களுக்காக அமைக்கப்பட்ட குறித்த கட்டடமானது கடந்த பெப்ரவரி மாதம் அடிக்கல் நாட்டப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

அரச அபிவிருத்தி மற்றும் கட்டுமானக் கூட்டுத்தாபனத்தால் ஒப்பந்தம் பெறப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட அறநெறி பாடசாலை கட்டடமானது மக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட முன்பாகவே கட்டடம், தரை மற்றும் சுவர்களில் வெடிப்புக்கள் விழுந்து உடைய ஆரம்பித்துள்ளதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதன் காரணமாக எதிர்ப்பு வெளியிட்ட கிராம மக்கள், தரமற்ற இக்கட்டடத்தில் அறநெறி பாடசாலை இயங்கினால் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை அறநெறிக் கல்விக்கு அனுப்ப மறுத்துள்ளனர்.

கிராம மக்களின் எதிர்ப்பு காரணமாக வெடிப்புக்கள் ஏற்பட்ட கட்டடத்தின் தளம் உடைக்கப்பட்டு மீண்டும் நிர்மாணிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கும் பிரதேச வாசிகள் இக்கட்டடம் தரமற்ற சீமெந்து பயன்படுத்தி கட்டப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

அத்துடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயத்தில் தலையிட்டு தரமான முறையில் கட்டடத்தை அமைத்து தரும்படி கோரிக்கை விடுத்துள்ளனர். (9-250)

## வவு.குளங்களில் நீர் வற்றி மீன்கள் இறப்பதால்

# தொற்றுநோய் பரவும் அபாயம்

வவுனியா, நம்பவெட்டிகுளத்தின் நீர் வற்றி குளத்தில் உள்ள மீன்கள் இறந்து, புழுப்பிடித்துள்ளமையால் நோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

வவுனியாவில் ஏற்பட்டுள்ள வரட்சியான காலநிலை காரணமாக குளத்து நீர்மட்டம் சடுதியாக குறைவடைந்து வருகின்றது. இந்நிலையில் மகாறம்பக்குளம் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட நீர்ப்பாசன திணைக்களத்தின் கீழ் உள்ள நம்பவெட்டிகுளத்தின் நீரும் வற்றிய நிலையில் அக்குளத்தை நம்பிவாழும் இருபது மீனவ குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. மீன்கள் இறந்து புழுப் பிடித்து காணப்படுவதுடன், இலையான்களும் மொய்ப்பதனால் துர்நாற்றம் வீசுகின்றது.

இவ்வாறான சூழ்நிலையிலும் குளத்தில் எஞ்சி இருக்கும் மீன்களை பிடித்து வியாபார நடவடிக்கையிலும் ஈடுபடுகின்றனர். இதனால் அப்பகுதி மக்களுக்கு தொற்று நோய்கள் ஏற்படக் கூடிய அபாய நிலை ஏற்பட்டுள்ளது. வீசும் அதிக காற்றினால் துர்நாற்றம் காவிச் செல்லப்படுவதனால் சுவாச நோய்கள் ஏற்படும் அபாய நிலையும் ஏற்பட்டுள்ளது.



அத்துடன், அவ்வழியினூடாக செல்லும்பொது மக்கள், பாடசாலை மாணவர்கள், முதியவர்கள் எனப்பலரும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நம்பவெட்டிக்குளத்தின் கீழ் விதைக்கப்பட்டுள்ள சிறுபோக விவசாய நிலங்களுக்கு அதிகளவிலான நீரை பயன்படுத்தியமையாலும் வரட்சியினாலும் குறித்த குளத்து நீர் வற்றியுள்ளது. இதனால் குளத்தின் கீழான சிறுபோக நெற்செய்கையும் பாதிப்படைந்துள்ளது.

குறித்த குளத்தின் நீர்மட்டத்தை கவனத்தில் கொள்ளாது சிறுபோக நெற்செய்கைக்கு நீர் இறைக்கப்பட்டமையும் சம்பந்தப்பட்டவர்களின் பொறுப்பற்ற செயற்பாடும் இத்தகைய பாதிப்பிற்கு முக்கிய காரணம் எனவும் கிராம மக்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

உரிய அதிகாரிகள் இது தொடர்பில் உடனடியாக கவனம் செலுத்த வேண்டும் எனவும் இறந்த மீன்களை அகற்றி மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் எனவும் அக்கிராம மக்கள் கோரியுள்ளனர். (9-250)

## பெண்கள் அமைப்பின் தலைவி மீது தாக்குதல்

(வவுனியா)

வவுனியா ஆசிகுளம் பொது நோக்கு மண்டபத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற பொது அமைப்புக்களின் கலந்துரையாடலின்போது மதுபோதையில் அங்கு சென்ற நபர் ஒருவர் சனசமூக நிலைய செயலாளரும் கமக்கார பெண்கள் அமைப்புத் தலைவியுமான இரண்டு பிள்ளைகளின் தாயாரான புனித லோஜினி மீது கொட்டனால் தாக்குதல் நடத்தியதால் அவர் தலையில் காயமடைந்துள்ளார்.

இச்சம்பவத்தில் அவரைக் காப்பாற்றச் சென்ற ஆண் ஒருவரும் தாக்குதலில் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் இரவு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா பொது அமைப்புக்களின் கலந்துரையாடல் ஒன்று பொது நோக்கு மண்டபத்தில் இடம்பெற்றது.

அப்போது மதுபோதையில் அங்கு சென்ற காத்தான்குடியைச் சேர்ந்த நபர் ஒருவர் தலைவி மீது தாக்குதல் நடத்தியதுடன் அங்குள்ள பெண்களை தகாத வார்த்தைகளால் பேசியுள்ளார்.

தாக்குதல் நடத்திய நபர் அங்கிருந்து தொலைபேசியில் பொலிஸாருடன் தொடர்புகொண்டுள்ளதுடன் அதன் பின்னர் மக்களிடம் எனக்கு இருக்கும் பணத்திற்கும் எனக்கு இருக்கும் பொலிஸ், அரசியல் செல்வாக்கிற்கும் என்னை ஒன்றும் செய்ய முடியாது என்றும் உங்களை அனைவரையும் வீடு புகுந்து வெட்டுவேன் என்று எச்சரித்துவிட்டு சிதம்பரபுரம் பொலிஸ் நிலையத்திற்கே சென்றுள்ளதாக சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்த விசாரணைகளை பொலிஸார் பக்கச்சார்பின்றி நடத்தி வன்முறையில் ஈடுபட்ட நபருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்குமாறும் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர். (9-250)

## நல்லிணக்க விழிப்புணர்வு நிகழ்வு



மாணவர்கள் மத்தியில் இனம்,மதம் சார்ந்த பிரிவினைகளை நீக்கி நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் நிலைமாறுகால நீதி மற்றும் மதங்கள் ஊடாக நல்லிணக்கம் பற்றிய தெளிவூட்டும் விசேட நிகழ்வு நேற்றுக் காலை மன்/சித்திவிநாயகர் இந்து தேசிய பாடசாலை மற்றும் மன்/அல்ஹஸ்கார் தேசிய பாடசாலையிலும் இடம்பெற்றது.

தேசிய சமாதான பேரவை மற்றும் மன்னார் துயர்துடைப்பு மறுவாழ்வு சங்கத்தின் ஒழுங்கமைப்பில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அண்மைக்காலமாக நாட்டில் இடம்பெறும் மத, இன முரண்பாடுகளின் மத்தியில் மாணவ சமுதாயம் எவ்வாறு விழிப்புடன் செயற்படலாம் என்பது தொடர்பாகவும் நல்லெண்ணத்தை கட்டியெழுப்புவதில் மாணவர்களின் பங்களிப்பை எவ்வாறு முன்னேற்றுவிக்கலாம் என்பது தொடர்பாக ஆசிரியர்களாலும் மாணவர் தலைவர்களாலும் விரிவுரைகள் வழங்கப்பட்டன. அத்துடன் நல்லிணக்கத்தை வெளிப்படுத்துவதற்கான செயற்பாடுகள் அடங்கிய சுவரொட்டிகளும் மாணவர்கள் மத்தியில் காட்சிப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (9-285)

## முல்லைத்தீவு ஒலுமடு அம்பகாமம் பிரதேசத்துக்கான போக்குவரத்து வசதியை ஏற்படுத்தித்தருமாறு கோரிக்கை

முல்லைத்தீவு ஒலுமடு அம்பகாமம் பிரதேசத்திற்கான போக்குவரத்து வசதிகள் மேற்கொள்ளப்படாமையினால் பொது மக்கள் மற்றும்பாடசாலை மாணவர்கள் போக்குவரத்தில் சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டிசுட்டான் பிரதேச செயலர்பிரிவிற்குட்பட்ட ஒலுமடு, அம்பகாமம் கிராமத்திற்கான போக்குவரத்து வசதிகள் இன்மையால் இந்தப்பிரதேசத்தில் உள்ள 45 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பாடசாலைகளுக்குச் செல்வதில் சொல்லொணாத்துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

இந்தப்பிரதேசத்திலிருந்து பாடசாலை மாணவர்களுக்கான பேருந்து சேவையினை முன்னெடுக்குமாறு கிராம மட்ட அமைப்புக்களாலும் மக்கள் பிரதிநிதிகளாலும் சம்பந்தப்பட்ட தரப்புக்குத் தெரியப்படுத்தப்பட்டபோதும் இதுவரை எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என பிரதேசமக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தற்போது 45 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் இந்தப்பகுதியிலிருந்து பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் தமது கல்வியை தொடரவேண்டிய நிலை காணப்படுகின்றது.

இதனைவிட, இந்தப்பிரதேசத்தில் போக்குவரத்து வசதியின்மை போன்ற பல்வேறு காரணங்களால் கூடுதலான சிறார்கள் பாடசாலைக்கல்வியை விட்டு இடைவிலகியுள்ளநிலைமைகாணப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் பொதுமக்களும் பெரும்சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இந்நிலையில் இப்பிரதேசத்திற்கான போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு பல்வேறு தரப்பினரும் கோரிக்கைவிடுத்துள்ளனர்.(9-315)

## அரச வயல்காணியை தனியாருக்கு வழங்க நடவடிக்கை தடுத்து நிறுத்துமாறு வவு.தட்டான்குளம் கிராமமக்கள் கோரிக்கை

வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலகத்திற்குட்பட்ட தட்டான்குளம் கிராமத்தில் மக்களுக்கு வழங்குவதாக பிரதேச செயலாளரால் வாக்குறுதி வழங்கப்பட்ட அரச வயல் காணியை தனியார் ஒருவருக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கிராம மக்கள் குற்றச்சாட்டியுள்ளனர்.

நாட்டில் நடைபெற்ற யுத்தத்தின் காரணமாக பல்வேறு பகுதிகளிலிருந்து அகதிகளாக வந்த மக்கள் வவுனியாவின் பல்வேறு பகுதிகளில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டனர். அந்தவகையில், 2006 ஆம் ஆண்டு தட்டான்குளத்தில் 52 குடும்பங்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு கிராம மக்களின் வாழ்வாதாரத்திற்காக குடும்பத்திற்கு ஒரு ஏக்கர் வயல் காணி அரசாங்கத்தினால் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது.

குறித்த அரச வயல்காணியை கிராம மக்களுக்கு சொந்தமாக வழங்க வாக்குறுதி வழங்கப்பட்ட நிலையில் தற்போது தனிநபர் ஒருவருக்கு காணியின் ஒரு பகுதியை கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தட்டான்குளம் கிராம மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து வடக்கு மாகாண ஆளுநருக்கு கடிதம் வழங்கியுள்ளதாகவும் ஆளுநர் தங்களுக்கு நல்ல ஒரு தீர்வை பெற்றுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-250)

## வடக்கில் போதைப்பொருளை கட்டுப்படுத்துவோம்

### அங்கஜன் எம்.பி.

வடக்கில் போதைப் பொருளை கட்டுப்படுத்தி இளைஞர்களை சரியான பாதையில் நகர்த்திச் செல்வோம் என நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் தேசிய செயற்றிட்டங்களின் ஒருங்கிணைப்பாளருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

போதை ஒழிப்பு வாரத்தின் வடமாகாண நிகழ்வு நேற்று முன்தினம் கிளிநொச்சியில் இடம் பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

போதைவஸ்து பாவனையினால் பொருளாதாரம், கல்வி, அபிவிருத்தி ஆகியவற்றிற்கு பெரும் தடையாக உருவெடுத்து காரணியாகவும் அமைந்துள்ளது.

பணபலம் படைத்தவர்களின் பாவனை என்பதை தாண்டியும் இன்று வறியவர்களின் வளர்ச்சியையும்பாதிப்படைய செய்துள்ளது.

நாம் ஒவ்வொரு செங்கல்லாக அடியெடுத்து வைக்கும் சூழலில் யுத்தத்திற்கு பின்னர் கல்வி, அபிவிருத்தி, பொருளாதார வளர்ச்சியையும் குந்தகப்படுத்தியுள்ளது.

எமது முன்னேற்றத்தை நலனாக கொண்டு எமது கிராமம், எமது மாவட்டம், எமது மாகாணத்தைச் சகல வழிகளிலும் முன்னேற்றம் அடைய செய்வது அனைவரினதும் ஒன்றிணைந்த பொறுப்புடன் கூடிய கடமை எமது நாட்டினும் போதைவஸ்துக்களை கட்டுப்படுத்தி ஒழிப்பதன் மூலம் எமது நாட்டிற்கு விமோசனம் கிடைக்கும் என்பதை நாட்டின் தலைவரும் மக்களும் நன்கு உணர்ந்துள்ளனர்.

வடமாகாணத்தில் போதைவஸ்தை கட்டுப்படுத்தி துடைத்தெறிந்து எமது இளைஞர்களை சரியான பாதையில் நகர்த்தி செல்வோம்.

சிறந்த எதிர்காலத்தை, பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தி எமது பிரதேசத்தை கல்வி, பொருளாதாரம், கலாசார ரீதியாக மீண்டும் பலம் பெறுவதற்கு உறுதியாக நேரான திசை நோக்கிப் பயணிப்போம் என மேலும் தெரிவித்தார். (9)



# வடக்கில் படைப்புழுவின் தாக்கம் தொடர்பான மதிப்பீடுகள் தெளிவின்மையால் இழப்பீடுகள் வழங்கப்படவில்லை

படைப்புழுவின் தாக்கம் தொடர்பில் உரிய மதிப்பீடுகள் தயாரிக்கப்படாமையினாலே அதற்கான இழப்பீடுகள் கிடைக்கப் பெறவில்லை என வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளரினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பல பாகங்களிலும் ஏற்பட்ட படைப்புழுவின் தாக்கம் காரணமாக பெருமளவான விவசாயிகள் பாதிக்கப்பட்டிருந்த போதும், வடமாகாணம் தவிர ஏனைய மாகாணங்களில் படைப்புழுவின் தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான நட்டஈடுகள் வழங்கப்பட்டுள்ளன.

வடக்குமாகாணத்தில் படைப்புழுவின் தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட தமக்கு இழப்பீடுகளைப் பெற்றுத்தருமாறு பாதிக்கப்பட்ட விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.


இந்நிலையில் முல்லைத்தீவு மாவட்டச்செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்திலும் இக்கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

அதாவது முல்லைத்தீவு மாவட்டத்தில் படைப்புழுவின் தாக்கம் காரணமாக 24.25 ஏக்கர் சோளச் செய்கை அழிவடைந்துள்ளதுடன், 24 வரையான விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர், என்றும் இதற்கான இழப்பீடுகள் எதுவும் தமக்கு கிடைக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டதையடுத்து கருத்துத் தெரிவித்த அமைச்சின் செயலாளர் படைப்புழுவின் தாக்கம் தொடர்பான மதிப்பீடுகள் மேற்கொள்ளும்போது அந்த அழிவுகள் முழுமையான அழிவுகளாகவே மதிப்பிடப்படுகின்றன.

ஏனைய வெள்ளப்பாதிப்புக்கள் போன்று விகிதாசார அடிப்படையில் மதிப்பிடப்படுவதில்லை இலங்கையின் சகல மாகாணங்களிலும் படைப்புழுவின் தாக்கம் கண்டறியப்பட்டு அதற்கான இழப்பீடுகள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் வடக்கில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகள் தொடர்பில் ஏற்பட்ட தெளிவின்மையே இழப்பீடுகள் கிடைக்கப்பெறவில்லை. அதற்கான இழப்பீடுகளை உரியவாறு தயாரித்து விண்ணப்பிக்கும்போது அதற்கான இழப்பீட்டை பெற்றுக்கொள்ள முடியும்என்று தெரிவித்துள்ளார். (9-315)

பாரதம்

# ஐ.எஸ்.தீவிரவாத அமைப்புடன் தொடர்பு; நான்கு பேர் கொல்கத்தாவில் கைது



(கொல்கத்தா)

ஐ.எஸ். தீவிரவாத அமைப்புடன் தொடர்புடைய நான்கு பேரை கொல்கத்தா பொலிஸார் நேற்று முன்தினம் செவ்வாய் கிழமை கைது செய்தனர்.

ஐ.எஸ்.தீவிரவாத அமைப்பினருடன் தொடர்புடைய நியோ-உல்-முஜாகிதீன் பங்களாதேஷ் என்ற அமைப்பைச் சேர்ந்த நால்வர் கொல்கத்தா பகுதியில் தங்கியிருப்பதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலை அடுத்தே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது குறித்து பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில், கைது செய்யப்பட்ட நால்வரில் 3 பேர் பங்களாதேஷை சேர்ந்தவர்கள் எனவும், மற்றொருவர் இந்தியாவைச் சேர்ந்தவர் எனவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இவர்கள் மூன்று பேரும் சட்டவிரோதமாக இந்தியாவில் தங்கியுள்ளதுடன், இங்குள்ள சிலரை ஐ.எஸ்.தீவிரவாத அமைப்பில் சேர்ப்பதற்காக வருகை தந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து 4 தொலைபேசிகள், ஜிகாதி இலக்கியப் புத்தகங்கள் உள்ளிட்டவை பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன் இது குறித்து பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (7)

# தமிழகத்துக்கான நீரை திறக்க கர்நாடகாவுக்கு உத்தரவு

(சென்னை)

தமிழகத்திற்கு ஜூன், ஜூலை மாதத்திற்கான நீரைத்திறக்க கர்நாடகத்திற்கு காவிரி மேலாண்மை ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

காவிரி மேலாண்மை ஆணையகக்கூட்டம் தலைவர் மசூத் உசேன் தலைமையில் டில்லியில் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை நடைபெற்றது.

இதன்போது காவிரி மேலாண்மை ஆணையக உத்தரவின் படி, கர்நாடக அரசு தண்ணீர் திறந்துவிட உத்தரவிடும்படி தமிழகம் சார்பில் வலியுறுத்தப்பட்டது.

கர்நாடகா அரசு தண்ணீர் வழங்காததாலும், நீர் இருப்பு குறைவாக உள்ளதாலும் ஜூன் 21இல் மேட்டூர் அணையை திறக்க இயலவில்லை. ஜூன் மாதத்திற்கான 9.19 கன அளவு நீரையும் கர்நாடக அரசு இன்னும் முழுமையாக வழங்கவில்லை எனவும் தமிழக அரசு சுட்டிக்காட்டியது.

ஆகையால் ஜூன், ஜூலையை தொடர்ந்து வரும் மாதங்களுக்கான நீரையும் சேர்த்து 31.24 கன அளவு தண்ணீர் திறக்க உத்தரவிட வேண்டுமென தமிழகம் சார்பில் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

இந்த கூட்டத்தின் முடிவில், தமிழகத்திற்கு ஜூன், ஜூலை மாதத்திற்கான நீரை திறக்க கர்நாடகத்திற்கு காவிரி மேலாண்மை ஆணையகம் உத்தரவிட்டுள்ளது.

ஜூன் மாதத்திற்கான 9.19 கன அளவு நீரையும் ஜூலை மாதத்திற்கான 31.24 கன அளவு நீரையும் முழுமையாக வழங்க உத்தரவு பிறப்பித்துள்ளது. (7)

# வீடொன்றில் தீ விபத்து 3 சிறுவர்கள் உயிரிழப்பு

(சிட்னி)

அவுஸ்திரேலியாவின் நியு சவுத் வேல்ஸ் மாநிலத்தின் சிங்லேடன் பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் இடம்பெற்ற திடீர் தீ விபத்து காரணமாக மூன்று சிறுவர்கள் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தலைநகர் சிட்னியில் இருந்து 200 கிலோமீற்றர் தொலைவில் உள்ள குறித்த பகுதியில் நேற்று புதன்கிழமை அதிகாலை 3.30 அளவில் விபத்து இடம் பெற்றதாகவும் உடனடியாக தீயணைப்பு படையினர் அழைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தீ விபத்தின் போது வீட்டினுள் சிக்கிக் கொண்ட 11 வயதான சிறுவன் சடலமாக மீட்கப்பட்டதுடன், அவனது 5 வயதான இரட்டை சகோதரிகளும் மீட்கப்பட்டு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்தனர். (7)

# ஈரான் மீதான தாக்குதலை கைவிட்ட ட்ரம்பிற்கு 65 வீதம் பேர் ஆதரவு



(வோஷிங்டன்)

ஈரான் நாட்டின் மீதான தாக்குதலை கைவிட அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தீர்மானித்தமைக்கு 65 சதவீத அமெரிக்கர்கள் ஆதரவும், 14 சதவீத பேர் எதிர்ப்பும் தெரிவித்துள்ளதாக கருத்துக்கணிப்பில் தெரியவந்துள்ளது.

ஈரானில், அமெரிக்க உளவு விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதை தொடர்ந்து ஈரான் மீது தாக்குதல் நடத்த அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் உத்தரவிட்டார்.

பின்னர் அவர் உடனடியாக தனது உத்தரவை மீளப் பெற்றதுடன், கடுமையான பொருளாதார தடைகளை விதிப்பதற்கான உத்தரவு பத்திரத்தில் கைச்சாத்திட்டார்.

ட்ரம்பின் இந்த நடவடிக்கைக்கு பெரும்பான்மையான அமெரிக்கர்கள் ஆதரவு தெரிவித்துள்ளதாக தனியார் நிறுவனம் நடத்திய கருத்துக்கணிப்பில் தெரியவந்துள்ளது. (7)

# மலேசியாவில் நச்சுக்க... 75 மாணவர்களுக்கு தி...

(கோலாலம்பூர்)

மலேசியாவில் பசிர் குடங் நகரில் உள்ள 15 பாடசாலைகளில் சுமார் 75 மாணவர்களுக்கு திடீர் மூச்சுத் திணறல் ஏற்பட்டது.

மலேசியாவின் ஜோகூர் மாகாணத்தில் உள்ள பசிர் குடங் நகர் தொழில்துறை நகரமாக விளங்குகிறது.

இங்குள்ள தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் நச்சுக் கலந்த புகை காற்றில் கலந்து பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது.

மேலும் அங்குள்ள கிம்கிம் என்ற ஆற்றில் இரசாயனக் கழிவுகள் கொட்டப்படுகின்றன. அதில் இருந்து நச்சுவாயு வெளியேறி அதனை சுவாசிக்கும் மக்கள் பாதிக்கப்படுகின்றனர். குறிப்பாக சிறுவர்கள் அதிக பாதிப்புக்கு உள்ளாகின்றனர்.

கடந்த மார்ச் மாதம் நச்சுக்காற்றை

400 பாடசாலைக...



சுவாச... டோரு...

# சென்னையில் குடி... கவலை தெரிவித்த ...

(கலிபோர்னியா)

சென்னையில் நிலவும் குடிநீர் தட்டுப்பாடு மற்றும் தண்ணீருக்காக மக்கள் படும் துயரம் குறித்து ஹொலிவுட் நடிகர் லியோனார்டோ டிகாப்ரியோ கவலை தெரிவித்துள்ளார்.

அண்மையில் அமெரிக்காவின் முன்னணி செய்தி நிறுவனமான நியூயோர்க் டைம்ஸ், சென்னை குடிநீர் பஞ்சம் குறித்து செய்தி வெளியிட்டு இருந்தது. சென்னையின் முக்கிய குடிநீர் ஆதாரமாக விளங்கும் புழல் ஏரியின் செயற்கைக்கோள் புகைப்படம் இடம்பெற்றுள்ளது. அந்தப் புகைப்படத்தில், ஜூன் 15 ஆம் திகதி 2018ஆம் ஆண்டு புழல் ஏரியின் நீர் இருப்பின் அளவோடு, 2019ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் கடந்த ஞாயிறு அன்று எடுக்கப்பட்ட புழல் ஏரியின் நீர் இருப்பின் அளவு ஒப்பிடப்பட்டுள்ளது. சென்னையில் சுமார் 46 இலட்சம் மக்களுக்கு புழல் ஏரி தண்ணீர் வழங்குகிறது என குறிப்பிடப்பட்டு உள்ளது.

இந்த நிலையில் "மழை மட்டுமே சென்னை மக்களை தண்ணீர் பஞ்சத்திலிருந்து காக்க முடியும்" என ஹொலிவுட் நடிகர் லியோனார்டோ டிகாப்ரியோ தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவிட்டு வருத்தம் தெரிவித்துள்ளார்.

"மழையால் மட்டுமே சென்னையை இந்த சூழ்நிலையிலிருந்து காப்பாற்ற

முடியு... றும் த... முக்கி... வறை... மான...

க...

அவசு... உள்ள... தொட... பெற... றிற்க...

நீ... ஹோ... தற்கா... என. மாற்... றிந்து

# பாகிஸ்தானின் பொருளாதார நெ... அரபு நாடுகள் நிதி வழங்க ...



பாகிஸ்தானுக்கு சுமார் 3 பில்லியன் அமெரிக்க டொலர் மதிப்பிலான நிதியுதவியை வழங்க கட்டார் மன்னர் ஷேக் தமீம் பின் ஹமாத் தீர்மானித்துள்ளதாக அதன் வெளியுறவு அமைச்சர் ஷேக் முகமது பின் அப்துல் ரஹ்மான் அல் தானி அறிவித்துள்ளார் என்று கட்டார் செய்தி நிறுவனம் ஒன்... கப்பட்டுள்ளது.

கடந்த ஞா... விஜயம் செய்த க... ஸ்தான்' என்ற... பாகிஸ்தான் அ...

அத்தோடு, ... விடயங்களை ... பயங்கரவாத ... தொடர்பான ... ஒத்துழைப்பு கு... பாகிஸ்தானும் ...

இந்நிலையி... எதிர்கொண்டுள்... யில் குறித்த அ...

கடந்த 11 ம... ளாதார பிரச்ச... முன்வந்த நா... முன்னதாக, ...

# க்காற்றை சுவாசித்த
# த திடீர் மூச்சுத்திணறல்

## லைகள் மூடல்



சுவாசித்த ஆயிரத்துக்கும் மேற்பட் டோருக்கு உடல் நலம் பாதிக்கப்பட்டு வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டனர்.

100-க்கும் மேற்பட்ட பாடசாலைகள் மூடப்பட்டன. இந்த நிலையில் நேற்றுமுன் தினம் பசிர் குடங் நகரில் உள்ள 15 பாடசாலைகளில் சுமார் 75 மாணவர்களுக்கு திடீர் மூச்சுத் திணறல் ஏற்பட்டது.

மேலும் அவர்கள் தொடர்ச்சியாக வாந்தி எடுத்தனர். இதையடுத்து உடனடியாக அவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.


நச்சுக்காற்றை சுவாசித்ததே மாணவர்களின் உடல் நலம் பாதிக்கப்பட்டதற்கு காரணம் எனத் தெரியவந்தமையால் பசிர் குடங் நகரில் உள்ள 400இற்கும் மேற்பட்ட பள்ளிகளை ஒரு வார காலத்துக்கு மூட கல்வி அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது. (7)

# டிநீர் தட்டுப்பாடு
# த ஹொலிவுட் நடிகர்

முடியும். முற்றிலும் வெற்று கிணறுமற்றும் தண்ணீர் இல்லாத நகரம் நான்கு முக்கிய நீர் தேக்கங்கள் முற்றிலும் வறண்டு விட்டன. தென்னிந்திய நகரமான சென்னை நெருக்கடியில் உள்ளது.

கடுமையான நீர் பற்றாக்குறை அவசர தீர்வுகளுக்காக கட்டாயத்தில் உள்ளது. குடியிருப்பாளர்கள் அரசாங்க தொட்டிகளில் இருந்து தண்ணீரைப் பெற மணிக்கணக்கில் வரிசையில் நிற்க வேண்டியுள்ளது.

நீர் நிலைகள் குறைந்துவிட்டதால், ஹோட்டல்களும், உணவகங்களும் தற்காலிகமாக மூடத் தொடங்கி உள்ளன. நகரத்தில் உள்ள அதிகாரிகள் மாற்று நீர் ஆதாரங்களைக் கண்டறிந்து வருகின்றனர் . ஆனால் சமூகம்



தொடர்ந்து மழைக்காக பிரார்த்தனை செய்கிறது" என லியோனார்டோ டிகாப்ரியோ கூறி உள்ளார். (7)

# ர நெருக்கடிக்கு
# ங்க தீர்மானம்

றுவனம் ஒன்றின் டுவிட்டர் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பாகிஸ்தானுக்கு விஜயம்செய்த கட்டார்மன்னருக்கு, நிஷான்-இ-பாகிஸ்தான்' என்ற மிக உயர்ந்த சிவில் விருதை பாகிஸ்தான் அரசாங்கம் வழங்கியிருந்தது.

அத்தோடு, வர்த்தகம் மற்றும் பொருளாதார விடயங்களை தவிர, பண மோசடி மற்றும் பயங்கரவாத நிதியுதவியைக் கட்டுப்படுத்துவது தொடர்பான உளவு தகவல் பரிமாற்றத்தில் ஒத்துழைப்பு குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில், பாகிஸ்தானும் கட்டாரும் கைச்சாத்திட்டன.

இந்நிலையில் பொருளாதார நெருக்கடிகளை சந்தித்துக் கொண்டுள்ள பாகிஸ்தானுக்கு உதவும் வகையில் குறித்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த 11 மாதங்களில் பாகிஸ்தானை பொருளாதார பிரச்சினையிலிருந்து மீட்டெடுக்க, முன்வந்த நான்காவது நாடு கட்டார் ஆகும். முன்னதாக, சீனா 4.6 பில்லியன் அமெரிக்க டொலர் மதிப்பிலான வைப்பு மற்றும், வணிக கடன்களை வழங்கியது.

அதேபோன்று, சவுதி அரேபியா 3 பில்லியன் அமெரிக்க டொலர் ரொக்க வைப்புத் தொகையும், 3.2 பில்லியன் அமெரிக்க டொலர் மதிப்பிலான கச்சா எண்ணெய் விநியோக வசதியையும் வழங்கியது. ஐக்கிய அரபு அமீரகம் 2 பில்லியன் அமெரிக்க டொலர் ரொக்க வைப்புத் தொகையை வழங்கியது.

பிரதமர் இம்ரான் கான் தலைமையிலான பாகிஸ்தான் தெஹ்ரீக்-இ- இன்சாப் (பி.டி.ஐ) அரசு, பதவியேற்ற வெறும் ஒரு வருடத்தில், வெளிநாட்டு கடன்களையே அதிகளவாக பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், அடுத்த வருடத்திற்கான வரவு- செலவுத் திட்டத்தின் அரைபங்கு கடன்களை செலுத்துவதற்கான திட்டங்களையே கொண்டுள்ளதாக பிறிதொரு தகவல் வெளியாகியுள்ளது. (7)

# தடைகளை விதிக்கும் அமெரிக்கா
# சமாதானத்தை விரும்புவதாக புளுகுகிறது


## ஈரான் ஜனாதிபதி கடும் குற்றச்சாட்டு

(டெஹ்ரான்)

ஒருபுறம் வரிசையாக தடைகளை விதிக்கும் அமெரிக்கா மறுபுறம் சமாதானப் பேச்சுக்கு கதவுகள் திறந்திருப்பதாக பொய் சொல்கிறது என ஈரான் ஜனாதிபதி ஹசன் ரவுகானி குற்றம் சாட்டியுள்ளார்.

அமெரிக்காவின் ஆளில்லா உளவு விமானத்தை ஈரான் சுட்டு வீழ்த்திய பின்னர் இருநாடுகளுக்கும் இடையிலான பகை பன்மடங்கு அதிகரித்தது.

இதைத்தொடர்ந்து ஈரான் மீது புதிய பொருளாதார தடைகளை பிறப்பித்து அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உத்தரவிட்ட அதேவேளையில், ஈரானுடன் அனைத்து விவகாரங்கள் தொடர்பாக ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தை நடத்துவதற்



கான சமாதான கதவுகளை திறந்தே வைத்திருக்கிறோம் என அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜான் போல்டன் தெரிவித்தார்.

இந்நிலையில், ஒருபுறம் வரிசையாக தடைகளை விதிக்கும் அமெரிக்கா மறுபுறம் சமாதானப் பேச்சுக்கு கதவுகள் திறந்திருப்பதாக புளுகுகிறது என ஈரான் ஜனாதிபதி ஹசன் ரவுகானி குற்றம்சாட்டியுள்ளார். (7)

# ராகுல்காந்தி ராஜினாமா முடிவில் உறுதி!
# வீட்டின்முன் இளைஞர் காங்கிரஸார் தர்ணா

(டில்லி)

காங்கிரஸ் தலைவர் பதவியை ராஜினாமா செய்யும் முடிவில் ராகுல் காந்தி உறுதியாக இருப்பதால், அவரது வீட்டின் முன் இளைஞர் காங்கிரஸார் திரண்டு தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பாராளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி படுதோல்வி அடைந்தது. இதற்கு தார்மீக பொறுப்பேற்று கட்சியின் தலைவர் பதவியில் இருந்து விலக ராகுல் காந்தி முடிவு செய்தார். ஆனால் அவர் தனது ராஜினாமா முடிவை திரும்ப பெற வேண்டும் என சிரேஷ்ட தலைவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். அவர்களின் வேண்டுகோளை இதுவரை ராகுல் காந்தி ஏற்கவில்லை.



இந்நிலையில், பாராளுமன்ற வளாகத்தில் நேற்று காங்கிரஸ் எம்.பிக்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சோனியா காந்தி, ராகுல் காந்தி கலந்துகொண்டனர்.

இதையடுத்து ராகுல் காந்தியின் வீட்டின் முன் ஏராளமான இளைஞர் காங்கிரஸார் திரண்டு போராட்டம் நடத்தினர்.

காங்கிரஸ் தலைவர் பதவியை ராஜினாமா செய்யும் முடிவை ராகுல் திரும்ப பெற வலியுறுத்தி அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது. (7)

# ஓமன் வளைகுடா பகுதியில்
# கடற்படைப் பாதுகாப்புடன் செல்லும்
# இந்திய எண்ணெய் கப்பல்கள்


(டெஹ்ரான்)

ஓமன் வளைகுடாப் பகுதியில் செல்லும் இந்திய எண்ணெய்க் கப்பல்களின் பாதுகாப்புக்காக கடற்படை வீரர்களும் உடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

ஓமன் வளைகுடாப் பகுதியில் நோர்வே மற்றும் சிங்கப்பூருக்குச் சொந்தமான எண்ணெய்க் கப்பல்கள் மீது மர்மமான முறையில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதே பகுதியில் கடந்த மே மாதம் சவுதிக்கு சொந்தமான 2 எண்ணெய்க் கப்பல்கள் உட்பட நான்கு எண்ணெய் கப்பல் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

எண்ணெய்க் கப்பல்களை குறிவைத்துதாக்குதல் நடத்துவதன் மூலம் உலகளவில் எண்ணெய் விலை மிகவேகமாக உயர்ந்தது.



இந்தத் தாக்குதலை ஈரான் நடத்தியதாக அமெரிக்காவும், அமெரிக்கா நடத்தியதாக ஈரானும் ஒருவரை ஒருவர் பரஸ்பரம் குற்றஞ்சாட்டி வந்தனர்.

இந்நிலையில், ஓமன் வளைகுடாப் பகுதியில் செல்லும் இந்திய எண்ணெய் கப்பல்களின் பாதுகாப்புக்காக கடற்படை வீரர்களும் உடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் ஒரு எண்ணெய் கப்பலுக்கு 3 முதல் 4 கடற்படை வீரர்கள் வீதம் பாதுகாப்புக்காக அனுப்பப்பட்டுள்ளனர். (7)

# ஜனாதிபதி வேட்பாளருக்கான போட்டியில் வீண் விரயமாகும் பொதுமக்களின் வரிப்பணம்

## ஐ.தே.க.மீது செஹான் குற்றச்சாட்டு



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் காணப்படும் ஜனாதிபதி வேட்பாளருக்கான போட்டி முதல் கொண்டு அரசாங்கத்தின் அரசியல் தேவைகள் அனைத்திற்கும் பொதுமக்களின் வரிப் பணம் வீணடிக்கப்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்க குற்றம் சாட்டியுள்ளார்.

பொறளை வஜிராஷ்ராம விகாரையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு குற்றம்சாட்டினார்.

மக்களின் பணம் அரசாங்கத்தின் சுய தேவைகளுக்காகவே பயன்படுத்தப்படுகிறது. அரசாங்கத்தினர் மக்களைப் பற்றி சிந்திக்காமலேயே செயற்பட்டு வருகின்றனர். ஐக்கிய தேசியக் கட்சிக்குள் நிலவும் ஜனாதிபதி வேட்பாளருக்கான போட்டிக்காக மக்களின் பணத்தை வீணடிக்கின்றார்கள்.

ஆகவே தொடர்ந்து மக்களின் பணத்தை வீணடிக்கும் செயற்பாடுகளை அரசாங்கம் உடனடியாக நிறுத்தி மோசடிகள் தொடர்பான விசாரணைகளை ஆரம்பிக்க வேண்டும்.

பாதிக்கப்பட்ட பிரிவினருக்கு அரசியல் பழிவாங்கல்களுக்காக சமுர்த்தி நிவாரணங்களை பெற்றுக்கொடுக்க இடமளிக்க முடியாது. கடந்த ஐந்து வருட காலப் பகுதிக்குள் மக்களின் செலவுகள் அதிகரித்து வருமானம் குறைவடைந்துள்ளது.

எனவே 2015 ஆம் ஆண்டு முதல் மக்களின் வருமான வீதம் குறைவடைந் துள்ளமையினால் அரசாங்கம் மீதான எதிர்ப்புகளில் இருந்து தப்பித்துக்கொள்ளவும் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களை பாதுகாத்துக் கொள்வதற்காகவுமே இந்த சமுர்த்தி நிவாரணங்களை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (7)

# அரசியலமைப்பின் 19வது திருத்தம் ஜனநாயகத்தை பலப்படுத்தும் உந்துசக்தி

## ஜே.சி.அலவத்துல மகிழ்ச்சி

(கொழும்பு)

அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தம் நாட்டில் ஜனநாயகத்தைப் பலப்படுத்துவதற்கு உந்து சக்தியாக அமைந்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் ஜே.சி. அலவத்துவல மகிழ்ச்சி வெளியிட்டுள்ளார்.

அலரிமாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே இராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர், ஐக்கிய தேசியக் கட்சியும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமை வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்தே 19 ஆவது திருத்தச்சட்டமூலத்தை நிறைவேற்றியிருந்தோம். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழித்து, அப்போதிருந்த ஏகாதிபத்திய ஜனாதிபதி



ஆட்சியை இல்லாமல் செய்வதாக வழங்கிய உறுதிமொழிக்கு அமையவே 2015 ஜனவரி 8 ஆம் திகதி எமக்கு வாக்குகள் அளிக்கப்பட்டன.

இதற்கு அமையவே ஏகாதிபத்திய வாதத்தை உள்ளடக்கிய 18 ஆவது திருத்தச்சட்டமூலத்தை நீக்க முடிந்தது. உலகின் பெரும்பாலான நாடுகளில் இரண்டு தடவைகளே ஒருவரால் ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிட முடியும். எனினும், மகிந்த ராஜபக்ஷ இரண்டு தடவைகளே போட்டியிட முடியும் என்ற வரையறையை நீக்கி எத்தனை தடவைகளும் போட்டியிட முடியும் என்பதை 18 ஆவது திருத்தத்தின் ஊடாகக் கொண்டுவந்தார். இதன் ஊடாக அவரின் ஏகாதிபத்திய ஆட்சியைப் புரிந்துகொள்ள முடிந்தது.

இவ்வாறான சூழ்நிலையிலேயே மகிந்த ராஜபக்ஷ தனது கட்சியின் செயலாளராகவிருந்தவருடன் போட்டியிட்டு தோல்வியடைய நேர்ந்தது. எந்தவொரு நபரும் மூன்றாவது தடவையாகப் போட்டியிடுவதை மக்கள் விரும்பவில்லையென்பது இதன்மூலம் புலனானது.

எனினும், நாம் அனைவரும் இணைந்து நிறைவேற்றிய 19 ஆவது திருத்தச்சட்டத்தின் ஊடாக நாடு ஜனநாயக ரீதியில் முன்சென்றுள்ளது. ஜனாதிபதியின் பதவிக்காலம் 5 வருடங்களாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

பாராளுமன்றம் ஜனநாயக ரீதியில் செயற்படுவதற்கு இடமளிக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (7)

# பயணத் தடையை நீக்கிய அமெரிக்கா

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தை அடுத்து, பாதுகாப்பு நிலைமையைக் கருத்திற் கொண்டு இலங்கைக்கு விதித்திருந்த பயணத்தடையை தளர்த்த அமெரிக்க வெளிவிவகார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கமைய அவர்களின் சுற்றுலா அறிவுறுத்தல் மட்டத்தை 3 இலிருந்து 2 ஆக சுற்றுலா எச்சரிக்கையை குறைத்துள்ளதாக இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரக அலுவலகம் அறிவித்துள்ளது.

எனினும், இலங்கைக்குப் பயணிக்கும்போது அவதானத்துடன் இருக்குமாறும் தனது நாட்டுப் பிரஜைகளுக்கு அமெரிக்கா ஆலோசனை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

# துப்பாக்கியுடன் ஒருவர் கைது

(கொழும்பு)

இமதுவ, ஹவுபே பிரதேசத்தில் துப்பாக்கியொன்றுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் மாத்தறை வலய குற்ற விசாரணைப் பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதன்போது சந்தேகநபரிடமிருந்து உள்நாட்டுத் தயாரிப்பு கல்கடஸ் வகை துப்பாக்கி மற்றும் துப்பாக்கியின் பாகங்கள் உள்ளிட்டவை கைப்பற்றப்பட்டுள்ளன.

இமதுவ பிரதேசத்தைச் சேர்ந்த 58 வயதுடைய ஒருவரே கைது செய்யப்பட்டார். (7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## கோதுமை

ஒரு அம்மா அவருடைய வீட்டுக்காரரைப் பார்த்து, "கொள்ளு உடம்பிற்கு நல்லதாம். அவித்துத் தருகின்றேன் சாப்பிடுகின்றீங்களா?" என்று கேட்டார்.

இவர் மிகவும் யதார்த்தமாகத்தான் கேட்டார். ஆனால் இதைக் கேட்டவுடனே அவருக்குக் கோபம் வந்து விட்டது. என்னைக் குதிரை என்று நினைத்து விட்டாயா? என்று கூறி சண்டைக்குப் போனார். சரி! கேழ்வரகு இருக்கின்றது. களி செய்து தருகின்றேன். சாப்பிடுகின்றீர்களா? என்று கேட்டார்.

நீ என்ன பெரிய சிறை அதிகாரி என்ற நினைப்போ எனக்கு களிகிண்டிப்போடுவதற்கு என்று சத்தம் போட்டார். இவரை எப்படி சமாளிப்பது என்று யோசித்தார். சரி கோதுமை ரவை இருக்கின்றது. உப்புமா செய்து தரவா? என்று கேட்டுப் பார்த்தார்.

என்னை என்ன சர்க்கரை வியாதி என்று நினைத்தாயா? என்று கத்தினார். கடைசியாக அந்த அம்மா ஒரு வழியைக் கடைப் பிடித்தார். அதிலே தான் அவர் சரியாக வந்தார். மறு நாளிலிருந்து எது இருந்தாலும் சாப்பிடுகின்றேன் என்று உட்கார்ந்தார். அப்படிப் பெரிதாக எதையும் செய்து விடவில்லை.

வீட்டிலே எதுவும் இல்லை என்று சொல்லி ஒரு நாள் முழுவதும் பட்டினி போட்டார். அவ்வளவு தான். அவர் எதையும் சாப்பிட ரெடி.

கோதுமை உப்புமா சாப்பிடுறீங்களா? என்று கேட்டால் எனக்கு என்ன சர்க்கரை வியாதியா? என்று கேட்டாரே அதிலும் விடயம் இருக்கின்றது. இருதயநோய், நீரிழிவு நோய் இதெல்லாம் தடுப்பதற்கு கோதுமையிலுள்ள நார்ச்சத்து மிகவும் உபயோகப்படுகின்றதாம்.

ஒரு மகளிர் கல்லூரியிலே மனையியல் பாடம் படிக்கின்ற மாணவிகள் ஒருநாள் வந்து கோதுமையிலே உள்ள குணம் என்ன என்பதை விபரமாகச் சொல்லிவிட்டுப் போனார்கள்.

ஆதிகாலத்திலிருந்த கோதுமைக்கும் மனிதனுக்கும் சம்பந்தம் இருந்ததாம். எகிப்து நாட்டிலே நைல் நதிக்கரை ஓரத்திலே கிடைத்த பழங்கால கல்வெட்டுக்களில் கூட கோதுமை பற்றிய விபரம் இருக்கின்றதாம்.

அதை எப்படி பயிர் செய்வது-அறுவடை செய்வது-மாவாக்கி உணவுப் பண்டம் தயார் செய்வது சம்பந்தமான வார்த்தைகள் எல்லாம் அந்தக் கல்வெட்டிலே இருக்கின்றதாம். அது மட்டுமல்ல, அங்கே சில கல்லறைகளை தோண்டிப் பார்த்த போது இறந்தவர்களுடன் கோதுமைப் பண்டங்களையும் வைத்து புதைத்திருந்தார்களாம்.

இன்றைக்கு 25 நாடுகளில் அரிசி, அடிப்படையான உணவு. 45 நாடுகளில் கோதுமை அடிப்படையான உணவு. "அகத்தியர் குணபாடம்" என்று ஒரு நூல் நம்மிடம் உண்டு. கோதுமை அந்தக் காலத்திலே மருந்துப் பொருளாகப் பயன்பட்டுக் கொண்டு வந்தது என்ற விபரம் அதிலிருக்கின்றது.

கோதுமையை சோறாக்கிச் சாப்பிட்டால் தேகபலம் கூடும். உடைத்து நெய்யாக்கி கஞ்சியாக்கி சாப்பிட்டால் வாதசுரம், தடிமன், கபம் எல்லாம் போய் விடுமாம். அதை மாவாக்கி அடை செய்து சாப்பிட்டால் உடல் வன்மை அதிகரிக்குமாம். இந்த விபரம் எல்லாம் அகத்தியர் குண பாடத்திலே இருக்கின்றதாம்.

இப்பவும் டாக்டர்கள் அதை சிபாரிசு செய்கின்றார்கள். கருவுற்ற பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் இவர்களுக்கு தேவைப் படுகின்ற புரதச்சத்து, சுண்ணாம்புச்சத்து, இரும்புச் சத்து, உயிர்ச்சத்து B இவைகள் கோதுமையில் இருக்கின்றது.

இதிலே இன்னொரு விடயம் என்ன என்றால் கோதுமை உணவு கொஞ்சமாகச் சாப்பிட்டாலும் அதிகமாகச் சாப்பிட்டது போல் ஒரு நிறைவு வந்து விடும். அதனால் சாப்பிடுகின்ற அளவு குறைந்து விடும். அதனால் தான் உடம்பு குண்டாக இருப்பவர்களுக்கு சிபாரிசு செய்கின்றார்கள்.

காவேரி ஓரமாக விளைகின்ற வெற்றிலையைக் கொடுத்து விட்டு கங்கை ஓரமாக விளைகின்ற கோதுமையை வாங்கிக் கொள்வோம் என்றார் பாரதியார்.

கங்கை நதிப்புறத்துக் கோதுமைப் பண்டம் காவேரி வெற்றிலைக்கு மாறு கொள்வோம் என்றார்.

கோதுமை பலகாரம் சாப்பிட்டு வெற்றிலை போட்டுக் கொண்டு உட்கார்ந்தால் அதுவும் ஒருவிதமான சுகம்தான்.

அந்தக் காலத்திலே கோதுமை நிறைய விளைகிற ஒரு தேசம் இருந்தது. அதற்கு ஒரு ராஜா. அந்த ராஜா ஒருநாள் தன் அமைச்சரைக் கூப்பிட்டார்.


"என்ன அமைச்சரே! எங்களிடம் கையிருப்பிலே இருக்கிற கோதுமை இன்னும் எவ்வளவு நாளைக்கு வரும்?" என்று கேட்டார்.

"இன்னும் இரண்டு வருடத்திற்கு எங்கள் நாட்டிலே பஞ்சமே இல்லை" என்றார் மிகவும் மகிழ்ச்சியாக.

அமைச்சர் தலையை சொறிஞ்சு கொண்டே அருகே போனார். "அப்படி இல்லை மகாராஜா! நான் சொன்னது நம்ம இரண்டு பேர் வீட்டிலையும் இருக்கிற கையிருப்பைப் பற்றி" என்றார்.

# குருநாகல் வைத்தியர் ஷாபி விவகாரத்தை ஜனாதிபதி ஆணைக்குழுவில் விசாரிக்க முடியாது!

## ஜனாதிபதி திட்டவட்டம்



(கொழும்பு)

குருநாகல் வைத்தியர் விவகாரத்தை ஜனாதிபதி ஆணைக்குழுவில் விசாரிக்க முடியாது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நேற்றையதினம் இடம்பெற்ற ஊடகப்பிரதானிகள் உடனான சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் சட்ட வைத்திய அதிகாரியின் பரிந்துரைக்கு அமைய நியமிக்கப்பட்ட வைத்திய நிபுணர் குழுவினாலேயே இந்த விவகாரம் குறித்து விசாரிக்க முடியுமென்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

வருமானத்தை மீறி சொத்து சேர்த்தமை மற்றும் சட்டவிரோத கருத்தடை விவகார குற்றச்சாட்டுக்களில் வைத்தியர் மொஹமட் ஷாபி குற்றப்புலனாய்வு திணைக்களத்தினரால் தடுத்து வைத்து விசாரிக்கப்பட்டு வருகிறார்.

இதனையடுத்து குருநாகல் வைத்தியர் விவகாரத்தை ஜனாதிபதி ஆணைக்குழுவில் விசாரிக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ச மற்றும் உதய கம்மன்பில ஆகியோர் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (7)

# வெளிநாட்டில் வாழும் இலங்கையர்களுக்கு இரட்டைக் குடியுரிமை

(கொழும்பு)

வெளிநாட்டில் புலம்பெயர்ந்து வசிக்கும் இலங்கையர்கள் நாட்டில் இரட்டை பிரஜாவுரிமையை பெற்றுக்கொள்வதில் ஆர்வம் காட்டி வருவதாக குடிவரவு-குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதுவரை பல்லாயிரக்கணக்கான புலம்பெயர் இலங்கையர்கள் இரட்டை பிரஜாவுரிமைக்காக விண்ணப்பித்துள்ளதாக குடிவரவு- குடியகல்வு பதில் கட்டுப்பாட்டாளர் நாயகம் பிரசந்த ரத்நாயக்க தெரிவித்துள்ளதுடன் வெளிநாட்டில் குடியுரிமை பெற்று வாழும் 810 இலங்கையர்களுக்கு நேற்று முன்தினம் இரட்டைக் குடியுரிமை வழங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

2015 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த வேலைத்திட்டத்தின் கீழ் இதுவரையில் 3700 பேருக்கு இரட்டை குடியுரிமை வழங்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டில் வாழும் இலங்கையர்கள் இரட்டை குடியுரிமையை பெறுவதனால் பல்வேறு வரப்பிரசாதங்களை பெற்றுக் கொள்ள முடியும் என பதில் கட்டுப்பாட்டாளர் நாயகம் மேலும் தெரிவித்தார். (7)

# தொழிற்படு அரசியல்வாதிகளின் பெயர்களை அரச பொது கட்டடங்களுக்கு சூட்டவேண்டாம்

## தேர்தல் ஆணைக்குழு கட்சிகளுக்கு அறிவிப்பு

அரச பாடசாலைகள் மற்றும் பாடசாலைகளின் புதிய கட்டடங்களுக்கு அரச நிறுவனங்களின் கட்டடங்கள் மற்றும் பொது இடங்களுக்கும் பாதைகளுக்கும் உயிர் வாழுகின்ற தொழிற்படு அரசியல்வாதிகளின் பாராளுமன்ற மாகாண சபை உறுப்பினர்கள் அமைச்சர்களின் பெயர்களை சூட்ட வேண்டாம் என தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் மகிந்த தேசப்பிரிய அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அரசியல் கட்சிகளின் தலைவர்கள், தவிசாளர்கள், செயலாளர்கள் மற்றும் நிரந்தர முகவர்கள் ஆகியோருக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கையில்,

அரச பாடசாலைகளுக்கு மற்றும் பாடசாலைகளின் புதிய கட்டடங்களுக்கு அரசாங்க வேறு நிறுவனங்களின் கட்டடங்களுக்கு/ பொது இடங்களுக்கு/ பாதைகளுக்கு நாட்டின் ஏற்றுக்கொள்ளப்பட்ட தலைவர்கள் மற்றும் அறிஞர்களின் பெயர்களை சூட்டுதல் சில காலமாக இடம்பெற்று வருகின்ற போதிலும் தற்போது முன்னர் குறிப்பிடப்பட்டுள்ள பொது சொத்துக்களுக்கு உயிர் வாழுகின்ற தொழிற்படு அரசியல்வாதிகளின் பாராளுமன்ற, மாகாண சபை உறுப்பினர்கள், அமைச்சர்களின் பெயர்களை சூட்டும் புதிய போக்கொன்று ஆரம்பமாகியுள்ளதென்பது தேர்தல் ஆணைக்குழுவினால் அவதானிக்கப்பட்டுள்ளது. அரச நிறுவனங்களுக்கு, அரச பாடசாலைகளுக்கு, பொது இடங்களுக்கு மற்றும் பாதைகளுக்கு தொழிற்படு அரசியல்வாதிகளின் பெயர்களைப் பயன்படுத்துவது சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்களை நடத்தும் போது வேட்பாளர்களுக்கு சம உரிமை அல்லது சமமான சந்தர்ப்பம் கிடைக்க வேண்டுமென்ற கோட்பாடு மீறப்படுதல் ஆகுமென அரசியல்வாதிகள், சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், தொழில் வல்லுநர்கள், சமூக வலையமைப்புச் செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள் ஆகியோர் முன்வைக்கின்ற கருத்தைப் புறந்தள்ளிவிடுவது அசௌகரியமானதென ஆணைக்குழு கருதுகின்றது. மேலும் இந்த உயிர் வாழுகின்ற அரசியல்வாதிகளின் பெயர்கள் சூட்டப்பட்டுள்ள அரச கட்டடங்களை வாக்களிப்பு நிலையங்களாகப் பயன்படுத்தும் போது அதன் மூலம் வாக்காளர்களுக்கு தாக்கத்தை ஏற்படுத்த முடியும் என்ற கருத்தைக் கவனத்திற்குக் கொள்ளாமல் விடுவதற்கு தேர்தல் ஆணைக்குழுவிற்கு முடியாது.

எனினும் பொருத்தமான கட்டடங்களைத் தேடிக் கொள்ளும் வசதியின்மை காரணமாக வாக்களிப்பு நிலையங்களாக அரசாங்க பாடசாலைகளைப் பயன்படுத்த வேண்டியேற்பட்டுள்ளதால் அரசியல்வாதிகளின் பெயர்கள் சூட்டப்பட்டுள்ள பாடசாலைகளை வாக்களிப்பு நிலையங்களாகப் பயன்படுத்தாமல் இருப்பது மிகவும் கடினமான விடயமாகும். மேலும் உயிர் வாழுகின்ற தொழிற்படு அரசியல்வாதிகளின் பெயர்களினால் அழைக்கப்படுகின்ற கிராமங்கள் மற்றும் பாதைகளின் விபரங்கள், உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளில் முகவரியாகக் குறிப்பிட வேண்டியேற்பட்டுள்ளமையும் சிக்கலொன்றாகும்.

இந்த விடயம் அதாவது தொழிற்படு அரசியல்வாதிகளின் பெயர்களை அரச பாடசாலைகளுக்கு, பாடசாலைக் கட்டடங்களுக்கு மற்றும் அரச நிறுவனங்களுக்கு/ பொது இடங்களுக்கு/ புதிய கிராமங்களுக்கு பாதைகளுக்கு இடுவது பொருத்தமற்றது என்பது தற்போது மட்டுமன்றி 2014, 2015 ஆம் ஆண்டுகளிலும் கூட உள்நாட்டு மற்றும் சர்வதேச அரசியல் சபைகளில் மற்றும் தேர்தல் முகாமைத்துவ நிறுவனங்களில் கலந்துரையாடப்பட்ட ஒரு விடயமாகும். செய்யப்பட்ட பின்னரும் இந்த விடயம் அரசியல் கட்சிகளின் செயலாளர்கள், நிரந்தர முகவர்கள் மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு என்பனவற்றுடன் கலந்துரையாடப்பட்டுள்ளது. மேற்படி கலந்துரையாடல்களின் போது உயிர் வாழுகின்ற தொழிற்படு அரசியல்வாதிகளின் பெயர்கள் சூட்டப்பட்டுள்ள அரசாங்கம் கட்டடங்களை வாக்களிப்பு நிலையங்களாகப் பயன்படுத்துதல் வாக்காளர்களுக்கு ஏதேனுமொரு வகையான தாக்கத்தை செலுத்துவதற்கு காரணமாக அமைவதாகவும் சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல் சந்தர்ப்பங்களின் போது அத்தகைய கட்டடங்களை வாக்களிப்பு நிலையங்களாகப் பயன்படுத்துவதிலிருந்து தவிர்த்திருக்க வேண்டுமெனவும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. மேலும் தொழிற்படு அரசியல்வாதிகளின் பெயர்களை அரசாங்க பாடசாலைகள்/ பாடசாலைக் கட்டடங்கள் மற்றும் ஏனைய பொது நிறுவனங்களுக்கு சூட்டுவது பொருத்தமற்றதென்ற அரசியல் கட்சிகளின் பொது இணக்கப்பாடு 2014/2015 காலப்பகுதியின் போது தெரிவிக்கப்பட்டன.

எனவே உயிர்வாழுகின்ற தொழிற்படு அரசியல்வாதிகளின் பெயர்களை அரச பாடசாலைகளுக்கு, பாடசாலை கட்டடங்களுக்கு, அரச நிறுவனங்களின் கட்டடங்களுக்கு மற்றும் பொது இடங்களுக்கு அதாவது பொதுச் சொத்துக்களுக்கு சூட்டுவதிலிருந்து தவிர்த்திருப்பது மிகவும் பொருத்தமானதென தேர்தல் ஆணைக்குழு கருதுவதோடு அது பற்றி உங்கள் கட்சியின் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் முதன்மை தொழிற்படுநர்களுக்கு அறிவித்து அவ்வாறு முன்னர் குறிப்பிட்டுள்ளவாறு அரச பாடசாலைகள், பாடசாலைக் கட்டடங்கள் மற்றும் அரச நிறுவனங்கள்/ பொது இடங்கள்/ பாதைகளுக்கு பெயர் சூட்டுவதைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கையெடுக்குமாறு அவர்களை அறிவூட்டுவதற்கு தயவன்புடன் நடவடிக்கையெடுப்பது பொருத்தமாகும். (ஒ)

# 50,000 அமெரிக்க டொலரை கியூபாவுக்கு வழங்க அனுமதி

(கொழும்பு)

கியூபா நாட்டில் சூறாவளி காரணமாக சேதமடைந்த கிராமம் ஒன்றை புனரமைப்பதற்காக 50,000 அமெரிக்க டொலர் நிதியை நன்கொடையாக வழங்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

வெளிநாட்டு அலுவலக அமைச்சர் திலக் மாரப்பன சமர்ப்பித்த ஆவணத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

கியூபாவிற்கு இந்த வருடம் ஜனவரி மாதத்தில் உருவான சூறாவளிக் காற்றின் காரணமாக அவானாஹி றெக்லாவுக்கு அருகிலுள்ள கிராமம் ஒன்றுக்கு பெரும்பாதிப்பை ஏற்படுத்தியது.

இரு நாடுகளுக்கிடையில் இராஜதந்திரத் தொடர்புகள் ஆரம்பிக்கப்பட்டு இந்த வருடத்தில் 60 வருடம் நிறைவடைவதை முன்னிட்டு, இரு நாடுகளுக்கிடையில் நிலவும் நட்புறவை மேலும் உறுதி செய்யும் நல்லுறவின் அடையாளமாக 50ஆயிரம் அமெரிக்க டொலர்களை நன்கொடையாக வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (7)

# இலங்கையில் மதத்துக்கென்று தனியான சட்டம் தேவையில்லை

## சம்பிக்க தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டில் பல சம்பிரதாயபூர்வமான சட்டங்கள் இருக்க முடியாது எனவும், நாடு முன்னேற வேண்டுமானால் நடுநிலையான தனியொரு சட்டம் இருக்க வேண்டும் எனவும் மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

தாம் பின்பற்றும் மதத்திற்கும் தாம் வாழும் பிரதேசத்திற்கும் ஏற்ப தனியான சட்டங்கள் இருப்பது நாட்டிற்கு உகந்ததல்ல.

உலகில் பெரிய நாடான பிரேசில், இதுவரைக்கும் கனடா, ரஷ்யா போன்று ஏன் முன்னேறவில்லை.


அங்கு பலமான ஒரு சட்டம் இல்லாமையே காரணமாகும் எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடு முன்னேற வேண்டுமானால் பலமான ஒரு சட்டம் மாத்திரமே இருக்க வேண்டும். இன்றேல் சோமாலியா, நைஜீரியா போன்று நாடு துண்டு துண்டாகிவிடும் எனவும் அவர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் கெஸ்பேவயில் அமைக்கப்பட்ட இணைப்பு அலுவலகத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (7)

# கல்முனை பிரதேச செயலக விவகாரம்; ஒரு மாத காலத்துக்குள் தீர்வு

## அமைச்சரவையில் தீர்மானம்



(கொழும்பு)

கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தை, முழு அதிகாரம் கொண்ட பிரதேச செயலகமாக தரமுயர்த்துவது தொடர்பான பிரச்சினைகளை ஒரு மாத காலத்துக்குள் தீர்த்து வைக்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதுடன் கல்முனை வடக்கு பிரதேச செயலக விவகாரம் குறித்து முக்கியமாக ஆராயப்பட்டுள்ளது.

இதன்போது, 1989 ஆம் ஆண்டிலிருந்து இந்தப் பிரச்சினை நீடித்து வருவதாக உள்நாட்டு மற்றும் உள்துறை விவகாரங்களுக்கான அமைச்சர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

இதையடுத்து, உப பிரதேச செயலகத்தை முழு அதிகாரம் கொண்ட பிரதேச செயலகமாக தரமுயர்த்துவது தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகளைக் கருத்திற்கொண்டு, இந்தப் பிரச்சினையை ஒரு மாதத்துக்குள் தீர்ப்பதென அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த விடயம் தொடர்பாக அடுத்த வாரத்திற்குள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில், கூட்டமைப்பின் உறுப்பினர்கள், முஸ்லிம் தலைமைகள் மற்றும் அமைச்சர்களான வஜிர அபேவர்த்தன, மனோ கணேசன் ஆகியோருடன் கலந்துரையாடலொன்றும் இடம்பெறவுள்ளது.

கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தை, தரமுயர்த்துமாறு வலியுறுத்தி கடந்த வாரம் மதத்தலைவர்களால் தொடர்ந்து 6 நாட்கள் உண்ணாவிரதப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (7)

---

### மலை வனப்பகுதியில் தீப்பரவல்



பதுளை வீரியபுர மலை வனப்பகுதி என்ற பதுளை சிறிபா மலையில் நேற்று முன்தினம் மாலை தீப்பரவல் ஏற்பட்டுள்ளது.

இந்த தீப்பரவலால் இதுவரை சுமார் நூறு ஏக்கர் நிலப்பரப்பு சேதமடைந்துள்ளதாக தகவல்களில் தெரியவந்துள்ளது.


மலைப்பகுதிக்கு செல்வதற்கான வழி இல்லாமையால் தீயை அணைக்க தீயணைப்பு பிரிவினருக்கு பாரிய சவால் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், பிரதேசவாசிகள் மற்றும் இராணுவத்தினரும் இணைந்து தீயணைப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக பதுளை அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (7)

---

# முஸ்லிம் அடக்குமுறை ஒழிக்கப்படாமல் அமைச்சுக்களை பொறுப்பேற்கமாட்டோம்

## ஹக்கீம் கூறுகிறார்



என்மீது எந்தக் குற்றச்சாட்டும் முன்வைக்கப்படாத நிலையில் ஏன் இராஜினாமா செய்தீர்கள் என்று கேட்கின்றனர். முஸ்லிம் சமூகத்துக்கு எதிரான அடக்குமுறை முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும். அதற்கான உத்தரவாதம் கிடைக்கப் பெறாமல், மீண்டும் அமைச்சுப் பதவிகளை பொறுப்பேற்பதில் எந்தப் பிரயோசனமும் இல்லை என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

'பிரஜா ஜல அபிமானி' வேலைத் திட்டத்தின் கீழ் கண்டி, தெல்தோட்டையில் கிராமிய குடிநீர் வழங்கல் திட்டங்களை ஆரம்பித்துவைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ரவூப் ஹக்கீம் மேலும் தெரிவித்ததாவது, எங்களுக்குள் ஒளிந்து கொண்டிருந்த பாவிகள் சிலர் செய்த பயங்கரவாத செயலினால், அப்பாவிகள் பலர் இன்றும் சிறைகளில் வாடிக் கொண்டிருக்கின்றனர். இந்த சூழலில் முஸ்லிம்களுக்கு எதிராக வேண்டுமென்று அநியாயங்கள் கட்டவிழ்த்து விடப்படுகின்றன. முஸ்லிம்களை வம்புக்கு இழுக்கின்ற பல விடயங்கள் அரங்கேறி வருகின்றன. இவற்றுக்கெல்லாம் தீர்வு காணாமல் அரசாங்கத்துடன் சேர்வதில் எந்த அர்த்தமும் கிடையாது.

பெண்களின் ஆடை விடயத்தில் தேவையில்லாத சுற்றுநிருபத்தை கொண்டு வந்துள்ளதால், அரச தொழில்களில் இருக்கின்ற முஸ்லிம் பெண்கள் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இந்த வாரத்துக்குள் அதை நிவர்த்திசெய்ய வேண்டுமென நாங்கள் அரசாங்கத்திடம் வலுக்கட்டாயமாக சொல்லியிருக்கிறோம். குறித்த சுற்று நிருபம் திருத்தப்பட்டு, முஸ்லிம் பெண்களின் உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்பது நாங்கள் முன்வைத்துள்ள கோரிக்கைகளில் ஒன்றாகும்.

நாங்கள் அரசாங்கத்துக்குள் இருந்தாலும், வெளியில் இருந்தாலும் சமூகத்தின் நன்மைக்காக எடுத்த தீர்மானத்தில் எந்த மாற்றமும் இல்லாமல் கூட்டாக ஒருமித்து செயற்படுவோம். இலங்கையில் சிறுபான்மை சமூகத்துக்கு எதிரான அநியாயங்களை சர்வதேச சமூகம் அவதானமாகப் பார்த்துக் கொண்டிருக்கிறது.

இந்நிலையில் எங்களது கோரிக்கைகளை அரசாங்கத்திடமும் பாதுகாப்புத் தரப்பினரிடமும் அழுத்தமாக முன்வைத்திருக்கிறோம்.

இனி அட்டகாசம் செய்பவர்களை அடையாளம்கண்டு அவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். சிறு கும்பல் செய்த வேலைக்காக முழு சமூகமும் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்படும் நிலைமை முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டும்.

குருநாகல், புத்தளம், கம்பஹா மாவட்டங்களில் சேதமாக்கப்பட்ட பள்ளிவாசல்களும் வீடுகளும் புனரமைக்கப்பட வேண்டும். அவற்றைச் செய்யாமல் நாங்கள் அமைச்சரவையில் இருக்க முடியாது. ஏனைய இடங்களில் எவ்வாறு நஷ்டஈடு கொடுத்து கட்டி முடித்தார்களோ, அதேபோன்று இங்கும் செய்யப்பட வேண்டும்.

அதைச் செய்யாமல் நாங்கள் கதிரைகளில் போய் உட்கார முடியாது என்பதே எங்களின் நிலைப்பாடு என மேலும் தெரிவித்தார். (7)

---

# இனம்,மதம் என பாராது சமவுரிமை வழங்க வேண்டும்

## ஜெகான் பெரேரா வேண்டுகோள்



(கொழும்பு)

இனம், மதம் என்றில்லாமல் சகலருக்கும் சம உரிமை, சம அந்தஸ்து வழங்குவது அவசியமெனவும் அதுவே தேசிய சமாதானப் பேரவையின் நோக்கம் என்றும் சமாதானப் பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பேராசிரியர் ஜெகான் பெரேரா வலியுறுத்தியுள்ளார்.

நாடு சுதந்திரம் அடைந்து 71 வருடம் கடந்த நிலையிலும் மக்கள் மத்தியிலான நல்லிணக்கம், சக வாழ்வு, பொருளாதார ஸ்திரத் தன்மை எந்தவொரு முறையான வேலைத் திட்டமும் இடம்பெறவில்லையென்றும் கடந்த காலத்தில் இடம்பெற்றுள்ள தவறுகள்,பாதிப்புகள் தொடர்பில் தேசிய சமாதானப் பேரவை அவற்றை நிவர்த்தி செய்வதற்கான யோசனைகளை முன்வைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தேசிய சமாதான பேரவையின் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (7)

---

# பொய்க்குற்றச்சாட்டை சுமத்தியவர்களுக்கு மான நஷ்டஈடு கோரி வழக்குத்தாக்கல்

## அசாத் சாலி தெரிவிப்பு



(கொழும்பு)

எனக்கு எதிராகப் பொய்க் குற்றச்சாட்டுக்களை தெரிவித்தவர்களுக்கு எதிர்வரும் தினங்களில் மானநஷ்டஈடு கோரி வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாக தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத் சாலி தெரிவித்தார்.

நாட்டில் பயங்கரவாதத் தாக்குதலானது ஐ.எஸ். அமைப்பால் மேற்கொள்ளப்பட்டதொன்றல்ல என முன்னாள் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்திருந்தார். கர்தினால் மல்கம் ரஞ்சித்தும் இதுதொடர்பாக தெரிவித்திருக்கின்றார். இதுதொடர்பான பல உண்மைகள் வெளிவரும். அதே போன்று இந்தத் தாக்குதலை பின்னால் இருந்து செயற்படுத்தியவர்கள் யார் என்பதும் இன்னும் சில தினங்களில் வெளிவரும்.

நாட்டில் சட்டம் ஒழுங்கு நடைமுறையில் இல்லை. அதனால் தான் ரத்ன தேரர் அவசரகாலச் சட்டம் அமுலில் இருக்கும்போது உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டார். பாதுகாப்பு மற்றும் சட்டம் ஒழுங்கு அமைச்சராக இருக்கும் ஜனாதிபதியும் பொலிஸார் என்ன செய்கின்றனர் என்று தெரியாமல் இருக்கின்றார் எனச் சுட்டிக்காட்டினார்.


தேசிய ஐக்கிய முன்னணி நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். (7)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

284



ஜே.ஆர்.ஜெயவர்த்தன

## சுதந்திரத்தின் பின் இலங்கை அரசின் அரசியல் நடவடிக்கைகளும் தமிழ்த் தேசியத்தின் எழுச்சியும் (கி.பி.1948-கி.பி.1983)

இவர்கள் (தமிழர்) சொல்வது நியாயமற்றது. தரப்படுத்தல் தமிழருக்கு மட்டுமன்றி சிங்களவருக்கும் நியாயமற்றது. யாழ்ப்பாணம் முழுக்க முழுக்க தமிழரைக் கொண்டிருக்க கொழும்பில் கணிசமான தொகை தமிழர் வாழ்ந்தனர்.

எனவே அபிவிருத்தியடைந்த, அபிவிருத்தியடையாத மாவட்டங்கள் என்ற அடிப்படையிலான தரப்படுத்தல் பெரும்பான்மையான சிங்கள மாவட்டங்கள் அபிவிருத்தியடையாத நிலையில் இருந்தமையால் சிங்களவருக்கே சாதகமாக இருந்தது.

இதைவிட பொதுச்சேவைத் துறையில் வெளிப்படையாகவே கடைப்பிடிக்கப்பட்ட தொழில்வாய்ப்பிலான பாரபட்சம் நிலைமையை மேலும் மோசமாக்கியது. பொருளாதார வல்லுநர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.ஏ.அமரசிங்க தனது (Ethnic Representation in Central Government Employment and Sinhala - Tamil Relations in Sri Lanka) என்ற கட்டுரையில் தெரிவிப்பதாவது,

பத்து வீதத்திற்கும் குறைந்த இடங்களையே கூடியபட்சம் தமிழருக்கு அளிக்கும் தற்போதைய ஆட்சேர்ப்பு நடைமுறை தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்படுமாயின் இனங்களுக்கிடையிலான முறுகலை அது அநேகமாக நிச்சயம் தீவிரமடையச் செய்யும்.

பெரும்பான்மை சிங்கள அரசுகளால் தமிழர் வெளிப்படையாகவே பாரபட்சமாகவே நடத்தப்படுகின்றனர் எனக் கூறும் மேற்கோள்காட்டப் பட்ட மூன்று அறிஞருமே சிங்கள இனத்தவர் என்பது கவனிக்கப்படவேண்டிய ஒன்றாகும். அத்துடன் ஆர்.என். கேணி பின்வருமாறு தெரிவிக்கின்றார்.

விரைந்து மோசமடைந்து செல்லும் வேலைவாய்ப்பு நிலைமை விசேடமாக தமிழ் இளைஞரால் தீவிரமாக உணரப்பட்டது. இவர்கள் பொதுவான வேலைவாய்ப்பு இன்மையால் பாதிக்கப்பட்டதுடன் கிடைக்கக்கூடிய சில வேலைகளைப் பெறுவதில் இவர்கள் பாரபட்சத்திற்கும் சாதகமற்ற நிலைக்கும் ஆளாக வேண்டியிருந்தது.

இலங்கையில் பிரித்தானியரின் ஆட்சியின்போது தமிழருக்கு அவர்களுடைய எண்ணிக்கைக்கும் உரிய விகிதத்தில் வேலைவாய்ப்பு ஒதுக்கீடு செய்யப்படாமல் மிக அதிகமாக வழங்கப்பட்டதனால் தமிழ்ச் சமுதாயம் தம்மைவிட சாதகமான வாய்ப்புக்களைக் கொண்டுள்ளது என்பது சிங்களவரால் எப்போதுமே முன்வைக்கப்படும் ஒரு வாதமாகும்.

இதற்குக் காரணம் குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் மிகத் தரமான கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டதன் விளைவாக தமிழர் விருப்புடன் ஆங்கிலக் கல்வியைக் கற்றதன் காரணமாக நிர்வாக சேவையிலும் ஏனைய அரச, தனியார் துறைகளிலும் வேலைவாய்ப்பைப் பெற்றனர்.

ஆனால் இலங்கை சுதந்திரம் அடைந்ததற்குப் பின்னர் இந் நிலைமையில் பெரும் சரிவு ஏற்படுவதைப் புள்ளிவிபரங்கள் மூலம் அறியமுடிகிறது. உதாரணமாக 1948 இல் உயர் சிவில் சேவையில் இருந்த 154 சிவில் உத்தியோகத்தரில் 38 தமிழர் (24.7 வீதம்) காணப்பட்டனர்.

ஆனால் 1981 ஆம் ஆண்டில் இலங்கை சிவில் சேவைக்குப் பதிலாக இலங்கை நிர்வாக சேவை அறிமுகப்படுத்தப்பட்ட போது 1545 நிர்வாகப் பதவிகளில் 203 தமிழர் இருந்தனர். அதாவது மொத்த எண்ணிக்கையில் 13.1 வீதமாக இருந்தனர். ஆனால் 1948 இல் 53.9 வீதமாக இருந்த சிங்களவரின் எண்ணிக்கை 1981 இல் 85.2 வீதமாக அதிகரித்திருந்தது.

சோல்பரி ஆணைக்குழுவினர் நிர்வாகசேவை, நீதிச்சேவை ஆகியவற்றுக்கு ஆணைக்குழுக்களை நியமித்தமைக்கு அடிப்படைக் காரணம், பொதுச் சேவைக்கு நியமனம் வழங்குவதிலும் நீதி சம்பந்தப்பட்ட தீர்ப்புகளிலும் இனங்களுக்கிடையே எதுவித பாரபட்சமும் இடம்பெறக் கூடாது என்பதற்காகவேயாகும்.

ஆனால் மேற்படி தரவுகள் மூலம் 1948களிலிருந்து பெரும்பான்மை சிங்கள அரசாங்கங்கள், அரசாங்க சேவை நியமனங்களில் தமிழ்ச் சிறுபான்மையினருக்கு மிகவும் அநீதியை இழைத்துள்ளன என்பது மிகவும் துல்லியமாகத் தெரிய வருகின்றது.

ஐக்கிய முன்னணி அரசு 1972 இல் புதிய அரசியலமைப்பை அறிமுகம் செய்ய முயற்சித்த போது தமிழ் அரசியல் தலைவர்கள் தமிழரைத் திருப்திப்படுத்தக்கூடிய சமஷ்டி முறையிலமைந்த அரசியல் சீர் திருத் தத்திற்கு பேச்சுவார்த்தை மூலம் தீர் வொன்றைக் காண்பதற்கு தமது விருப்பத்தை அரசுக்குத் தெரியப்படுத் தினர்.

அத் தீர்வினால் வடக்கு- கிழக்குத் தமிழரின் பாரம்பரிய பிரதேசத்திற்கு, பிரதேச சுய ஆட்சி வழங்க வேண்டுமென அரசிடம் கேட்டுக் கொண்டனர். ஆனால் திருமதி பண்டாரநாயக்கவும் பிலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கவும் தமிழ் அரசியல் தலைவர்களின் கோரிக்கையை நிராகரித்தனர்.

அத்தோடு இதுவரை காலமும் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை ஆதரித்து இடதுசாரிக் கொள்கைகளை வரித்துக் கொண்ட கல்விமான்களாகப் பாராளுமன்றத்தில் அங்கம் வகித்த கலாநிதி. என்.எம். பெரேரா, கொல்வின் ஆர்.டி. சில்வா லெஸ்லி குணவர்த்தன, பீற்றர் கெனமன் ஆகியோர் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் முடிவுக்குத் தமது ஆதரவை அளித்தமையால் அதனைத் தொடர்ந்து நிகழ்ந்த அனர்த்தங்களுக்கும் பொறுப்பானவர்கள் ஆகின்றனர்.

1974 இல் யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட அனைத்துலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டின் போது நிகழ்ந்த சம்பவங்கள் , நிலைமையை மேலும் மோசமாக்கிய முக்கியமான காரணிகளாகக் காணப்படுகின்றது.

இந்த மகாநாடு அருட்திரு. தனிநாயகம் அடிகளார், பேராசிரியர்கள் எஸ். வித்தியானந்தன், பொன். பூலோகசிங்கம், சச்சிதானந்தன் ஆகியோருடன் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண வளாகத்தைச் சேர்ந்த பல கல்விமான்கள் போன்றோரால் நடத்தப்பட்டது.

இலங்கை அரசின் கடுமையான அழுத்தத்தின் மத்தியில் இம்மகாநாடு 1974 ஜனவரி 3 ஆம் திகதியிலிருந்து 10 ஆம் திகதிவரை நிகழ்ந்தது. மகா நாட்டின் இறுதிநாளன்று பொலிஸார் விழாவைக் கொண்டாடிக் கொண்டிருந்த கூட்டத்தினர் மீது கண்ணீர்ப்புகை, கைக்குண்டு, குண்டாந்தடி தாக்குதல் மேற்கொண்டதுடன் துவக்குப் பிடிகளாலும் அவர்களைத் தாக்கியதை இந்நூலின் ஆசிரியர் நேரில் கண்டுள்ளார்.

(தொடரும்)

# பாடப்புத்தகங்களில் இனமுறுகல் கருத்துக்கள் உள்ளனவா என ஆராய விசேட குழு நியமனம்

(கொழும்பு)

சஹ்ரான் போன்றோர் உருவாவதற்கு கல்வி அமைச்சால் 1980 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் வழங்கப்பட்ட பாடசாலைப் புத்தகங்களே காரணம் என அண்மையில் பாராளுமன்றத் தெரிவுக்குழு முன்னிலையில் சாட்சி வழங்கிய ரிஸ்வின் ஹமத் வெளியிட்ட கருத்து தொடர்பில் கல்வி அமைச்சு அவதானம் செலுத்தியுள்ளது.

1980 ஆம் ஆண்டு தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் கற்கும் 9,10 மற்றும் 11 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு வெளியிடப்பட்ட இஸ்லாமிய பாடப் புத்தகத்தில் "இஸ்லாமிய தண்டனைகள் ஒழுங்காக அமுல்படுத்தப்படுமாயின் உலகில் குற்றங்கள் அமைவது மிக அரிதாகவே அமையும் என்பதில் சந்தேகமேயில்லை" என்று கூறப்பட்டு அதன் கீழ் உள்ள குற்றங்களும் தண்டனைகளும் என்று தலைப்பிடப்பட்ட பட்டியல் ஒன்றில் குற்றமாகக் கருதப்படும் செயல்கள் மற்றும் அவற்றுக்கான தண்டனைகள் ஆகியன குறிப்பிடப்பட்டுள்ளன என்றும் இஸ்லாம் மதத்தின் முக்கிய கருத்துக்களை உள்ளடக்கிய குர்ஆனில் குறிப்பிடப்படாத சட்டங்கள், 1980 ஆம் ஆண்டு தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் கற்கும் 9,10 மற்றும் 11 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு வெளியிடப்பட்ட இஸ்லாமிய பாடப் புத்தகத்தில் உள்ளதாக அவர் தெரிவித்திருந்தார்.

அத்துடன் இலங்கையில் புதிய பாடநெறி அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பின்னணியில், 2015ஆம் ஆண்டுக்குப் பின்னர் வெளியிடப்பட்டுள்ள இஸ்லாமியப் பாடப்புத்தகத்திலும் சில பாரதூரமான வசனங்கள் வெளியிடப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

தற்போது வெளியிடப்பட்டுள்ள இஸ்லாமியப் பாடப் புத்தகத்தில் தவறான கொள்கைகள் எதுவும் உள்ளடங்கவில்லை என உறுதியாக குறிப்பிட முடியும் என கல்வி அமைச்சின் தேசிய பாடசாலைகளுக்கு பொறுப்பான பணிப்பாளர் ஜயந்த விக்ரமநாயக்க தெரிவித்துள்ளார்.

மேலும் நடைமுறையில் உள்ள பாடப்புத்தகங்களை ஆராய்ந்து இனமுறுகலை ஏற்படுத்தக்கூடிய கருத்துக்கள் இருந்தால் அவற்றை நீக்கி பாடத்திட்டத்தில் மாற்றங்களை ஏற்படுத்த நடவடிக்கை எடுப்பதாகவும் அதற்காக விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (7)

# பொலிஸாருக்கு எதிரான முறைப்பாடுகளை இணையத்தளத்தின் ஊடாக சமர்ப்பிக்கலாம்

(கொழும்பு)


பொலிஸாருக்கு எதிரான பொது மக்களின் முறைப்பாட்டை இணையத்தளம் மூலமாக பெற்றுக்கொள்வதற்கு தேசிய பொலிஸ் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

எழுத்து மூலமாகவும் வாய் மூலமாகவும் காணொலி மூலமாகவும் இணையத்தளத்தின் ஊடாக முறைப்பாடுகளை செய்யக்கூடிய வகையில் தற்பொழுது தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் இணையத்தளம் மேம்படுத்தப்பட்டிருப்பதாக பொலிஸ் ஆணைக்குழு தகவல்கள் தெரிவித்துள்ளன.

தேசிய பொலிஸ் ஆணைக்குழு இந்த வேலைத்திட்டத்தை சபாநாயகர் கரு ஜெயசூரிய தலைமையில் நாளை 28ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ள வைபவத்தில் பொதுமக்களுக்காக ஆரம்பித்து வைக்கவுள்ளதாக பொலிஸ் ஆணைக்குழுவின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். இதேபோன்று பொலிஸ் தொடர்பில் பொது மக்கள் காணும் சில தவறுகளைக் கூட தமது கையடக்க தொலைபேசி ஊடாக பதிவுசெய்து தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிப்பதற்கு சந்தர்ப்பம் கிடைப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். தாம் செய்த முறைப்பாடு தொடர்பில் என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை கண்டறிவதற்கும் சந்தர்ப்பம் கிடைப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். (7)

## தென்னிலங்கையில்

# மர்மநபர்கள் அட்டகாசம் 40 படகுகள் தீக்கிரையாகின



தென்னிலங்கையிலுள்ள துறைமுகம் ஒன்றில் மர்மநபர்களால் வைக்கப்பட்ட தீயினால் பெருமளவு படகுகள் எரிந்து நாசமாகியுள்ளன.

ஹுங்கம - குருபொத்துன துறைமுகத்தில் நேற்று அதிகாலை தீப்பரவல் ஏற்பட்டதால், 40 இற்கும் அதிகமான படகுகள் முற்றாக எரிந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தீயைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் இரண்டு தீயணைப்பு வாகனங்கள் ஈடுபடுத்தப்பட்டன.

மர்மக் குழுவொன்று இதில் சம்பந்தப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இதனால் துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டிருந்த 40க்கும் அதிகமான மீன்பிடிப் படகுகளே இவ்வாறு தீயில் எரிந்து நாசமாகியுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பிலான விசாரணைகளுக்காக 5 பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. (7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1761

Search for people, places and things

## சூர்யகாந்த்

நாம விரும்புற பெண்ணைவிட நம்மள விரும்புற பெண்ணை கட்டிக்கிங்க:.. இந்த மாதிரி பொண்ணுங்ககிட்டையும் சொல்லுங்கய்யா எந்த பொண்ணும் விரும்பமாட்டேங்குது... பொண்டாட்டி உட்பட



## பத்மா

நேரத்திற்கு தகுந்தாற்போல் மாறும் பச்சோந்தி குணம் கொண்ட உறவுகளோடு ஒட்டியிருப்பதை தன்னம்பிக்கையோடு தனியாக நின்றுவிடலாம்



## அபினவ்

தேடிக்கொண்டேயிருந்து வாழ்க்கையை தொலைப்பதைவிட தேவையானதை மட்டும் தேடி வாழ்க்கையை அனுபவியுங்கள்



## சர்வானந்த்

நல்லவனாய் இரு... ஆனால் அதை நிரூபிக்க முயற்சி செய்யாதே. அதைவிட முட்டாள்தனமான விடயம் எதுவுமில்லை



## பிரக்யா

மீண்டும் கிடைக்காத இனிமையான நாட்கள்



## பூமிகா

உன்னால் உடைத்து எறியப்பட்ட பின்பும் உன்னையே நினைத்துக் கொண்டிருக்கும் இதயத்தை விட அழகானது உலகத்தில் வேறெதுவும் இல்லை!



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# முஸ்லிம்களுக்குத் தடை விதித்திருப்பது இன வெறியைத் தூண்டும் செயற்பாடு

## மங்கள குற்றச்சாட்டு

(கொழும்பு)

**தங்கொட்டுவ வார சந்தையில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட முஸ்லிம்களுக்கு வென்னப்புவ பிரதேச சபை தடை விதித்துள்ளமைக்கு நிதி அமைச்சர் மங்கள சமரவீர கண்டனம் தெரிவித்துள்ளார்.**





வடமேல் மாகாணம் தங்கொட்டுவ வார சந்தையில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட முஸ்லிம்களுக்கு வென்னப்புவ பிரதேச சபை தடை விதிப்பதாக வென்னப்புவ பிரதேச சபைத் தலைவர் சுசந்த பெரேரா நேற்று முன்தினம் அறிவித்திருந்தார்.

இது குறித்து டுவிட்டரில் கருத்துத் தெரிவித்துள்ள நிதி அமைச்சர் மங்கள, "மகிந்த ராஜபக்ஷ அணியினரின் பிரதேசசபையில் தடை விதித்திருப்பது இனவெறியைத் தூண்டும் செயற்பாடு" எனப் பதிவிட்டுள்ளார்.

முஸ்லிம் தரப்பினருடன் இணைந்து வியாபாரம் செய்வதனால் பாதுகாப்பினை உணரவில்லை. எனவே பாதுகாப்பு காரணங்களுக்காகவே இந்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பிரதேச சபைத் தலைவர் சுசந்த பெரேரா பிரதேச அரச அதிகாரிகளுக்கு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (7)

# பட்டதாரிகள் சங்கத் தலைவர் நாமல் எம்.பியிடம் மகஜர் கையளிப்பு

வன்னி மாவட்ட ஸ்ரீலங்கா பொதுஜன பட்டதாரிகள் சங்கத்தின் வேலைத்திட்டம் தொடர்பான மகஜர் ஒன்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ விடம் கையளிக்கப்பட்டுள்ளது.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் ஊடகப்பிரிவில் நேற்று முன்தினம் வன்னி மாவட்ட ஸ்ரீலங்கா பொதுஜன பட்டதாரிகள் சங்கத்தினருக்கும் நாமல் ராஜபக்ஷவிற்கும் இடையில் சந்திப்பு இடம்பெற்றது.


இதன்போது சங்கத் தலைவர் ம.ஆனந்தராஜாவினால் மகஜர் கையளிக்கப்பட்டுள்ளதுடன், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் வன்னி மாவட்டத்தில் திட்டமிடப்பட்ட பாரிய வேலைத்திட்டங்கள்



எவையும் இந்த ஆட்சிக்காலத்தில் கூட மேற்கொள்ளப்படவில்லை எனவும் எனவே மன்னார், முல்லைத்தீவு, வவுனியா போன்ற மாவட்டங்களிலுள்ள மக்கள் ஒரு ஆட்சி மாற்றத்தினை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர் எனவும் நாமல் ராஜபக்ஷவிடம் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து நாமல் ராஜபக்ஷ, குறித்த பகுதிகளுக்கு விரைவில் விஜயம் ஒன்றினை மேற்கொண்டு அப்பகுதிகளில் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்திகள், வேலைத்திட்டங்கள் தொடர்பாக கவனம் செலுத்துவதாக பட்டதாரிகளிடம் உறுதியளித்துள்ளார். (7)

# சோபித தேரருக்கு உருவச்சிலை



(கொழும்பு)

மாதுளுவாவே சோபித தேரருக்கு பாராளுமன்றத்துக்கு அருகில் நிர்மாணிக்கப்பட்டுள்ள உருவச் சிலை நேற்று முன்தினம் மாலை திறந்து வைக்கப்பட்டது.

கோட்டை ஸ்ரீகல்யாணி சாமஸ்ரீ சங்க சபையின் மகா நாயக்கர் கலாநிதி இத்தேபான தம்மாலங்கார தேரர் இதனை திரை நீக்கம் செய்து வைத்தார். இந்நிகழ்வில் நாயக்க தேரர்கள், மஹா சங்கரத்ன, சர்வ மதத் தலைவர்கள், சபாநாயகர் கரு ஜெயசூரிய, அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (7)

# செய்தித்துளிகள்

## லொறி-ஆட்டோ-மோ.சைக்கிள் விபத்து; நால்வர் வைத்தியசாலையில் அனுமதி



(பண்டாரகம)

பண்டாரகம களுத்துறை வீதியில் கோரோக்கஸ் பகுதியில் லொறி-ஆட்டோ மற்றும் மோட்டார் சைக்கிளும் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் நான்கு பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

லொறி-ஆட்டோ பின்னால் மோதிய நிலையில், அது கவிழ்ந்து சென்று எதிரே வந்த மோட்டார் சைக்கிளில் மோதியுள்ளது.

இந்தச் சம்பவம் வீடொன்றில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.டி.வி கமராவில் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

## முஸ்லிம்களுக்கு வியாபாரத்தடை வென்னப்புவ பிரதேசசபைத் தவிசாளரை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவு

(வென்னப்புவ)

வென்னப்புவ பிரதேச சபையால் வெளியிடப்பட்ட தடை உத்தரவு தொடர்பில் வென்னப்புவ பிரதேச சபைத் தவிசாளர் உட்பட 6 பேரை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

வென்னப்புவ பிரதேச சபையால் கடந்த திங்கட்கிழமை தங்கொட்டுவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தங்கொட்டுவ வாராந்த சந்தையில் முஸ்லிம் வியாபாரிகள் விற்பனை நடவடிக்கைகளில் ஈடுபடத் தடை உத்தரவு ஒன்று பிறப்பிக்கப்பட்டிருந்தது.

அதனடிப்படையில் நேற்று முன்தினம் தங்கொட்டுவ பொலிஸாருக்குக் கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிஸார் மாரவில நீதிமன்றத்தில் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இதன்போது வென்னப்புவ பிரதேச சபைத் தவிசாளர் கே.வி.சுசந்த உட்பட 6 பேரை நாளை 28 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகித் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டமைக்கான காரணத்தை விளக்கப்படுத்துமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது. (7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | கொடிகாமம் ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 120 | 130 | 90 | 80 |
| உருளைக்கிழங்கு | 140 | 120 | 110 | 140 |
| பச்சைமிளகாய் | 300 | 400 | 350 | 400 |
| தக்காளி | 80 | 80 | 90 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 160 | 110 | 100 |
| கோவா | 100 | 80 | 60 | 80 |
| கரட் | 150 | 160 | 180 | 200 |
| பூசணி | 140 | 100 | 90 | 120 |
| புடோல் | 50 | 90 | 70 | 120 |
| வாழைக்காய் | 80 | 80 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 180 | 150 | 160 | 200 |
| பெரிய வெங்காயம் | 120 | 120 | 110 | 120 |
| பாகற்காய் | 200 | 200 | 180 | 200 |
| வெண்டிக்காய் | 60 | 50 | 70 | 80 |
| கருணைக் கிழங்கு | 50 | 70 | 60 | 80 |
| பயற்றங்காய் | 120 | 100 | 70 | 80 |
| லீக்ஸ் | 80 | 90 | 70 | 100 |
| பீற்றூட் | 60 | 80 | 60 | 80 |
| கறிமிளகாய் | 200 | 140 | 160 | 200 |
| முருங்கைக்காய் | 200 | 320 | 120 | 160 |
| போஞ்சி | 180 | 150 | 200 | 150 |
| கத்தரிப்புள்ள | 80 | 60 | 60 | 80 |
| கீரை-1பிடி | 50 | 25 | 20 | 25 |
| தேசிக்காய் | 300 | 400 | 280 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 40 | 30 | 20-40 |
| இராசவள்ளி | 120 | 160 | 100 | 140 |
| வாழைப்பூ | 200 | 200 | - | 240 |
| முள்ளங்கி | 60 | 80 | 40 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 20 | 40 |
| வல்லாரை | 20 | 40 | 20 | 20 |
| ஈரப்பலா | 50 | 100 | 110 | 80 |




# கரடியாரின் உதவி



நரியாருக்கு அன்று ஒரே சந்தோசம், அருமையான முயல் குட்டி ஒன்று கிடைத்திருக்கிறது. அப்படியே கவ்விக் கொண்டு போய் தன்னுடைய குகையில் வைத்து விட்டது. இப்பொழுது பசியில்லை என்றாலும் கிடைத்த இரையை விடவும் மனமில்லை. அதுவும் முயல் குட்டியாக வந்து நரியாரிடம் மாட்டிக்கொண்டது.

குரங்கு ஒன்று மரத்தில் இருந்து கீழே பார்க்க, முயல் ஒன்று கண்ணீரும் கம்பலையுமாக அங்கும் இங்கும் ஓடிக் கொண்டிருப்பதை பார்த்து என்ன விசயம் என்று தெரிந்து கொள்ள மரத்தை விட்டு இறங்கியது.

என்ன நண்பா? ஏன் இப்படி அழுதுகொண்டிருக்கிறாய்? கேட்டவுடம் முயல் கேவிக் கேவி அழுது கொண்டு என் பிள்ளையைக் காணவில்லை. இங்கு தான் விளையாடிக் கொண்டிருந்தான். நான் இரை தேடப் போய் வருவதற்குள் இவனை காணவில்லை. எல்லா இடங்களிலும் தேடி விட்டேன், என்ன செய்வது என்று தெரியவில்லை.

முயலின் அழுகையை கேட்டதும் குரங்கு சிறிது யோசித்து கேட்டது. உன் பையன் எங்கு விளையாடிக் கொண்டிருந்ததாகச் சொன்னாய்?

அதோ அந்த மரத்துக்கு பக்கத்தில்தான் விளையாட்டிக் கொண்டிருந்தான். எங்கும் செல்லக்கூடாது என்று சொலியிருந்தேன். அப்படியிருந்தும் சொல்லச் சொல்ல அழுகை பொத்துக்கொண்டு வந்தது.

அழாதே சற்றுப் பொறு என் நண்பர்களைக் கேட்டுப் பார்க்கிறேன். எப்படியும் என் நண்பர்கள் அந்த மரத்தின் மேல் இருந்திருப்பார்கள். அவர்கள் பார்த்திருக்க வாய்ப்புண்டு. வா என்ன நடந்திருக்கும் என்று கேட்டுப்பார்க்கலாம்.

முயலை அழைத்துக்கொண்டு அந்த மரத்தடிக்கு வந்தது. மரத்தின் மேல் இருந்த நண்பர்களை அழைக்க அவர்கள் அனைவரும் கீழே வந்து என்னவென்று விசாரித்தன.

முயலிடம், இங்கு ஒரு முயல் குட்டி விளையாடிக் கொண்டிருந்ததை நாங்கள் பார்த்தோம். சற்றுத் தள்ளி ஒரு நரியார் தூங்கிக்கொண்டிருந்தார். அதையும் பார்த்தோம். முயல் குட்டி அங்கும் இங்கும் ஓடிக் கொண்டிருந்தால், ஒருவேளை நரியாரிடம் மாட்டியிருக்கலாம். சொன்னவுடன் ஓ...என்று அழ ஆரம்பித்து விட்டது முயல்.

முயலை அழைத்து வந்த குரங்கு, பொறு அவசரப்படாதே, முதலில் நரி எங்கு போயிருக்கும் என்று தேடிப்பார்க்கலாம். எனக்குத் தெரிந்து அரை மைல் தூரத்தில் ஒரு நரி இருப்பது தெரியும். அநேகமாக அங்கு தான் இருக்கும், போய் பார்க்கலாம், முயலை அழைத்துக் கொண்டு அந்த இடம் சென்றது.

சத்தமில்லாமல் இரண்டும் குகைக்குள் எட்டிப் பார்க்க நரியார் ஏதோ சிந்தனையில் அமர்ந்திருக்க சற்றுத் தொலைவில் முயல் குட்டி திருதிருவென விழித்தபடி முகத்தில் பயத்துடன் உட்கார்ந்திருப்பதை பார்த்தன.

அப்பாடி என் மகன் உயிரோடு இருக்கிறான், ஆனால் எப்படி அவனை தப்பிக்க வைப்பது என இரண்டும் யோசித்தன.

குரங்கு முயலிடம் என் நண்பன் கரடி இருக்கிறான், வா அவனிடம் அழைத்துச் செல்கிறேன். அவன்ஏதாவது யோசனை சொல்வான்.

இவர்கள் கதையை கேட்ட கரடி சற்று யோசித்து, நான் நரியாரிடம் வீணாகச் சண்டைக்குப் போக மாட்டேன். இருந்தாலும் நான் ஒரு உபாயம் செய்கிறேன். நீங்கள் அதற்குள் உள்ளே புகுந்து உங்கள் குட்டியைக் காப்பாற்றிக் கொண்டு செல்வது உங்கள் பொறுப்பு.

சரி என்று சொன்னார்கள் குரங்கும் முயலும். கரடி அவர்களுடன் வந்து நரியின் குகைக்குச் சற்றுத் தள்ளி அவர்களை மறைவாக நிற்க சொல்லிவிட்டு வெளியில் நின்றவாறு நரியாரை அழைத்தது.

வெளியே வந்த நரியார் கரடியைப் பார்த்ததும் உற்சாகமானது. இப்ப தேன் வேட்டைக்கு போறேன் வர்றியா? என்று கேட்ட கரடியாரிடம் வேண்டாம், இப்ப பசியில்லை, இராத்திரி பசிச்சால் முயல் குட்டியைப் பிடிச்சு வைச்சிருக்கேன், அது போதும் என்று சொல்லிவிட்டு உள்ளே போக எத்தனித்தது.

இதை ஒளிந்து நின்று கேட்டுக்கொண்டிருந்த முயலுக்கு அழுகையே வந்து விட்டது. நல்ல வேளை குரங்கு அதனை சமாதானப்படுத்தி, அமைதியாய் இரு, கரடியார் பார்த்துக்குவாரு என்று சொன்னது.

கரடியார் விடாப்பிடியாய், அதுசரி, முயல் குட்டி ஒரு வேளைக்கு போதும்ணா, அதை காலையில சாப்பிட்டுக்கோ, இப்ப தேனுக்கு போனமுன்னா, அதை இரண்டு மூணு நாளைக்கு வைச்சுக்கலாம்என்ன சொல்றே?

உள்ளே போகப்போன நரியாருக்கும் சட்டென அந்த யோசனை வந்தது. அதானே? தேனை கொண்டு வந்து வச்சுட்டா மெதுவாக்கூட சாப்பிட்டுக்கலாம், இல்லை இரண்டு நாளைக்குக்கூட வச்சுக்கலாம். முடிவு செய்தவுடன் சரி, போகலாம் கரடியாருடன் கிளம்பி விட்டது.

அவைகள் இரண்டும் சற்றுத் தூரம் சென்றதும் முயலும், குரங்கும் சட்டென உள்ளே நுழைந்து, முயல் குட்டியை விடுவித்துக்கொண்டு அந்த இடத்தை விட்டுப் பறந்தன.


கரடியாரிடம் சென்ற நரி கை நிறைய தேனடைகளை கவ்விக்கொண்டு மகிழ்ச்சியாய் உள்ளே நுழைந்தது. உள்ளே முயல் குட்டியை காணாமல் திகைத்து நின்றது. இருந்தாலும் நன்றாக தேனை குடித்து வந்த மயக்கத்தில் இருந்ததாலும், வாய் நிறைய தேனடைகள் இருந்ததாலும் இரண்டு நாட்களுக்கு கவலை இல்லை என்பதால் அதிகமாக கவலைப் பட்டுக்கொள்ளவில்லை.

முயல் குரங்குக்கும் கரடியாருக்கும் நன்றி சொல்லிச் சென்றது. அது மட்டுமல்ல அவைகள் மூன்றும் உற்ற நண்பர்களாகவும் ஆகி விட்டனர்.

விலங்குகள் ஆகட்டும், மனிதர்கள் ஆகட்டும், ஒன்றை ஒன்று சார்ந்துதான் வாழ முடியும் குட்டீஸ்.

இருந்தாலும்; ஒரு முயல் குட்டி தப்பி விட்டதால், நரியாருக்கு எந்த உணவுத் தட்டுப்பாடும் வரவில்லை என்பதால், நாம் முயல் குட்டிக்கு வாழ்த்துச் சொல்லி, இனிமேல் ஆபத்தில் மாட்டிக்கொள்ள வேண்டாம் என்று சொல்லி விடுவோம்.

## 6 வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்



## விடுகதைகளும் விடைகளும்

- உடைக்க முடியாத ஓட்டிற்குள் ஒளிந்திருப்பான் கள்ளன். அவன் யார்?

ஆமை

- ஒருநாள் முழுமுகம் காட்டுவான், ஒருநாள் முகமே காட்ட மாட்டான். அவன் யார்?

நிலவு

- வீடு கட்டத் தேவை சாரம். வீட்டு ஒளிக்குத் தேவை இன்னொரு சாரம். அது என்ன சாரம்?

மின்சாரம்

- உடல்முழுதும் நூறுகட்டு, உச்சி முடிக்கு கட்டே இல்லை. அது என்ன?

தென்னை மரம்

- நீரில் மிதக்கும் பூ, இரவில் பூக்கும், பகலில் உறங்கும். அது என்ன பூ?

அல்லிப்பூ

நேரத்தை வீணாக்கும் போது கடிகாரத்தைப் பார்.ஓடுவது முள் அல்ல உன் வாழ்க்கை

~ விவேகானந்தர்.

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## மதவெறி கொண்டு மாபாவம் செய்யாதீர்கள்

மன்னார் திருக்கேதீச்சர ஆலயத்துக்கான வளைவு அமைப்பதற்கு அனுமதி வழங்கிய மன்னார் பிரதேச சபை, அந்த அனுமதியை உடனடியாக இரத்துச் செய்துள்ளதாக அறிவித்திருப்பது அதிர்ச்சி தருவதாகும்.

நுழைவாயில் வளைவு அமைப்பதற்கான விண்ணப்பத்தைப் பரிசீலனை செய்து அனுமதி வழங்கிய பின்பு, உடனடியாகவே அந்த அனுமதியை இரத்துச் செய்வதென்பது எந்த வகையிலும் நியாயமாகாதென்பதுடன் இதற்குப் பின்னணியில் ஒரு பலமான தீய சக்தி இருக்கிறதா? என்ற கோணத்தில் ஆராய்வதும் அவசியமாகும்.

தவிர, திருக்கேதீச்சரம் சிவனாலயம் மிகப் பழைமை வாய்ந்த தமிழர்களின் வரலாற்றுப் பொக்கிஷம் என்பதுடன் தமிழ்த் திருமுறைப் பாடல் பெற்ற திருத்தலம் என்ற பெருமைக்குமுரியது.

நிலைமை இதுவாக இருக்கையில், நுழைவாயில் வளைவு அமைப்பதற்கான அனுமதியை இரத்துச் செய்வதன் பின்னணியில் கத்தோலிக்க மதகுருமார் சிலர் இருந்துள்ளதான தகவல்கள் உண்மையாயின், சம்பந்தப்பட்ட கத்தோலிக்க மதகுருமார் மன்னாரில் மனிதக் குருதியில் தங்களை அபிஷேகம் செய்யத் துணிந்து விட்டனர் என்றே கூறவேண்டும்.

தமிழ் மக்கள் ஒருபோதும் மதவேற்றுமை கொண்டு தங்களுக்குள் பிளவுபட்டு நின்றவர்கள் அல்ல.

அதேநேரம் எத்தனையோ கத்தோலிக்க மதகுருமார் தமிழுக்கும் சைவத்துக்கும் ஆற்றிய பெருந்தொண்டு என்றும் மறப்பதற்குரியதன்று.

அந்தப் பணியை இன்றும் தொடருகின்ற புனிதமான கத்தோலிக்க மதகுருமார் நம் மத்தியில் கணிசமான அளவில் இருக்கின்றனர்.

இதேபோன்று புனித விவிலியத்தை முதன் முதலில் தமிழில் மொழி பெயர்த்துக் கொடுத்தவர் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் எனும் போது, எங்கள் தமிழ் இனத்தில் இருக்கக் கூடிய சமயங்கள் எங்களை இன்னமும் ஒற்றுமைப்படுத்தியுள்ளதென்பதே உண்மை.

சைவமும் தமிழும் வாழ்வதற்காகத் தன்னை அர்ப்பணித்த ஆறுமுகநாவலர் புனித விவிலியத்தை தமிழில் மொழி பெயர்த்துக் கொடுத்தார் என்றால், பிற சமயங்களை மதித்துப் போற்றுகின்ற பெருந்தன்மை நாவலர் பெருமானிடம் எத்துணை உயர்ந்து நின்றது என்பதை மத வெறி பிடித்த மாக்கள் ஒரு கணம் சிந்தித்தாக வேண்டும்.

அதேநேரம் இன்றைய மன்னார் என்பது சேர்.கந்தையா வைத்தியநாதனின் தன்னலம் கருதாத உயர்ந்த சேவையால் எழுந்து நிற்கின்ற ஒரு மாவட்டம்.

இந்த உண்மையை சமகாலத்தில் துள்ளிக் குதிக்கும் சில போலிகள் அறிய வேண்டும்.

எனவே மன்னார் திருக்கேதீச்சரம் நுழைவாயில் வளைவு என்பது தடுக்கப்படுமாயின் அது ஒரு பெரும் பின்னணியோடு நடப்பதாகவே நாம் கருத வேண்டும்.

நுழைவாயில் வளைவைத் தடுப்பதற்கு மும்முரமாக நிற்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் வளைவைத் தடுப்பதாக யாரும் நினைத்து விடாதீர்கள்.

மாறாக இவர்கள் தமிழ் மக்களின் ஒற்றுமையை உடைக்கின்ற கூலிப்படைகள் என்பதே உண்மையாகும்.

தமிழ் மக்கள் இன்றுவரை மதத்தால் வேறுபடாது ஒற்றுமையாக வாழ்ந்து வருவதை உடைத்து, தமிழினத்தை சங்காரம் செய்கின்ற கொடுமைக்கு யாரும் இடம் கொடுத்து விடாதீர்கள் என்பதே நம் தாழ்மையான வேண்டுதல்.

# அவசரகாலச் சட்டம் தற்போது நாட்டுக்கு அவசியம்

## ஜனாதிபதி தெரிவிப்பு

பயங்கரவாத தாக்குதல்கள் தொடர்பாக பாதுகாப்பு ஏற்பாடுகள் திருப்தியாக உள்ளதாக தெரிவித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன,

எனினும் சில விடயங்கள் காரணமாக தொடர்ந்தும் நாட்டில் அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கான தேவை யுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகப் பிரதானிகளுடனான சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக தாக்குதல் சம்பவங்கள் தொடர்பாக கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை தடுத்து வைத்து விசாரிக்க, இராணுவத்தினரை தூதரகங்களில் பாதுகாப்பில் ஈடுபடுத்த மற்றும் ஆடைகள் தொடர்பான கோட்பாடுகளை பேணுவதற்கு அவசரகாலச் சட்டம் தேவைப்படுகிறது.

இதற்கமைய அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிக்க வாய்ப்புள்ளதாகவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன தெரிவித்துள்ளார்.

கடந்த ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி நாட்டில் இடம் பெற்ற தற் காலைக் குண்டுத் தாக்குதல்களைத் தொடர்ந்து அவசரகாலச் சட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (9)

# நளினி முருகனை நேரடியாக நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்கு உத்தரவு

ராஜிவ் காந்தி கொலை வழக்கில் சிறையில் உள்ள நளினி முருகனை எதிர்வரும் ஜூலை மாதம் ஐந்தாம் திகதி நீதிமன்றில் நேரடியாக முன்னிலைப் படுத்த அனுமதிக்குமாறு சென்னை மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

லண்டனில் வசிக்கும் தமது மகளின் திருமணத்திற்காக 6 மாதம் விடுமுறை வழங்கப்பட வேண்டும் என கோரி நளினி முருகன் சென்னை மேல் நீதிமன்றில் மனுவொன்றை தாக்கல் செய்தார்.

இந்த மனு நீதிபதிகளான எம்.எம் சுதர்ஷன், எம். நிர்மல் குமார் ஆகியோர் முன்னிலையில் நேற்று முன்தினம் ஆராயப்பட்டது.

இதுவரையில் தொலைக் காணொலி தொழில்நுட்பம் மூலம் நீதிமன்றில் பிரசன்னப்படுத்தப்பட்ட நளினி முருகன், தமது வாதங்களை முன்வைக்க நீதிமன்றில் நேரடியாக முன்னிலையாவதற்கு அனுமதிக்குமாறு கேட்டிருந்தனர்.

இதன்படி நளினி முருகனை எதிர்வரும் ஜூலை 5 மாதம் ஐந்தாம் திகதி பிற்பகல் 2.00 மணியளவில் நீதிமன்றில் முன்னிலையாக அனுமதிக்கப்பட்டுள்ளது. (7)

# உத்தரவாதக் கல்வி நிகழ்ச்சித்திட்டம்-2019

யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, யா/முத்துத்தம்பி மகாவித்தியாலயம், யா/புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தா கல்லூரி ஆகிய பாடசாலைகளில் 13 வருட உத்தரவாதக் கல்வி நிகழ்ச்சித் திட்டம் 2019 (க.பொ.த.உ.த தொழிற்றுறைப் பிரிவு) ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட அனைத்துப் பாடசாலைகளிலும் 2018 ஆம் ஆண்டிலும் அதற்கு முன்னைய வருடங்களிலும் க.பொ.த சா/த பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் தொழிற்றுறைப் பிரிவில் இணைந்து கற்க முடியும் இவர்களுக்கு பாட நிறைவின் போது **NVQ 04** சான்றிதழ் வழங்கப்படவுள்ளது. இதற்கான விண்ணப்பப்படிவங்களை குறித்த பாடசாலைகளில் பெற்று இணைந்து கற்க முடியும் என யாழ்ப்பாண வலயக் கல்விப்பணிப்பாளர் செ.சந்திரராஜா அறிவித்துள்ளார்.

இதன் மூலம் மாணவர்கள் அறிவு, திறன், மனப்பாங்கு அபிவிருத்தி , தொழில்நுட்ப தொழில்முறை மற்றும் சமூகத் திறன்களின் மேம்பாடு, சுய அபிமான மற்றும் ஆளுமை அபிவிருத்தி என்பவற்றுடன் வெற்றிகரமான இலங்கைக் குடிமகனாக திகழ்வதற்கு உரிய சந்தர்ப்பத்தை இப்பாட நெறிகள் உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (5)

# இலங்கை-எல்சல்வடோர் குடியரசுக்கிடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திட தீர்மானம்

(கொழும்பு)

அரச பொறிமுறை மற்றும் உத்தியோகபூர்வ வெளிநாட்டு அனுமதிப்பத்திரம் கொண்டுள்ள நபர்கள் விசாவிற்கான அனுமதி பத்திரத்தை பெற்றுக்கொண்ட தன் பின்னர் விடுவிக்கப்படுவதற்காக இலங்கை மற்றும் எல்சல்வடோர் குடியரசிற்கு இடையில் புரிந்துணர்வை எட்டுவதற்கான செயற்றிட்டத்தை முன்னெடுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இலங்கை மற்றும் எல்சல்வடோர் குடியரசிற்கு இடையில் பிரஜைகளுக்கு அந்நியோன்னிய அடிப்படையில் போக்குவரத்து வசதி செய்தல் மற்றும் சம்பந்தப்பட்ட வழிமுறைகளை விரிவுபடுத்துதல் மற்றும் இரு நாடுகளுக்கு இடையில் நட்புறவு தொடர்புகளை மேலும் வலுப்படுத்தும் நோக்கிலேயே இவ் வாறு புரிந்துணர்வை எட்ட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்காக அரச இராஜ தந்திர மற்றும் உத்தியோக பூர்வ வெளி நாட்டு கடவுச் சீட்டு கொண்டுள்ள நபர்கள் விசா அனுமதிப்பத்திர த்தை பெற்றுக்கொள்வதில் இருந்து விடுவித்தல் மற்றும் அவ்வாறு பிரவேசிக்கும் பிரஜைகளுக்கு விசா அனுமதிப்பத்திரமின்றி நாட்டில் 30 வருடம் தங்கி யிருப்பதற்கு அனுமதியை வழங்குவதற்காக புரிந்துணர்வை எட்ட எதிர்பார்ப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க இலங்கை மற்றும் எல்சல்வடோர் குடியரசுக் கிடையில் எட்டப்படவுள்ள உத்தேச புரிந்துணர்வு உடன்படிக்கையை கைச்சாத்திடுவதற்கும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது. (9)

# ஜப்பானில் தொழில் வாய்ப்பு தொடர்பில் எவரிடமும் ஏமாற வேண்டாம் - மனுஷ

ஜப்பானில் புதிய தொழில் வாய்ப்புத் தொடர்பில் அந்தந்த விடயங்களுக்கான தகுதி மற்றும் விதிகள் தொடர்பில் அறிவிக்கப்படவுள்ளது. அது வரையில் எந்தவொரு நிறுவனத்திலோ அல்லது நபரிடமோ ஏமாந்து விடக் கூடாது என்று பாராளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மகாநாட்டில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பாகத் தேவையான தகுதி மற்றும் மொழியாற்றல் குறித்து தற்பொழுது ஜப்பான் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையிலான புதிய தொழில் வாய்ப்பின் கீழ் 14 துறைகளுக்காக எம்மால் பணியாளர்களை ஜப்பானுக்கு அனுப்ப முடியும்.

கப்பல் இயந்திர உபகரணங்கள் துறை, விமானச் சேவை தொழிற்துறை, இலத்திரனியல் தொழிற்துறை, தகவல் தொழில்நுட்பம், உணவு பான தயாரிப்பு, கடற்றொழில் மற்றும் நீரியல்வள உற்பத்தி, கைத்தொழில் துறை, கட்டிட நிர்மாணம், தொழில்நுட்ப இயந்திர உபகரணங்கள், இயந்திர உதிரிப்பாகங்களை ஒன்றிணைத்தல், பராமரிப்பு சேவை, கட்டிடங்களைச் சுத்தம் செய்தல், முகாமைத்துவம், வாகனங்கள் பராமரிப்பு சேவை, தங்குமிட சேவை, உணவு சேவை, தொழிற்துறை உள்ளிட்ட 14 துறைகளில் இலங்கைப் பணியாளர்களுக்குத் தொழில் வாய்ப்புகள் உண்டு.

இவை ஜப்பானின் பல வேறு அமைச்சுகளுக்கு உடபட்டதாக அமைந்துள்ளது.

இவை அனைத்து தகவல்களையும் ஒரே முறையில் வழங்குவதற்கு ஜப்பானின் எந்தவொரு நிறுவனமும் தொடர்புபடவில்லை என்றும் அவர் தெரிவித்தார். ஜப்பான் அரசாங்கத்துடன் நாம் உடன்படிக்கையை மேற்கொண்டதை அடுத்து அந்நாட்டில் ஏனைய அமைச்சுகளுக்கான தொழில் வாய்ப்புகளுக்கான தேவையான தகுதிகளை உள்ளடக்கிய விடயங்கள் குறித்து இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் தலைவர் தற்பொழுது பேச்சு வார்த்தை நடத்தி வருகின்றார்.

ஒவ்வொரு விடயத்துடன் தொடர்புபட்ட துறைக்குத் தேவையான தகுதி எமக்கு தனித்தனியாக விடயங்களைக் குறிப்பிட வேண்டியுள்ளது. இவை தொடர்பில் தீர்மானத்தை மேற்கொண்டு உடன்பாட்டுக்கு நாம் வரவில்லை. வயதெல்லை ஜப்பான் வயது வரையறைக்கு உட்பட்டதாக அமையும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த 14 துறைகளுக்கும் தேவையான தொழில் அனுபவத்தைக் கொண்ட இளைஞர் யுவதிகளை நாம் அடையாளம் காண வேண்டும் இதே போன்று அந்தந்த துறைக்குத் தேவையான எண்ணிக்கையில் இந்த சம்பந்தப்பட்ட அனைவரும் ஜப்பான் மொழியில் தேர்ச்சி பெற்றிருப்பது அவசியமாகும். இந்த அளவிற்கு எம்மை நாம் தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும் என மேலும் தெரிவித்தார். (7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை யாழ். பிரதேசத்தில காங்கேசன்துறை, மயிலிட்டி, தையிட்டி, வறுத்தலைவிளான், வீமன்காமம், பலாலி, காங்கேசன்துறை கரிசன் 5ஆவது பொறியியல் படைமுகாம், காங்கேசன்துறை வடக்கு கடற் படை முகாம், பலாலி இராணுவத் தலைமைக் காரியாலயம், மயிலிட்டி கரிசன் 5ஆவது பொறியியல் படைமுகாம், பலாலி இலங்கை விமானப்படை முகாம், மயிலிட்டி கரிசன் 5ஆவது பொறியியல் படை முகாம் (புதியது), பலாலி விமானப்படை ஒய்வுக்கால விடுதி ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில** பாலம்பிட்டி, தட்சணா மருதமடு ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

# வவுனியாவில் நடைபெற்ற திறந்த சதுரங்கப்போட்டிகள்






வவுனியாவில் திறந்த சதுரங்க விளையாட்டுப் போட்டி கடந்த 23 ஆம் திகதி வைரவப்புளியங்குளம் கிராம உத்தியோகத்தர் அலுவலகத்தில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராக வெண்கலச் செட்டிகுளம் பிரதேச செயலாளர் கெ.சிவகரன் கலந்து கொண்டிருந்தார்.

வவுனியா மாவட்ட சதுரங்க சம்மேளனச் செயலாளர் பிரபாகரன் ஜானுஜன் தலைமையில் நடைபெற்ற சதுரங்க விளையாட்டு நிகழ்வில் இளைஞர், யுவதிகள்,மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

இந்நிகழ்வில் வவுனியா மாவட்ட உதவிச் செயலாளர் நா.கமலதாசன், வைரவப்புளியங்குளம் கிராம உத்தியோகத்தர் க.விஜயகுமார், ஐ.சி.சி.கம்பஸ் இயக்குநர் எஸ்.சந்திரகுமார், வர்த்தகர் ஜீவகரன், மாவட்ட செயலகத்தின் உத்தியோகத்தர் ஜெ.ஜெயசீலன் ஆகியோர் விருந்தினராகக் கலந்து கொண்டிருந்தனர். (க)

# அந்த நொடி நான் பயந்து விட்டேன் இலங்கை அணி வீரர் குசல் மெண்டிஸ்



உலகக் கோப்பைத் தொடரில் இங்கிலாந்து அணிக்கு எதிரான போட்டியின் போது தான் பயந்ததாக இலங்கை வீரர் குசல் மெண்டிஸ் வெளிப்படையாகக் கூறியுள்ளார்.

உலகக் கோப்பைத் தொடரில் இங்கிலாந்து அணிக்கு எதிரான போட்டியில் இலங்கை அணி 20 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருந்தது. இறுதிவரை விறுவிறுப்பாக இடம்பெற்ற இந்தப் போட்டியில் இலங்கை அணிக்கு கடும் சவால் கொடுத்தவர் இங்கிலாந்து அணியின் பென் ஸ்டோக்ஸ்.

போட்டியின் போது இங்கிலாந்து அணி 9 விக்கெட் இழந்த நிலையில், மலிங்க வீசிய பந்தினை ஸ்டோக்ஸ் பறக்கவிட்டார். பந்து நேரடியாக எல்லைக்கோட்டிற்கு அருகில் இருந்த குசல் மெண்டிஸை நோக்கிச் செல்ல, அவர் கட்ச் பிடிக்காமல் தவறவிட்டார்.

இதுகுறித்து கருத்துத் தெரிவித்துள்ள மெண்டிஸ், நான் அந்த கட்சை தவறவிட்டதன் பின்னர் பயந்துவிட்டேன். காரணம் போட்டியின் முடிவு மாறியிருந்தால் அதற்கான பழி என் மீது வந்திருக்கும். ஆனால், நுவான் பிரதீப் போட்டியின் முடிவை சாதகமாக்க உதவியிருந்தார்.

பீல்டிங்கில் இலங்கை அணி எப்பொழுதும் போன்று செயற்படுகிறோம். கடந்த வருடத்தை பார்க்கும் போது நான் அணியில் சிறந்த களத்தடுப்பு வீரராக இருந்தேன். ஆனால் இவ்வருடம் அதிக பீல்டிங்கை தவறவிட்டுள்ளேன்.

அதே நேரம் அனைத்து அணிகளும் பீல்டிங்கில் தவறவிடுகின்றன. அதனால், பீல்டிங்கில் தவறவிடுவதை குறித்துக் காட்ட முடியாது என கூறியுள்ளார். (க)

# கொடுக்குளாய் சக்திவேல் வி.கழகத்தை வீழ்த்தி சம்பியனாகியது பொற்பதி சென்.பீற்றர்ஸ் அணி



31 ஆவது தேசிய இளைஞர் விளையாட்டு விழாவை ஒட்டிய உதைபந்தாட்ட இறுதிப் போட்டியும் வடமராட்சி கிழக்கு பிரதேச இளைஞர்களின் விளையாட்டு விழாவும் கடந்த 22 ஆம் திகதி சனிக்கிழமை பொற்பதி சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றது. இந்த விளையாட்டுக்களில் விளையாடி இறுதிப் போட்டிக்கு தெரிவான கொடுக்குளாய் சக்திவேல் விளையாட்டுக் கழகமும் பொற்பதி சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதின. விளையாட்டின் போது இரண்டு அணிகளும் ஒன்றை ஒன்று விடாது கடும் சவாலுக்கு உள்ளான விளையாட்டாக இடம் பெற்றது. இறுதி நேரத்தில் பொற்பதி சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகம் ஒரு கோலைப் போட்டு வெற்றியைத் தனதாக்கிக் கொண்டது. (க-64)

# யோக்கர் மன்னன் சாதனை



ஒருநாள் கிரிக்கெட்டில் கடந்த 2010 இல் இருந்து நடந்த போட்டிகளில் அதிக யோர்க்கர் பந்துகளை வீசிய பந்துவீச்சாளர் என்ற பெருமையை லசித் மலிங்க பெற்றுள்ளார். சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் வேகப்பந்து வீச்சில் பல்வேறு சாதனைகளை படைக்கும் பல பந்து வீச்சாளர்கள் உலகளவில் உள்ளனர்.

வேகப்பந்து வீச்சில் மிக சிறப்பான அம்சமாக கருதப்படுவது யார்க்கர் பந்துகள்தான்.

அந்த வகையில் கடந்த 2010 இல் இருந்து தற்போது வரை அதிக யோர்க்கரை ஒருநாள் போட்டிகளில் வீசியவர் என்ற சாதனையை படைத்துள்ளார் இலங்கை அணியின் லசித் மலிங்க.

அவர் இந்த காலகட்டத்தில் 872 முறை யோர்க்கர் பந்துகளை வீசி எதிரணி துடுப்பாட்ட வீரர்களைத் திணறடித்துள்ளார்.

இந்த பட்டியலில் அவுஸ்திரேலியாவின் மிட்செல் ஸ்டார்க் இரண்டாவது இடத்தில் உள்ளார்.

# தேசிய இளைஞர் சேவை மன்ற விளையாட்டு யாழ்.மாவட்ட பெண்கள் அணி இரண்டாமிடம்



தேசிய மென்பந்து சுற்றுப் போட்டி யாழ்.மாவட்ட அணி இரண்டாம் இடத்தைப்பெற்றுள்ளது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் வருடம்தோறும் நடத்துகின்ற இளைஞர் விளையாட்டு விழாவில் இம்முறை 31 ஆவது தேசிய விளையாட்டு விழா போட்டிகள் இடம்பெற்று வருகின்றன.

அந்த வகையில் பெண்களுக்கான மென்பந்து கிரிக்கெட் போட்டி கண்டி, கம்பளை விக்ரமபாகு மத்திய கல்லூரி மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது. இறுதிப் போட்டியில் யாழ். மாவட்ட அணி இரண்டாம் இடத்தை பெற்றுக் கொண்டது. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்



வடமாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கத்தினரால் கச்சாய் மகா வித்தியாலயத்திற்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. (க)




இங்கிலாந்து-அவுஸ்திரேலியா அணிகளின் வீரர்கள் மைதானத்தில் இருந்து புகைப்படம் எடுத்த பின்னர், தாங்கள் இருந்த இருக்கைகளை தாங்களே எடுத்துச் சென்ற புகைப்படம் தற்போது சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

## பயங்கரவாத தாக்குதல்...

ஈஸ்டர் தாக்குதல் குறித்து விசாரணை நடத்த நியமிக்கப்பட்ட பாராளுமன்ற விசேட தெரிவுக்குழு முன்னிலையில் நேற்று சாட்சியமளித்த போதே, அவர் இவ்வாறு கூறினார்.

கேள்வி:- கடந்த 21ஆம் திகதி தாக்குதல் சம்பவத்தின் போதும் இப்போதும் உள்ள நாட்டின் பாதுகாப்பு நிலைமைகள் எவ்வாறு உள்ளது? இந்த பயங்கரவாத செயற்பாடுகளை வெற்றிகொள்ள முடிந்துள்ளதா?

பதில்:- இந்த பயங்கரவாதம் என்பது சர்வதேச பயங்கரவாதமாகும். அதற்கே நாம் முகங்கொடுத்து வருகின்றோம். தெரியாத எதிரியோடு நாம் போராடிக் கொண்டுள்ளோம். இந்த பயங்கரவாத தாக்குதல் இதற்கு முன்னர் இருந்த பயங்கரவாத தாக்குதலை விட மாறுபட்ட ஒன்றாகும். இப்போது இந்த பயங்கரவாதத்தை கட்டுப்படுத்தியுள்ளோம்.

முப்படை மற்றும் பொலிஸ் இணைந்து இந்த பயங்கரவாதத்தை தடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றோம். ஆனால் இந்த பயங்கரவாதம் முடிந்துவிட்டது என்ற வார்த்தையை எம்மால் கூற முடியாது. எவ்வாறு இருப்பினும் இறுதியை பார்க்கும் வரையில் போராடிகொண்டுள்ளோம். அவசர கால சட்டம் நீடிக்கப்பட்டுள்ளது. ஆகவே தொடர்ந்தும் கைதுகளை மேற்கொண்டு விசாரணைகளை நடத்த எமக்கு அதிகாரம் உள்ளது. இதற்கு பின்னர் அரசாங்கமாக இணைந்து பேச்சுவார்த்தைகளை நடத்தி அடுத்த கட்டத்தை ஆராய வேண்டும்.

முன்னர் இருந்த நிலைமையை விட இப்போது முப்படை மற்றும் பொலிஸ் இடையிலான தொடர்பு அதிகரித்துள்ளது. பாதுகாப்பு செயலாளர் ஒருவராக முன்னாள் இராணுவத் தளபதி ஒருவரை நியமித்துள்ள காரணத்தினாலும் புதிய புலனாய்வு அதிகாரி சி.என்.ஐ ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளதாலும் நெருக்கம் அதிகரித்துள்ளது. அனைவரும் ஒன்றாக இணைந்து பேச முடிகின்றது. ஒவ்வொரு வாரமும் பாதுகாப்புக்கூட்டம் புலனாய்வு மீளாய்வுக் கூட்டங்கள் இடம்பெற்று வருகின்றது அதுவும் சர்வதேச நாடுகளுடன் உள்ள தொடர்பும் இந்தியாவின் ஒத்துழைப்பும் எமக்கு பலமாக இன்று அமைந்துள்ளது.

கேள்வி:- எமது புலனாய்வு துறை ஏனைய நாடுகளின் புலனாய்வு துறைபோன்று அல்லது யுத்த கால கட்டத்தில் சரத் பொன்சேகாவிடம் இருந்த புலனாய்வு போன்று பலமாக உள்ளதா?

பதில்:- அந்த யுத்தம் வேறு, பீல்ட் மார்சல் சரத் பொன்சேகாவிடம் இருந்த அணி இன்று இல்லை. யுத்தத்தை ஆரம்பித்ததைப்போல அல்லாது முடிக்கும் போது மிகவும் பலமாகவும் சர்வதேசத்தினால் ஏற்றுகொள்ளக்கூடிய வகையிலும் அத்துடன் பயங்கரவாதத்தை முழுமையாக தோற்கடிக்கும் வகையில் எமது புலனாய்வுத்துறை செயற்பட்டது. பின்னர் கடந்த பத்து ஆண்டுகளில் சில பின்னடைவுகள் இருக்கலாம் ஆனால் எவ்வாறு இருப்பினும் மீண்டும் ஒன்றிணைந்து பலமாக எமது பாதுகாப்பு மற்றும் புலனாய்வு துறைகளை கட்டியெழுப்பவேண்டிய தேவையே எமக்கு உள்ளது.

கேள்வி:- ஆரம்பத்தில் சாட்சியத்துக்கு வந்த பாதுகாப்பு செயலாளர் கூறினார் பயங்கரவாதம் உடனடி அச்சுறுத்தல் மற்றும் நீண்டகால அச்சுறுத்தல் என்ற காரணிகளை கூறினார். பயங்கரவாதிகளுக்கு அவ்வாறு ஒன்று இருக்க வாய்ப்பில்லை, எனினும் அவசர கால அச்சுறுத்தல் 99 வீதம் முடிந்துள்ளது என அவர் கூறி இரண்டு வாரங்களில் சண்டியில் இருந்து தற்கொலைதாரி ஒருவரும், சவுதியில் இருந்ததாக சிலரும் கைதுசெய்யப்பட்டனர். அப்படியென்றால் 99 வீதம் முடிந்ததாக கூறிய பின்னர் இந்த கைதுகள் எல்லாம் ஒரு வீத அச்சுறுத்தலா?

பதில்:- அவர் கூறிய கருத்து குறித்து என்னால் ஒன்றும் கூற முடியாது. ஆனால் இன்று அச்சுறுத்தல் நிலைமைகள் குறைவாகவே உள்ளது. குறிப்பாக சாய்ந்தமருது சம்பவத்தின் பின்னர் நிலைமைகளை கட்டுப்படுத்த முடிந்தது. எனினும் 100 வீதம் கட்டுப்பாட்டில் உள்ளது என கூற முடியாது. ஆனால் அதிகமாக நிலைமைகள் எமது கட்டுப்பாட்டில் தான் உள்ளது. வீதமாக கூறுவதை விட அவசரமாக ஏதும் நடக்கும் என்ற அச்சுறுத்தல் நீங்கியுள்ளது. இந்த நபர்கள் மற்றும் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்ட பின்னர் இந்த நிலைமை நீங்கியுள்ளது.

கேள்வி:- அப்படியென்றால் நீங்கள் கூறுவது முதல் இரு நாட்களில் இந்த சம்பவத்துடன் தொடர்புடைய அமைப்புகளை கண்டறிந்துவிட்டீர்கள், நபர்களை கைதுசெய்யவே காலதாமதம் அப்படியா?

பதில்:- அப்படித்தான்.

கேள்வி:- பயங்கரவாதத்துடன் நாம் நெருக்கமாக செயற்பட்டோம். பயங்கரவாத தாக்குதல் அடுத்தடுத்து நடக்காதே, ஒருதரம் குண்டு வெடித்து தேடுதல் நடந்தவுடன் இனி அச்சுறுத்தல் இல்லை என ஒரு நிலைப்பாட்டுக்குவர முடியாது என்பதை ஏற்றுக்கொள்கின்றீர்களா?

பதில்:- ஆம், இவ்வாறான தாக்குதலுக்கு கால எல்லை இல்லை என்பதை நான் ஏற்றுக்கொள்கின்றேன். நீண்டகால திட்டங்களில் இது நடக்கலாம். இனியும் எவருக்கும் தேவை இருப்பின் மீண்டும் தாக்குதல் நடக்கலாம். அதனால் தான் தேடுதலில் தொடர்ந்தும் இராணுவத்தை ஈடுபடுத்தி வைத்துள்ளோம். பலப்படுத்தியும் உள்ளோம். ஆனால் இந்த பயங்கரவாதம் நூறு வீதம் முடிவுக்கு வந்துவிட்டது என நாம் கூற முடியாது.

இந்த அச்சுறுத்தல் இன்னமும் உள்ளது. விடுதலைப்புலிகளை கூட நாம் இன்னமும் தேடிக்கொண்டு தான் உள்ளோம். அவர்களும் இன்றும் சில சில புலம்பெயர் அமைப்புகளுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றனர். ஆகவே இராணுவமாக நாம் இதனை கருத்தில் கொள்ள வேண்டும், விடுதலைப்புலிகளை பொறுத்தவரை அந்த அமைப்பின் தலைமைத்துவம் அழிக்கப்பட்ட பின்னர் ஒரு சில தலைவர்கள் சரணடைந்த பின்னரும் மேலும் பலர் சரணடைந்த பின்னர் அந்த அமைப்பு அப்படியே வீழ்ச்சிகண்டு விட்டது. ஆனால் இது அவ்வாறு அல்ல.

கேள்வி:- இந்த தாக்குதல் ஒரு நேரத்தில் ஏழு எட்டு குண்டுவெடிப்பு சம்பவங்கள் இடம்பெற்றது. புலிகள் கூட அவ்வாறு ஒருநாளும் தாக்கியதில்லை. ஒரு நேரத்தில் ஒரு தாக்குதல்தான். இது அவ்வாறு அல்ல அச்சத்தை ஏற்படுத்த வேண்டிய நோக்கம் உள்ளது. இதில் பயங்கரவாதத்தை கூறவேண்டியதை செய்து முடிக்க ஒரு நபர் இருந்தால் போதும்.

பதில்:- ஆம், இந்த தாக்குதல் ஆயுதம் மூலமாக மட்டும் அல்ல வாகனம் மூலமாகவோ விமானம், வேறு ஏதேனும் ஒன்றின் மூலமாக தாக்குதல் நடத்த முடியும். எல்லா நாடுகளிலும் இது நடக்கலாம்.

இந்த கேள்விகளின் பின்னர் ஊடகங்களை நிராகரித்து இராணுவத் தளபதியிடம் வாக்குமூலம் பெறப்பட்டது. (ம)

## ஜனாதிபதி மைத்...

உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்துள்ளார்.

அத்தோடு ஜனாதிபதி கூறியதை ஒருபோதும் செய்வதில்லை என சுட்டிக்காட்டிய அவர் மரணதண்டனையையும் செயற்படுத்த கூடாது என பிரார்த்திப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நேற்று புதன்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர், மரணதண்டனை வழங்குவதால் மட்டும் குற்றங்களை ஒருபோதும் குறைக்க முடியாது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் மரண தண்டனை குறித்து பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்றும் ஹர்ஷன ராஜகருணா கோரிக்கை விடுத்துள்ளார். (ம)

## றிஷாத்திடம் நேற்று...

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள பாராளுமன்ற தெரிவுக்குழு நேற்று பகல் 2.30 மணியளவில் மீண்டும் கூடியது.

இராணுவத் தளபதி லெப்டினல் ஜெனரல் மகேஷ் சேனாநாயக்க மற்றும் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் செயலாளர் உள்ளிட்டவர்கள் நேற்றைய தினம் சாட்சி வழங்கினர். (ம)

## சஹ்ரான் மனைவியிடம் மூடிய...

நீதிமன்றில் நேற்று புதன்கிழமை, முதல் தடவையாக முன்னிலைப் படுத்தப்பட்டார்.

கடந்த ஏப்ரல் 26ஆம் திகதியன்று, சாய்ந்தமருதில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டு வெடிப்பில் சஹ்ரான் குழுவினர் உள்ளிட்ட 15 பேர் உயிரிழந்த சம்பவத்தில், சஹ்ரானின் 28 வயதுடைய மனைவி ஹாதியாவும் அவரின் மூன்று வயது மகளும் உயிர் தப்பியிருந்தனர்.

குற்றப் புலனாய்வு திணைக் களத்தினரால் கொழும்பிலிருந்து வழக்கு விசாரணைக்காக அழைத்து வரப்பட்ட ஹாதியா, நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட நிலையில், அவரிடம் மூடிய அறையில் விசாரணைகள் இடம்பெற்றன.

இந்த வழக்கில் மேலும் மூன்று சாட்சியாளர்களிடமும், மூடிய அறையில் தனித்தனியாக நேற்றைய தினம் விசாரணைகள் இடம்பெற்றன.

வழக்கு விசாரணைகளின் பின்னர், நீதிமன்ற உத்தரவுக்கிணங்க கல்முனை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துவரப்பட்ட ஹாதியாவிடம், அங்கு வாங்கத மூலம் பெறப்பட்டதாக கல்முனை பொலிஸார் தெரிவித்தனர்.

அந்த வாக்குமூலத்தில் சஹ்ரான் குழுவினருடன் பணக் கொடுக்கல் - வாங்கலில் ஈடுபட்டோர் குறித்தும், தாக்குதல் தொடர்பில் தான் அறிந்த விடயங்கள் பற்றியும் சஹ்ரானின் மனைவி தெரிவித்துள்ளதாகவும் கல்முனை பொலிஸாரிடம் இருந்து தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த வழக்கின் அடுத்த விசாரணை, எதிர்வரும் 3ஆம் திகதி இடம்பெறவுள்ளது. (ம)

## அரசுடன் இணைந்தாலே தமிழ்...

வித்தார்.

மேலும், முஸ்லிம் பிரதிநிதிகள் கடந்தகாலங்களில் அரசாங்கங்களுடன் இணங்கி செயற்பட்டமையாலேயே முஸ்லிம் பிரதேசங்கள் அபிவிருத்தியடைந்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

வன்னி பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கல நாதனால் வவுனியா பாலமோட்டையில் சன சமூக நிலையம் நேற்று புதன்கிழமை காலை திறந்து வைக்கப்பட்டது

பாலமோட்டை கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் கு.குருபரன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இங்கு மேலும் தெரிவித்த அவர், ஆயுத போராட்டத்தை மௌனித்த பின்னர் தமிழர்களுக்கு தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டிய கடப்பாடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு காணப்பட்டது. புதிய அரசாங்கத்திற்கு ஆதரவளித்தமையினாலேயே தமிழர் பகுதியில் சில செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

அதேபோல முஸ்லிம் பிரதிநிதிகள் கடந்தகாலங்களில் அரசாங்கங்களுடன் இணங்கி செயற்பட்டமையாலேயே அவர்கள் முன்னேறியுள்ளனர் என மேலும் தெரிவித்தார். (ம-3)

## போதை குற்றவாளிகள் 4 பேரை...

படுத்தினார்.

4 பேரைத் தூக்கிலிடுவதற்கான ஆணையில் தாம் கையெழுத்திட்டுள்ளதாகவும், அவர்களுக்கு விரைவில் தண்டனை நிறைவேற்றப்படும் என்றும் ஜனாதிபதி கூறினார்.

தேசிய போதைப்பொருள் தடுப்பு வாரம், ஜூன் 23ஆம் திகதி தொடக்கம், ஜூலை முதலாம் திகதி வரை கடைப்பிடிக்கப்படுகிறது.

இதனை முன்னிட்டு 13 தூக்குத் தண்டனைக் கைதிகளைத் தூக்கிலிட அரசு திட்டமிட்டுள்ளதாகவும், அதனை உடனடியாகத் தடுத்து நிறுத்துமாறும் சர்வதேச மன்னிப்புச் சபை கோரியிருந்தது. (ம-3)

## நாங்கள் மாத்திரம் தொடர்ந்து....

அவர்களது செயற்பாடுகள் தமிழ் மக்களுக்கோ அல்லது முஸ்லிம் மக்களுக்கோ நல்லதல்ல. உண்மையில் தமிழ் முஸ்லிம் மக்களிடையே பரஸ்பர புரிந்துணர்வு வேண்டும். அந்தப் புரிந்துணர்விற்கான விட்டுக் கொடுப்புக்களை நாங்கள் மாத்திரம் தொடர்ந்தும் செய்து கொண்டிருக்க முடியாது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும்புளொட் அமைப்பின் தலைவருமான தர்மலிங்கம் சித்தார்த்தன்.

யாழ்.சுன்னாகம் கந்தரோடையிலுள்ள அவரது இல்லத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பின் போது அவர் இவ்வாறு தெரிவித் துள்ளார். அவர் மேலும் தெரிவிக் கையில்,

கல்முனைப் பிரச்சினை மிக நீண்டகாலமாக - குறிப்பாக பிரேமதாசா காலம் முதல் இருந்து வருகின்ற பிரச்சினை தான். ஆயினும் இதை எதிர்க்கும் முஸ்லிம் சமூகத்திற்கு இதனால் எந்தப் பாதிப்பும் நேரடியாக வரப்போவதில்லை. அவ்வாறான பாதிப்புக்கள் அவர்களுக்கு எதுவுமே கிடையாது.

இருந்தாலும் அந்தப் பகுதியிலே ஒரு தமிழ்ப் பிரதேச செயலகமொன்று உருவாக்கப்பட்டு செயற்படுவதன் மூலம் அங்கு தங்களுடைய இருப்பை பரவலாக்கிக் கொள்வதற்கு அல்லது ஆக்கிரமித்துக் கொள்வதற்கு தடைகள் ஏற்பட்டு விடுமோ என்ற பயத்தினால் தான் அவர்கள் இதனை எதிர்த்துக் கொண்டிருக்கின்றார்களோ என்று தான் நான் கருதுகின்றேன்.

உண்மையிலையே சிறுபான்மையாகிய முஸ்லிம் மற்றும் தமிழ் மக்கள் இடையே பரஸ்பர புரிந்துணர்வு வேண்டும். வெறுமனே நாங்கள் மாத்திரம் அந்தப் புரிந்துணர்விற்கான விட்டுக் கொடுப்புக்களைச் செய்து கொண்டிருக்க முடியாது. உதாரணத்திற்கு பார்த்தீர்களானால், கிழக்கில் முதலமைச்சராக முஸ்லிம் காங்கிரஸ் ஒரு வரை தேர்ந்தெடுப்பதற்கு நாங்கள் ஒத்துக் கொண்டோம் என்றார். (ம-3)

## குற்றவாளிகளை...

நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறுகையில்,

குருணாகல் மருத்துவர் சஹாப்டீன் சாபியை விடுதலை செய்வதற்காக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் முயற்சித்து வருகின்றனர். குற்றப் புலனாய்வுப் பிரிவின் சில அதிகாரிகள் இவ்வாறு செயற்பட்டு வருகின்றனர் என குற்றம் சுமத்தினார். (ம-3)













## தெரிவுக்குழுவின் இறுதி...

மன்றத் தெரிவுக்குழுவின் இறுதி அறிக்கையை தயாரிக்கும் பணிகள், அடுத்த மாதம் நிறைவுசெய்யப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. தெரிவுக்குழுவின் உறுப்பினர் ஒருவர் இத் தகவலை வெளியிட்டுள்ளார். அந்த இறுதி அறிக்கை சபாநாயகரிடம் கையளிக்கப்பட உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அதன் பின்னர், அந்த அறிக்கை தொடர்பான எதிர்கால செயற்பாடு குறித்து தீர்மானிக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-3)

## ஜனாதிபதி முன்னிலை...

முன்னிலையாக வேண்டும் என்று தெரிவுக்குழு உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளருமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

மேலும், தெரிவுக்குழுவில் முன்னிலையாக ஜனாதிபதி தவறுவாராயின், அவரது பதவிக்காலம் நிறைவடைந்ததும் அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய முடியும் என்றும் அவர் கூறினார்.

தெரிவுக்குழுவுக்கு ஜனாதிபதியை அழைப்பது தொடர்பில் வழங்கிய நேர்காணலில் அவர் இதனைக் கூறினார்.

இங்கு மேலும் தெரிவித்த அவர், "ஈஸ்டர் தாக்குதல்கள் குறித்து ஆராயும் தெரிவுக்குழுவில் சாட்சியம் வழங்குவதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகியோரை அழைப்பது தொடர்பாக கலந்துரையாடப்பட்டுள்ளது. தெரிவுக்குழுவில் சாட்சியம் வழங்குவதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இணக்கம் தெரிவித்துள்ளார்.

மேலும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறித்து தெரிவுக்குழுவில் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இவ்வாறான நிலையில் அதனை தெளிவுபடுத்துவதற்கு ஜனாதிபதிக்கும் ஒரு சந்தர்ப்பம் வழங்க வேண்டுமென எண்ணுகிறேன்.

அதற்கமைய பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் சாட்சியம் வழங்குவதற்காக ஜனாதிபதியை அழைத்தால், அவர் நிச்சயமாக முன்னிலையாக வேண்டும் என மேலும் தெரிவித்தார். (ம-3)

## ரிஷாத்திடம் நேற்று...

நடத்தாமல் ஒத்தி வைப்பதாக தெரிவுக்குழு உறுப்பினர்கள் தெரிவித்தனர். அதன்படி எதிர்வரும் 28ம் திகதி 2.30 மணிக்கு அவரிடம் விசாரணை நடத்தப்படும் என்று தெரிவுக்குழு உறுப்பினர்கள் தெரிவித்தனர். 23


### பதவிக்கான தேடல்

வட மாகாணத்தில் பல வருடங்களாக இயங்கிக் கொண்டிருக்கும் சர்வதேச நிறுவனத்திற்கு பல்வேறுபட்ட பதவி வெற்றிடங்கள் உள்ளன. தாங்கள் O/L, A/L தகைமை இருப்பின் விண்ணப்பிக்கலாம்.

- குறுகிய காலத்தில் பதவி உயர்வு.
- தகைமைக்கேற்ப ஊதியம் வழங்கப்படும்.
- வெளிநாடு செல்லும் வாய்ப்பு
- வயதெல்லை 18 - 30

தொடர்புகளுக்கு : 076 459 7725 (9396)

### CERTIFICATE IN HOTEL AND RESORT MANAGEMENT



July 2019 க்கான புதிய பிரிவு ஆரம்பம்

G.C.E O/L உடன்

TUITION FEE 30,000/- ONLY

CTHI CANADIAN TOURISM & HOSPITALITY INSTITUTE 1544, KKS ROAD, KONDAVIL, JAFFNA

0771041923 | 0213146171 (C-6789)

### ஓம் ஸ்ரீ சிவபார்வதி ஜோதிட நிலையம்
ஓலைச்சுவடிகள் மூலம் காண்டம் வாசிக்கப்படும்

இருபாலை சந்திக்கு அண்மையில் (கிழக்கு வீதி)

திருமணத்தடை, புத்திரபாக்கியம் / புத்திரபாக்கியதடை, தொழில் வியா பாரம் தடைகள், வெளிநாட்டு பயணத்துக்கான பரிகாரம், முற்பிறப்புதோஷங்கள் விலகல் போன்றவற்றுக்கான பரிகாரங்கள், வவுனியா பண்டாரிக் குளத்திலும்... (புதன், வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு - யாழ்ப்பாணம்) (திங்கள், செவ்வாய் - வவுனியா)

தொடர்புகளுக்கும் முன்பதிவுகளுக்கும்:- 076 328 7119 (C-6787)

### சாவகச்சேரியில்...

வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை.
UK - 525.00, Germany - 675.00, France - 830.00
நிபந்தனைகள் எதுவும் இல்லை
அருள் இல.1. NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576 (C-6615)

### CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை



உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.

CNR World Wide Express இல.101, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம். தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062, 077 6655413 (C-6784)

### காணி விற்பனைக்கு

பருத்தித்துறை 1ஆம் கட்டை சந்தி பிரதான வீதி மேற்குப்புறம் 3 பரப்புடைய 2ஆவது துண்டுக் காணி விற்பனைக்கு உண்டு.
(நான்கு பக்கமும் சுற்றுமதிலுடன் உண்டு)
தொடர்புகளுக்கு : 021 226 0351 (9374)

### காண்டம் பார்த்தல்

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் துல்லியமாக கணித்துத் தருகின்றோம்.
தொடர்பு: 076 835 1932, 021 223 2222 (உரும்பிராய்)

### பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு



விமானப் பயணச்சீட்டுக்கள் விரைவுப் பொதிகள் சேவை விசா சேவைகள் V2 TRAVELS
16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 0768226243 v2vacancies@gmail.com (C-6728)

### வேலைவாய்ப்பு

எமது நிறுவனத்திற்கு பியோன் (கல்வித்தகைமை தேவையில்லை), கணக்கியல் பயிலுநர் (A/L தகைமை)
தொடர்பு : 076 554 1472 (9394)

### விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு



UK- 550 /-Kg
கனடா-900 /-Kg
ஜேர்மனி-700 /-Kg
நெதர்லாந்து-700 /-Kg
DELIVERY IN 3-5 DAYS
0768226240 V2 TRAVELS (C-6532)
மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

### ஷாம்சன் ஆசிரியரின் இலவச ஆங்கிலம்

தொழில் புரிவோர், இளைஞர் யுவதிகள் 13 வயதிற்குமேற்பட்ட எவரும் இணையமுடியும்
சர்வதேச அங்கீகாரத்துடனான பிரித்தானிய நிறுவனத்தின் டிப்ளோமா சான்றிதழுடனான 3 மாத ஆங்கிலக்கற்கைநெறி
சனி ஞாயிறு பிரிவுகள் 29.06.2019
1.காலை 10.00 2.மதியம் 12.00 3.பி.ப 02.00
செவ் & வியாழன் பிரிவுகள்
1.காலை 08.030 2.காலை 10.30
முன்பதிவு செய்தல் அவசியம் ஒரு பிரிவில் 20 பேர்
Modules கட்டணமாக ரூ1000 மட்டும் செலுத்துதல் வேண்டும்
SAMSON Experts in English Training 403, வெலிங்டன் சந்தி, பெருமாள் கோவிலடி, யாழ்நகர் 077 621 4567 021 222 4282 (C-6788)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603 021 567 1532

### துரித தபால்கள் பொதிகள் சேவை

11 Kg மேற்பட்ட பொதிகளுக்கு UK - 600/= Germaney - 700/= France - 700/=
திருமுருகன் கொம்நெற் 321, K.K.S.Road, Jaffna.
கிளை : திருநெல்வேலி, நெல்லியடி. 0777 554 528 (9192)

### வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்
ராஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில் வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.
தொடர்பு: ராஜ் - 077 679 6623 (9369)

### SB Travels and Tours pvt. Ltd
இல.212, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

சகல நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்களை மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
இந்திய வீசா விண்ணப்பப்படிவம் 100/= ற்கு நிரப்பித்தரப்படும் மற்றும் நம் நிறுவனத்தின் ஊடாகவும் இந்தியா வீசாவினைப் பெற்றுக்கொள்ளலாம்.
சென்னைக்கு இருவழி ரூபாய் 24,000/= இருந்து பெற்றுக் கொள்ளலாம். Schengen வீசா விண்ணப்பப்படிவம் நிரப்பித்தரப்படும்.
தொடர்புகளுக்கு - 021 222 9555, 021 222 8555, கொழும்பு 15 - 011 254 0111, கொழும்பு 06 - 011 236 1711 (C-6783)

### வேலைவாய்ப்பு

வேலை தேடும் ஆர்வம் உள்ளவர்களா?
உங்கள் தகமை O/L, A/L, Degree எதுவாயினும் உங்கள் தகமைக்கும் திறமைக்கும் உரிய வேலை வாய்ப்பினை (EDM Company) இங்கு பெற்றுக்கொள்ள முடியும்.
இங்கு தொழில் தகமைக்கான பயிற்சிகள் வழங்கப்படுவதோடு ஊதியத்தினையும் பெற்றுக்கொள்ளமுடியும்.
பதவிக்கான கிளைகள் (கிளிநொச்சி, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, திருகோணமலை)
(நேர்முகத்தேர்வு யாழ்ப்பாணத்தில் நடைபெறும்)
மேலதிக விபரங்களுக்கு - 077 695 3242, 077 171 7278, 076 939 3965 (9393)

### Techno World
தொழில்நுட்பப் பிரிவு
A/L 2021 ஆரம்பம்

- பொறியியல் தொழில்நுட்பவியல்
- உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல்
- தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்
- ICT, இலகு கணிதம், விவசாய விஞ்ஞானம், புவியியல், சித்திரம்

A/L 2020, மாணவர்களுக்கான தனிப்பாட அனுமதிகள் வழங்கப்படுகிறது.
29.06.2019 சனிக்கிழமை காலை 8.30
077 017 5346, 077 170 3549 வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்

### பழைய இரும்பு பகிரங்க ஏல விற்பனை

எமது முல்/புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்கத்தில் 250 kg வரையிலான பழைய இரும்பு எதிர்வரும் 2019.07.05 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு சங்கத் தலைமைப் பணிமனையில் வைத்து பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

அவ் இரும்பை ஏலவிற்பனை மூலம் பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் அலுவலக வேலை நாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை பார்வையிடலாம். ஏலத்தில் பெறுபவர்கள் 3 நாட்களுக்குள் பணம் முழுவதையும் செலுத்தி அப்புறப்படுத்த வேண்டும். மேலும் விபரங்களுக்கு சங்க அலுவலகத்துடன் தொடர்புகொள்ளவும்.

தலைவர் / பொதுமுகாமையாளர்,
முல் / புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்கம்,
இரணைப்பாலை வீதி, புதுக்குடியிருப்பு. (C-6786)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.06.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.